3. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்காணும் அறிக்கையை குழுவின் தலைவராகிய நான் இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.

"1962–63 முதல் 1970–71 ஆம் ஆண்டுகள் வரையிலான தமிழ்நாடு மின் வாரியத்தின் கண்க்குகள் குறித்த தணிக்கை அறிக்கையின்மீது பொது நிறுவனங்கள் குழுவின் (1982–83) இருபத்து நான்காவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள்மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் முப்பத்தி மூன்றாவது அறிக்கை."

1. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) விதி 33–ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 33-ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

4. அரசினர் தனித் தீர்மானம்.

இணையத்து ஆட்சி மொழியாக ஆங்கிலம் மட்டுமே தொடர அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துதல்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெயரால் கொடுக்கப்பட்டிருக்கும் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"டாக்டர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தபோது, தமிழும் மற்ற தேசிய மொழிகளும் இணையத்தின் (Union) ஆட்சிமொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும் அதன்படியே அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்றும் இதை எய்தும் வரையில், ஆங்கிலம் மட்டுமே ஆட்சி மொழியாகத் தொடர்ந்து இருந்து வருதல் வேண்டும் என்றும் ஆட்சி மொழி பற்றி அரசமைப்புச் சட்டத்தில் உள்ள அத்தியாயத்தை தக்கவாறு திருத்தவேண்டும் என்றும் இந்த மன்றம் 1968 சனவரித் திங்கள் 23-ம் நாள் தீர்மானம் நிறைவேற்றியது.

1986 நவம்பர் 13] *[திரு. சி. பொன்னையன்]*

தற்போதைய முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி. இராமச்சந்தின் அவர்கள், காலஞ்சென்ற டாக்டர் அண்ணா அவர்களால் தெளிவுற உரைக்கப்பட்ட இருமொழிக் கொள்கையைச் செயற் படுத்துவதுதான் இந்த அரசின் உறுதியான கொள்கை என்றும், இந்தக் கொள்கை தமிழ்நாட்டு மக்களின் விருப்பங்களை முழுமை யாக எடுத்துரைப்பதோடு, அவற்றை முழுமையாகப் பிரதி பலித்து நிற்கின்றது என்றும் ஆளுநரின் உரை வாயிலாக, 1977 சூலைத் திங்கள் 7-ம் நாள் திட்ட வட்டமாகத் தெரிவித்தார்.

மேலும், சர்க்காரியா கமிஷனுக்கு 1985 டிசம்பர் திங்களில் இந்த அரசு அளித்த அறிக்கையில், ஆங்கிலத்தை அரசமைப்பின் எட்டாவது இணைப்புப் பட்டியலில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும், எட்டாவது இணைப்புப் பட்டியலில் உள்ள எல்லா மொழிகளுமே இணையத்தின் (Union) ஆட்சிமொழிகளாக விளம் பப்படவேண்டும் என்றும் அத்தகைய முடிவொன்று எடுக்கப்படும் வரையிலும், ஆங்கிலமே இணையத்தின் ஆட்சிமொழியாகத் தொடர்ந்து பயன்படுத்திவர வேண்டும் என்றும் இந்த அரசு கருத்து தெரிவித்துள்ளது.

அவ்வப்போது, இந்தி பேசாத மக்கள் மீது நேரடியாகவோ மறைமுகமாகவோ, இந்தியைத் திணிப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவது இந்தி பேசாத மக்களுக்குப் பெருங் கவலையை ஏற்படுத்தி வருகின்றது. பொதுவாக இந்தி பேசாத மக்களும் குறிப்பாக தமிழ்நாட்டு மக்களும், காலஞ்சென்ற பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களால் தரப்பட்டு, காலஞ் சென்ற திருமதி இந்திரா காந்தி அவர்களாலும் தற்போதைய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களாலும் மீண்டும் உறுதிப் படுத்தப்பட்டுள்ளதுமான உறுதிமொழியானது, அதாவது இந்தி பேசாத மக்கள் மாற்றமொன்றை விரும்பாத வரையிலும் ஆங்கிலமே இணையத்தின் ஆட்சி மொழியாகத் தொடர்ந்து இருந்து வரும் என்கின்ற உறுதிமொழியை அரசமைப்புச் சட்டத் தில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் மீண்டும், மீண்டும் வற்புறுத்தி வந்திருக்கின்றனர், மையச் சட்டம் எண். 1/1968-இனால் திருத்தப்பட்ட ஆட்சிமொழிகள் சட்டத்தின் வகைமுறை கள் வெறும் சட்டரீதியான தன்மை வாய்ந்தவை என்பதால், நாடாளு மன்றத்தில் சாதாரண பெரும்பான்மையினால் நிறை வேற்றப்படும் ஒரு சட்டத்தினால் மட்டுமே கூட, இந்த வகைமுறை களை எந்தச் சமயத்திலும் மாற்றியமைத்துக்கொள்ள முடியும் அல்லது நீத்தறவு (ரத்து) செய்துவிட முடியும்; எனவே காலஞ் சென்ற பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களால் அளிக்கப்பட்டு, காலஞ்சென்ற திருமதி இந்திரா காந்தி அவர்களாலும், தற் போதைய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களாலும் உறுதிப் படுத்தப்பட்டுள்ள உறுதிமொழிக்கு அரசமைப்பு ரீதியான ஓர் அங்கீகாரத்தை அளிப்பதன் மூலமாக, ஆங்கில மொழியைத் தொடர்ந்து பயன்படுத்துவதற்குப் பெரிய அளவில் பாதுகாப்பினை உறுதிப்படுத்திக்கொள்வது தேவையானதாக இருக்கிறது.

[திரு. சி. பொன்னையன்] [1986 நவம்பர் 13

அத்தகைய ஓர் அரசமைப்புச் சட்டத் திருத்தம்தான், இந்தி பேசாத மக்களின் மனத்தில் எழுந்துள்ள உண்மையான அச்ச உணர்வுகளையும் கவலைகளையும் நீக்குவதோடு, இந்தித் திணிப்பின் காரணமாக அவ்வப்போது எழுகின்ற குழப்பம், சீர்குலைவு மற்றும் கடுமையான சட்டம்-ஒழுங்கு சூழ்நிலைகள் ஆகியவற்றையும் தவிர்க்கும்.

அரசமைப்புச் சட்டத்தின் எட்டாவது இணைப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளவையும் சேர்க்கக் கருதப்பட்டுள்ளவையுமான எல்லா மொழிகளையுமே இணையத்தின் ஆட்சிமொழிகளாக அங்கீகரிக்கும் வரை ஆங்கில மொழியை மட்டுமே இணையத்து ஆட்சிமொழியாகத் தொடர்ந்து பயன்படுத்திவருவது பற்றி அரசமைப்பு ரீதியான உத்தரவாதம் கொடுப்பதற்காக, ஆட்சி மொழித் தொடர்பான அரசமைப்புச் சட்டம் XVII-ம் பகுதியை, உடனடியாகவும், அவசியமாகவும் திருத்தி அமைத்தல் வேண்டும் என்று இந்த மன்றம் தீர்மானிக்கிறது.''

பேரவைத் தலைவர் அவர்களே, இத்தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுகிறேன்.

திரு. பொன் முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள தனித் தீர்மானத்திற்கு நான் கீழ்க் கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

'' பத்தி 5-ல் உள்ள 'அமைத்தல்' என்ற சொல்லை நீக்கி விட்டு அந்த இடத்தில் ''அமைத்திட மத்திய அரசு முன்வர'' என்ற சொற்றொடர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.''

திருத்தம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பாக மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்களால் மொழியப்பட்ட அரசினர் தனித்தீர்மானமும், மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்களால் மொழியப்பட்டுள்ள திருத்தமும் அவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன.

*திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களுடைய தீர்மானமாக அரசு தீர்மானம் அவையின் முன்னால் இப்போது கல்வி அமைச்சர் அவர்கள் மூலம் வைக்கப் பெற்றிருக்கிறது. இந்தத் தீர்மானத்தின்மீது காந்தி—காமராஜ் தேசீயக் காங்கிரசினுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன். டாக்டர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இருந்தபொழுது, இந்தப் பேரவை ஏற்படுத்தித் தந்த ஒரு தீர்மானத்தை மீண்டும் வலியுறுத்துகிற தீர்மானமாக மட்டுமல்லாது, தற்போது இந்தியப் பெருநாட்டின் சில பகுதிகளிலே எழுந்திருக்கின்ற உணர்ச்சிகளையும் பிரதிபலிக்கின்ற.

1986 நவம்பர் 13] [திரு. குமரி அனந்தன்]

அந்த உணர்ச்சிகள் கட்டுக்கடங்காமல் போகாமல் இருக்க வேண்டும் என்று சொன்னால் செய்ய வேண்டுவது என்ன எஎப தனையும் இந்தத் தீர்மானம் குறிக்கின்ற வகையில் வாசகங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன.

(முற்பகல் 9-10)

மத்தியப் பேரரசு தனது செயலால் தமிழைத் தாய்மொழி யாகக் கொண்டவர்கள் சஞ்சலப்படுகின்ற வகையிலும், சங்கடப் படுகின்ற வகையிலும் சில நேரங்களில் அறிவிப்புகளை வெளி யிடுவதும், சுற்றறிக்கைகளை அனுப்புவதும் எந்தெந்த வகை களிலே நமது உள்ளங்களிலே புயலை எழுப்பி விட்டிருக்கிறது என்பதை உணர்ந்து, அதற்கு அணை போடுவது மட்டுமல்லாது அது என்றும் வீசாது இருக்கின்ற வண்ணம் செயல்படுவதற்கு வழி காணுகிற ஒரு தீர்மானமாகவும் இந்தத் தீர்மானம் இங்கே இருக்கிறது. இந்தத் தீர்மானத்திலே வந்திருக்கின்ற சில வாச கங்கள் ஏற்கனவே பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தலை மையிலே அரசு அமைந்தபோது ஏற்படுத்திக் கொடுத்திருக்கிற சில நல்ல திட்டங்களை வலியுறுத்துவதாக அமைந்திருக்கின்றன.

மத்திய அரசு பாராளுமன்றத்திலே கொண்டுவந்து நிறை வேற்றிய மசோதாவாக இருக்கட்டும், தீர்மானமாக இருக்கட்டும், அதைத் தொடர்ந்து 1968-லே நிறைவேற்றிய சட்டமாக இருக்கட்டும், இவைகளில் எல்லாம் இருப்பவைகள் கடைப்பிடிக் கப்படுகின்றனவா ? அப்படி கடைப்பிடிக்கப்பட்டிருந்தால் இன்று எழுந்துள்ள கொந்தளிப்பு நிலை எழுந்திருக்குமா என்பதை நாம் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். ஏனென்றால், இது ஒரு மசோதாவாகவும், தீர்மானமாகவும் இணைந்து, 1967 டிசம்பர் மாதம் பாராளுமன்றத்திலே வருகிறபோது,

" This House resolves that a programme shall be prepared and impleimented by the Government of India in collaboration with the State Governments for the co-ordinated develcpment of all these languages . . " என்ற முறையிலே சொண்டுவரப்பட்டிருக்கிறது. 'all hese languages' என்று சொன்னால், எட்டாவது இணைப்பில் கொடுக்கப்பட்டிருக்கின்ற அனைத்து மொழிகளும்—" . . . . alongside Hindi so that they grow rapidly in richness and become effective means of communication . . . . . " என்று இருக்கிறது.

இந்தி மட்டுமல்லாது, இந்திய நாட்டில் இருக்கின்ற முக்கிய மொழிகள் அனைத்துமே, 8-வது ஷெடியூலிலே சொல்லப்பட்டிருக் கின்ற அனைத்து மொழிகளுமே வளமானதாக வளர்வதற்குரிய வழிவகைகளைக் காண்பதற்கு மத்திய அரசு மாநில அரசுகளோடு சேர்ந்து திட்டமிட்டு செயல்படவேண்டும், இவைகளை வளர்ப் பதற்குரிய வழிவகைகளைக் காணவேண்டும் என்று குறிப்பாகவும் தெளிவாகவும் அங்கே பதிக்கப் பெற்றிருக்கின்ற நேரத்தில், பதிக்கப்பெற்ற கருத்துக்கள் மதிக்கப்பெற்றனவா என்று நாம்

[திரு. குமரி அனந்தன்] [1986 நவம்பர் 13

சிந்தித்துப் பார்த்தால், அது மதிக்கப்பெறாத காரணத்தினாலே தான், அங்கே எழுத்திலே சில நல்ல எண்ணங்கள் எழுந்து இருந்த நேரத்திலும், அவைகளை எடுத்துச் செய்வதிலே, அவைகள் நிறைவேற்றப்படாத காரணத்தினால் இன்று மொழிப் பிரச்சினை பூதாகாரமாக உருவெடுத்திருக்கிறது.

மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்தோடு, அந்த மாநிலத்தினுடைய ஆட்சிமொழியை வளர்ப்பதற்குரிய வழிவகைகளைக் காணவேண்டும். என்ன செய்வது? வாருங்கள், அமருங்கள் பேசுங்கள் என்று சொல்லி திட்டங்களை வகுத்துத் தந்திருந்தால் அந்தத் திட்டங்களின் அடிப்படையில் அவரவர்களுடைய தாய்மொழி வளர்ந்திருக்குமேயானால், இன்று இவ்வளவு பெரிய அளவில் மொழிப் பிரச்சினை உருவாகி இருக்காது என்பது தான் என்னைப் போன்றவர்களுடைய எண்ணம்.

இந்தியை மொழி என்ற வகையிலே யாரும் எதிர்க்கவில்லை. இதிலே கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்திலே கூட, மொழி என்ற வகையிலே அது எதிர்க்கப்படவில்லை. அது திணிப்பு என்ற வகையிலே எதிர்க்கப்படுகிறது என்பதுதான் இங்கே உய்த்து உணரத் தகுந்தது மட்டுமல்ல: உலகத்திற்கே உரைக்கத் தகுந்ததாகவும் இருக்கிறது.

ஆக, மாநிலங்களில் பேசப்படுகின்ற மொழிகள்கூட, அவை முக்கிய மொழிகள் என்பது மட்டுமல்ல, அவைகளும் தேசிய மொழிகள்தான் என்பதை மறந்துவிடவே கூடாது. சிலர் பேசுகிற நேரத்தில் இந்தி மட்டுமே தேசிய மொழி என்று சொல்வதனை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தியாவில் இருக்கின்ற, அந்த 8 வது ஷெடியூலிலே இருக்கின்ற அத்தனை மொழிகளுமே தேசிய மொழிகள்தான். ஆட்சி மொழி என்று சொல்கிற 'அஃபிஷியல் லாங்குவேஜ்' என்று சொல்கிற ஒரு அந்தஸ்தை மட்டும்தான் அதற்கு கொடுக்க விரும்பி அரசியல் அமைப்புச் சட்ட விதிகளிலே சில கருத்துக்கள் சொல்லப்பட்டன. அதிலே கூட, இந்தியாவிலே இருக்கிற மக்கள் அத்தனை பேரையும் இணைத்து, அணைத்துக் கொண்டு செல்லவேண்டும் என்பதற்காகத்தான், பின்னாலே நேரு பெருமகன் கொடுத்த உறுதிமொழி, அதன் அடிப்படையிலே வந்த மசோதாவும், அதன் அடிப்படையிலே வந்த தீர்மானமும் அதன் அடிப்படையிலே 1968 (1) என்ற எண்ணிலே நிறைவேற்றப்பட்ட சட்டமும் பேசிக்கொண்டு இருக்கின்றன. அப்படிப் பார்க்கின்றபோது இது ஆட்சிமொழி என்று சொன்னாலும், 1965 ம் ஆண்டிலேயே முழுமையான உரிமைபெற்ற இந்திய தேசம் முழுதும் பயன்படுத்துகிற ஆட்சி மொழியாக இருக்கிற 'இந்தி' என்கிற வாசகத்தை மாற்றி, 'ஆங்கிலமும்' என்று மட்டுமல்ல—அதற்கு முன்னால் இருந்த நிலையை—அதாவது ஆங்கிலம் அதற்கு முன்னால் எந்த இடத்தைப் பெற்றிருந்ததோ அதைத் தொடர்ந்து பெற்றிருக்கவேண்டும். அதாவது ஆங்கிலம் அந்த நாளைக்கு முன்னால் எந்த இடத்தைப் பிடித்திருந்ததோ அதைத் தொடர்ந்து

1986 நவம்பர் 13] [திரு. குமரி அனந்தன்]

அது பெற்றிருக்கும்என்ற உரிமை கொடுக்கப்பட வேண்டும் என்று சொன்னால் அதுவரை ஆட்சிமொழியாக இருந்தது ஆங்கிலம் தான். ஆகவேதான் ஆங்கிலம் மட்டுமே என்கிற வாசகம் திருத்தப்பட்டதைக் கூட நான் மனதார வரவேற்கிறேன். ஏனென்றால் அதுதான் அந்தச் சட்டத்தைச் செய்தவர்கள் நோக்கமாக இருந்தது.

மத்தியில், தேசிய நெஞ்சங்களையெல்லாம் உள்ளடக்கிய பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமானாலும் சரி, சட்டமானாலும் சரி, அதை, உள்ளடக்கிய தீர்மானமாக அது இருந்த காரணத்தால் அந்தத் தீர்மானத்தின் வாசகத்தை நான் வரவேற்கிறேன். அந்த வாசகம் பின்பற்றப்பட வேண்டும் என்பதற்காகத்தான் மாண்புமிகு பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இங்கே இருமொழிக் கொள்கை என்று சட்டத்தை வகுத்தார்கள். அதைப்பற்றி நான் சில கருத்துக்களை இங்கே வைக்க விரும்புகிறேன்.

அந்த இருமொழிக் கொள்கையை வகுக்கிற நேரத்தில், ஏற்கெனவே மத்திய அரசில், ''மாநிலங்களின் ஆட்சிமொழியாக இருக்கிற பிற மொழிகளையும் வளர்க்க திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்'' என்றுசொல்லி அங்கே பதித்திருந்தபோது, அதை வகுக்காமல் இருந்தது, மதிக்காமல் இருந்தது, ஒரு தவறான காரியம் என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் எடுத்து வைத்த கருத்துக்கள் இரண்டு. அது வெறும் இருமொழிக் கொள்கை என்பதோடு நின்று விடவில்லை. ஐந்தாண்டு காலத்திற்குள் தமிழகத்தில் எல்லா துறைகளிலும் எல்லா அலுவல்களிலும் ஆட்சிமொழியாகத் தமிழே இருக்கும். தமிழகக் கொண்டு வந்தாக வேண்டும். அதைப் போலவே தமிழகத்தில் இருக்கிற அனைத்துப் பள்ளிக் கூடங்களிலும், அனைத்துக் கல்வி நிலையங்களிலும் தமிழே பயிற்சி மொழியாக இருக்கவேண்டும். ஐந்தாண்டுக் காலம் என்று அவர் சொல்லி இப்போது 18 ஆண்டு காலம் ஆகிறது என்பதை நான் இங்கே நினைவுக்குக் கொண்டு வர விரும்புகிறேன். மத்திய அரசு செய்யவில்லை என்று நாம் சொல்லுகிற நேரத்தில், கடந்த 18 ஆண்டுகளாக — நமது தாய் மொழியில்—நம் தாய்மொழியின் மீது துரசி தும்பு பட்டுவிட்டால் கூட அதற்காகத் துடித்துச் சிங்கமெனச் சிலிர்த்துக் கொண்டிருக்கிற இந்தப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட வாசகத்தை — நிறைவேற்றாமல் இருந்திருக்கிறோம்.

எனக்கிருக்கிற அச்சமெல்லாம் ''நாங்கள் செய்யவில்லை என்று நீங்கள் சொல்லுகிறீர்கள்.'' ''நீங்கள் என்ன செய்தீர்கள்'', என்று இன்னமும் சிலர் கேட்டுவிட்டக் கூடாதே என்ற ஒரு அச்சத்தின் காரணமாகத்தான் இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 5 ஆண்டுகளில் நிறைவேற்றப்படவேண்டிய ஒரு காரியத்தை இன்று வரை நிறைவேற்றாமல் இருக்கிறோம். மழலைப் பள்ளிகள் என்று உள்ள எல்.கே.ஜி. யு.கே.ஜி. என்றுள்ள பள்ளிகளில்

[திரு. குமரி அனந்தன்] [1986 நவம்பர் 13

முதற்கொண்டு ஆங்கிலத்தை நாம் மாற்றியமைக்க வேண்டும் ஆங்கிலத்தால்தான் எல்லாம் முடியும், தமிழால் முடியாது என்கிற எண்ணம் முன்பு மக்களிடையில் ஒரு சதவீதத்தினரிடம்தான் இருந்தது. இப்போது கிராமப்புறத்தில் இருக்கிற ஏழை எளிய மக்களிடம் முழுவதுமாக பரவியிருக்கிறது.

நான் படிக்கிற காலத்தில்கூட தமிழ்மொழியை பயிற்று மொழியாக கொண்டுதான் பத்தாவது வகுப்புவரை படித்தேன். இப்போது ஆங்கிலம் எப்படி அங்கே பயிற்சி மொழியாக வந்தது? எப்படி ஆங்கிலம் உள்ளே வந்தது என்று சிந்திக்க வேண்டாமா? ஆக, ஆங்கிலம் என்கிற மொழியும் சரி, இந்தி என்கிற மொழியும் —இங்கே இந்த வாசகத்தை அமைத்துத் தீர்மானமாகக் கொண்டு வருகிற டாக்டர் முதலமைச்சரானாலும் சரி, மற்றவர்களானாலும் சரி, மொழி என்கிற வகையில் நாம் பேதம் காட்டி எதிர்க்கவில்லை. ஆனால் அது திணிக்கப்படுகிறது என்கிற காரணத்தால் தான் எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் பேச ஆரம்பித்து 10 நிமிடங்களாகிவிட்டன.

திரு. குமரி அனந்தன்: எனவே கடந்த 18 ஆண்டுக் கால சரித்திரத்தை மட்டுமல்ல, பல ஆண்டுக்கான சரித்திரத்தையும் பற்றி தொடர்ந்து சில கருத்துக்களை குறிப்பிட விரும்புகிறேன்.

ஒரு ஐந்தாண்டுத் திட்டம் போட்டு அந்த திட்ட காலத்திற்குள் இதை நிறைவேற்றாமல் ஒரு தவறு செய்திருக்கிறோம் என்பதை நாம் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆக, இனிமேல் ஒரு காலத்தை நிர்ணயித்தால் அந்தக் காலத்திற்குள் அதை நிறைவேற்றுவதற்கான ஒரு உறுதிமொழியை எடுத்துக் கொள்வதோடு உரிய வகையில் அது நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்றும் பார்க்கவேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன். நான் இன்னும் ஒரு படி மேலே சென்று இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருகிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் மற்றவர்களையும் கேட்டுக் கொள்கிறேன். முடிந்தால் இதைச் சேர்த்துக் கொள்ளவேண்டும். முடிந்தால் என்கிற வாசகத்தைவிட நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன், தயவுசெய்து இதைச் சேர்த்துக்கொள்ளுங்கள்.

"மத்திய அரசாங்கம் எல்லாத் தாய்மொழிகளிலும்"—நாம் அதில் அப்படித்தான் சொல்லியிருக்கிறோம். பேறறிஞர் அண்ணா அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தில் அப்படித்தான் சொல்லப் பட்டிருக்கிறது. "எல்லாத் தாய்மொழிகளும் ஆட்சிமொழியாக வரும்வரை" என்று சொல்லியிருக்கிறார்கள் அல்லவா? அதற்கு பதிலாக "எல்லாத் தாய்மொழிகளும் இத்தனை ஆண்டுகளுக்குள் ஆட்சிமொழியா ஆக வேண்டும்," என்று சொல்லி அதற்கு ஒரு காலத்தை காலக்கெடுவை நிர்ணயிக்கும்படி டைம் பவுண்டு புரொகிராம் வேண்டும் என்கிற வகையில் "இத்தனை ஆண்டு காலத்திற்குள் என்று மத்திய அரசுக்குச் சொல்லவேண்டும்.

1986 நவம்பர் 13] [திரு. குமரி அனந்தன்]

இத்தனை ஆண்டுக் காலத்திற்குள் என்று மத்திய அரசுக்குச் சொல்லுங்கள். இத்தனை ஆண்டுக் காலத்திற்குள் தமிழகத்திலே மழலைப் பள்ளியிலிருந்து, மாதிரிப் பள்ளியிலிருந்து பல்கலைக் கழகம்வரை, ஆட்சி மொழியிலிருந்து நீதிமன்ற மொழி வரை, ஏன் வழிகாட்டி மொழி வரை தமிழ்தான் கொண்டுவரவேண்டும் என்று நாமும் சொல்வோம். நாமும், மத்திய அரசும் இரண்டு பேரும் சேர்ந்து சொல்லும், வாக்குறுதி சொல்லும் தீர்மானமாக இறுதி வடிவம் பெறுமானால் அது உரிமையிலேயே தமிழகத் திற்கு மட்டுமல்லாமல் இந்தியாவிற்கே வழிகாட்டுதலாக, இந்திய ஒருமைப்பாட்டுக்கு வழிகாட்டுதலாக அமையும். மொழியைப் பொறுத்தவரையில் பள்ளிக்கூடத்திலேயிருந்து கல்லூரி வரையில் தமிழை பயிற்சி மொழியாக வையுங்கள் வேறு மொழி களை வேண்டுமானால் டைப்ரைட்டிங் இன்ஸ்டியூட் போன்ற இடங்களில் சொல்லிக் கொடுக்க வழிவகை செய்யுங்கள். எந்த நாட்டு மொழியாக இருந்தாலும் சரி, அது இந்தியாக இருந்தாலும் சரி, ஆங்கிலமாக இருந்தாலும் சரி, ஜெர்மன் மொழியாக இருந்தாலும் சரி, பிரெஞ்சாக இருந்தாலும் சரி, அதற்காக தனியாக பள்ளிக்கூடம் வைக்கலாம்.

(முற்பகல் 9—20)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடித்துவிடுங்கள்.

திரு. குமரி அனந்தன் : படிப்பை முடித்துவிடக் கூடாது, படிப்பு தொடர்ந்து போக வேண்டும். படிப்பு பாழாகக்கூடாது என்பதற்காக மீண்டும் சொல்கிறேன். மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்து ஒரு காலக் கெடுவை வையுங்கள். மாநில அரசாங்கமும்(நாமும் அந்தக் காலக் கெடுவுக்குள், ''எங்களுடைய தாய்மொழியான தமிழ் மொழியை பயிற்சி மொழியாக எல்லா இடங்களிலும் வைப்போம்'' என்று சொல்லி அந்த திருத்தத் தோடு மீண்டும் நமது அரசின் சார்பிலே அதனை உறுதிப் படுத்திக்கொண்டு வந்தால் மிக்க மகிழ்ச்சியடைவேன் என்று சொல்லி அமைகிறேன். வணக்கம்.

*திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத் துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிந் துள்ள இந்த தனித் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக பொதுவாக வரவேற்று நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இந்திய நாடு சுதந்திரம் பெற்று அதிகாரத் திற்கு வந்தவுடனே மொழிப் பிரச்சினையை வேகமாகத் தீர்த்து வைத்திருந்தால் இந்தியாவில் மொழிப் பிரச்சினையே ஒரு பிரதான பிரச்சினையாகி கல்வியின் தரம் தாழ்ந்து போகக்கூடிய நிலைக்கு வந்திருக்காது. இந்த மொழிக் கொள்கை மத்திய அரசாங்கத்தால் கட்டவிழ்த்துவிடப்படுகிறது. அதற்குக் காரணம் 1955 ஆம் ஆண்டு மும்மொழிக் கொள்கை என்பது கொள்கை யளவில் பாராளுமன்றத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டு அதை படிப் படியாக மத்திய அரசு எல்லா மாநிலங்களிலும் அமுல்படுத்த

முனைந்திருப்பார்களேயானால் தமிழகத்திலே விட்டுவிட்டு மொழிக்கொள்கை பிரச்சினை உருவாக வாய்ப்பாக அமைந் திருக்காது. ஆனால் மத்திய அரசினர் கொள்கையளவிலே கொண்டுவந்து இந்தி பேசக்கூடிய மாநிலங்களில் இந்தத் திட்டத்தை விசுவாசத்தோடு நிறைவேற்றி இருந்தால் மத்திய சர்க்கார் கடைபிடித்த தவறான கொள்கையால் இன்றைக்கு தமிழகத்திற்கு இந்த மொழிக்கொள்கை என்பது பெரும் சுமையாக நம்மை எதிர்நோக்கியிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பாரதப் பிரதமர் பண்டித நேரு அவர்கள், இந்த மொழிக் கொள்கையைப் பொறுத்த வரையில், இந்தி பேசாத மக்கள் என்றைக்கு ஏற்றுக்கொள்கிறார்களோ அது வரையில் அந்தந்த மாநிலங்களில் அந்தந்த மாநில மொழியைத் தவிர இந்தியைத் திணிக்க மாட்டோம் என்ற வாக்குறுதியைக் கொடுத்தார்கள். அந்த வாக்குறுதியை அதற்குப் பிறகு வந்த பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களும் கடைப்பிடித்தார்கள். இன்றைய பிரதமரும் அதைக் கடைபிடித்து வருகிறார்கள்.

ஆனால் மத்திய அரசினர் ஒவ்வொரு தடவையும் இந்தி திணிப்பை மறைமுகமாக மத்திய அரசு அலுவலங்களில் புகுத்து வதன் மூலமாகத்தான் தமிழகத்திலே ஒவ்வொரு ஆண்டும் அல்லது இடையிடையே மொழிப் பிரச்சினை உருவெடுத்து வருகிறது. தமிழகத்திலே தமிழ்க் கல்வியைப் பிரதானமாக ஏற்றுக்கொண்டிருக்கக் கூடிய தமிழ் மாணவ மாணவியர் களிடையே இந்த இந்தி உருவெடுக்கிறபோது, இந்தி திணிப்பு என்ற பெயரால் பிரச்சாரம் உருவாகும்போது, அவர்கள் பல மாதக்கணக்கில் படிக்காத அவலநிலை தொடர்ந்து அவர் களுடைய கல்வி பாழாகிவிடுகிறது. இதைத் தடுத்து நிறுத்த வேண்டும். இந்த அடிப்படையில்தான் இன்றைக்கு நமது மாநில அரசு கொண்டு வந்திருக்கக்கூடிய மொழிக் கொள்கை திட்டத்தை அரசியல் சட்டத்தில் இடம்பெற வைக்க, வாக்குறுதி என்று மட்டும் அல்லாமல், சட்டப்பூர்வமாக இதற்கு ஒரு உத்திரவாதம் கிடைக்க வேண்டுமென்ற இந்தத் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வரவேற்கக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அதே நேரத்தில், இன்றைக்கு மத்திய அரசு இந்த மொழிக் கொள்கையை சட்டப்பூர்வமாக ஏற்றுக்கொண்டால், இன்றைக்கு இந்தியா முழுமையும் இருக்கக்கூடிய அனைத்து மொழிகளிலும் அவர் அவர்கள் மாநிலத்திற்கு ஏற்ப ஆட்சிமொழியைக் கொண்டு வருவதற்கு வசதியாக இருக்கும். எனவே, மேலும் காலங் கடத்தாமல், மத்திய சர்க்கார் இந்த மொழிப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும். இந்த மொழிப் பிரச்சினையைத் தீர்க்காததினால் இன்றைக்கு இந்தியா முழுமையிலும் இந்த மொழிப் பிரச் சினையைப் பயன்படுத்தி ஜாதிக் கலவரங்கள், இனக் கலவரங்கள்

1986 நவம்பர் 13] [திரு. பொ. உத்திராபதி]

உருவாகிறவகையில் இன்றைக்கு மாநிலத்திற்கு மாநிலம் வேறு பட்ட உணர்வுகளை உண்டாக்குகிறார்கள். இப்போர்ப்பட்ட தன்மையை உருவாக்கக் கூடியவர்களுக்கு இந்த மொழிக் கொள்கை உருவெடுத்ததன் மூலமாக இந்திய ஒற்றுமைக்கு குந்தகம் விளைகிறது. மாநிலங்களில் பொருளாதார்க் கொள்கை யையும், கல்விக் கொள்கையையும் உருவாக்குவதிலேகூட இடைக்கால தடங்கல் ஏற்படுகிறது. எனவே, மத்திய சர்க்கார் கடைப்பிடித்துவரும் தற்போதைய மொழிக் கொள்கையை கைவிட்டு, நமது மாநில சர்க்கார் நிறைவேற்றக்கூடிய தீர்மானத்தை மத்திய அரசு காலங்கடத்தாமல் ஏற்றுக்கொண்டு இந்தியாவின் ஒற்றுமைக்கும், கலாசாரத்திற்கும், அனைத்து மொழிகளும் ஆட்சி மொழிகளாக வருவதற்கும் மத்திய சர்க்கார் துரிதமான நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக இந்தத் தனித் தீர்மானத்தை ஆதரித்து அமர்கிறேன்.

*திரு. கே. முத்துவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இந்த அவையில் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்தி பேசாத மக்கள் விரும்பும்வரை, இந்தியைக் கொண்டு வரமாட்டோம் என்ற ஒரு சட்டத்தை பாராளுமன்றத்தில் இயற்ற வேண்டு மென்று கொண்டுவந்துள்ள தீர்மானத்தின்மீது நான் சார்ந்திருக் கின்ற அகில இந்திய பார்வேர்ட் பிளாக் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

இந்தி பேசாத மக்கள் நம்முடைய இந்தியத் திருநாட்டில் பாதிக்கு மேல் இருக்கிறார்கள். இந்தியைப் படிக்கவேண்டும், இந்தியைப் புகுத்தவேண்டும் என்ற மத்திய அரசு முதலில் முடிவெடுத்து, அதற்குப் பிறகு நேரு அவர்கள் இந்தி பேசாத மக்கள் விரும்பும்வரை இந்தியைப் புகுத்த மாட்டோம் என்ற ஒரு உத்திரவாதத்தைக் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு பாரதப் பிரதமராக வந்த அன்னை இந்திரா காந்தியும், அதற்குப் பிறகு இப்போது பாரதப் பிரதமராக இருக்கிற ராஜீவ் காந்தியும் உத்திரவாதம் கொடுத்திருக்கிறார்கள். இருந் தாலும், அந்த உத்திரவாத்தின் மீது இந்தி பேசாத மக்கள் எல்லோருக்கும் நம்பிக்கை இல்லாத காரணத்தினால், வாக்குறுதியை சட்டபூர்வமாக ஆக்கவேண்டும் என்று நான் சார்ந்திருக்கின்ற கட்சியின் சார்பாக கூறிக் கொள்கிறேன்.

இந்தி படிப்பதை யாரும் தவறாக நினைக்காமல், விரும்பு கிறவர்கள் இந்தியைப் படித்துக் கொள்ளலாம், இந்தியைக் ஏற்காத மக்கள்மீது கட்டாயமாக புகுத்தக்கூடாது என்பது எங்கள் இயக்கத்தின் கொள்கை என்று கூறி அமை கிறேன். நன்றி, வணக்கம்.

[1986 நவம்பர் 13

*திரு. வை. பாலசந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணர்ச்சிப் பிழம்புகளாக இன்று மாறிப் போயிருக்கும் தமிழகத்து மக்களுடைய உள்ள உணர்வுகளையும் மத்திய அரசு அரசியல் சட்டத் திருத்தம் கொண்டுவந்து நிறைவேற்றி தமிழ்நாட்டு மக்களின் மொழி உரிமை மற்றும் மொழி உணர்வு இவைகளை பாதுகாக்க வேண்டுமென்ற கோரிக்கையை, ஒரு தீர்மானமான வடிவில் வேண்டுகோளாக இந்தப் பேரவையில் வைக்கின்ற வகையில் ஒரு வரலாற்று சிறப்புவாய்ந்த தீர்மானத்தை தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தை நான் சார்ந்திருக்கும் இந்து முன்னணி பேரியக்கத்தின் சார்பாக வரவேற்கிறேன் தமிழக முதல்வர் அவர்கள் இந்தத் தீர்மானத்தின் மூலமாக வெளிச்சம் போட்டு வெளிக்காட்டியிருக்கும் அவர்களுடைய மொழி உணர்வை மொழிக் கொள்கையை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறேன்.

இந்தியை மீண்டும் வேண்டுமென்றே திணிக்கின்றபோது, அதை தமிழக அரசு தடுத்து நிறுத்தவில்லை, மௌனமாக இருக்கிறது, மூலையில் முடங்கி கிடக்கிறது என்ற ஒரு பொய்த் தோற்றத்தை உருவாக்குவதற்கு தமிழகத்தில் செய்யப்பட்ட முயற்சிகள் இந்தத் தீர்மானத்தின் மூலமாக பொய்யாக்கப்பட்டிருக்கின்றது. இந்தி திணிக்கப்படுகின்றபோது, அது எல்லாத் தரப்பு மக்களாலும் எதிர்க்கப்பட வேண்டுமென்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்திருக்கிற கருத்தாக தமிழகத்திலே இருந்திருக்கிறது.

(முற்பகல் 9—30)

சுதந்திரம் வருவதற்கு முன்னர் நம்மை ஆண்டுகொண்டிருந்த ராஜ்ய சர்க்காராக இருந்தாலும் 1947க்குப் பின்னர் நமக்குச் சுதந்திரம் கிடைத்து மக்களாட்சி நடைபெறுகின்ற இந்த நேரமாக இருந்தாலும் இந்தி தொடர்ந்து திணிக்கப்பட்டு வருகிற ஒரு சூழ்நிலையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நேரு பெருமகனார் தந்த வாக்குறுதி இருந்தாலும் அதற்குப் பிறகு அன்னை இந்திரா காந்தி அவர்கள் அதை உறுதி செய்திருந்தாலும் அதற்குப் பிறகு இன்றைய இந்தியப் பிரதமர் அந்த வாக்குறுதியை ஏற்றுக்கொண்டாலும் அது சட்டமாக்கப்பட வேண்டுமென்ற ஒரு சூழ்நிலை இன்றைக்கு ஏன் ஏற்பட்டிருக் கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டிய கட்டாயம் இன்றைக்கு உருவாகி இருக்கிறது.

வேற்றுமையில் ஒற்றுமை காணுகின்ற, யூனிட்டி இன் டைவர்ஸீட்டி என்று சொல்லப்படுகிற தத்துவம் தான் இந்திய ஒருமைப்பாட்டைக் காக்கும் ஆயுதமாக அமைந்திருக்கிறது. பல்வேறு இனங்களைச் சார்ந்த மக்களையும் பல்வேறு மொழிகள் பேசும் மக்களையும் பல்வேறு சாதிகளைச் சேர்ந்த மதங்களைச்

1986 நவம்பர் 13] [திரு. வை. பாலச்சந்திரன்]

சேர்ந்த மக்களையும் ஒருங்கிணைத்து இந்தியாவினுடைய ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பது வேற்றுமையில் ஒற்றுமை காண்பது என்ற தத்துவம்தான். வேற்றுமையில் ஒற்றுமை காண்பது என்ற தத்துவத்திற்கு உலைவைக்கப்படுகிற அளவுக்கு நிலைமை இன்றைக்குப் போய் இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டும்போது நம்முடைய தேசிய வாதிகள் அதை ஏற்றுக் கொண்டாக வேண்டும். ஒருவன் தானாக விரும்பி நரகத்திற்குக் கூட போவானே தவிர கட்டாயப்படுத்தினால் சொர்க்கத்திற்குக் கூட வரமாட்டான் என்ற பழமொழியை நம்முடைய மத்திய அரசு புரிந்து கொள்ளவேண்டும். அதைப் புரிந்து கொள்ளாமல் மத்திய அரசு செய்து கொண்டிருக்கும் தவறுகள் தமிழக மக்களுடைய உணர்வுகளைப் பாதித்து இந்திய ஒருமைப் பாட்டிற்கு தீங்கு ஏற்படுத்திவிடுமோ என்ற நிலை இருக்கிறது.

* *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்மானத்தோடு ஒட்டிப் பேசுங்கள். அவரவர்கள் கருத்துக்களை மட்டும் பேசவேண்டும். அதெல்லாம் வேண்டாம். அவைக்குறிப்பிலிருந்து அது நீக்கப் படுகிறது.

திரு. வை. பாலச்சந்திரன் : நான் யாரையும் கண்டிக்க வில்லை. இந்த நிலைமை வரலாமா ? அதற்கான சூழ்நிலை தமிழகத்திலே ஏன் உருவாயிற்று என்பதைப் பார்க்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுயேச்சை உறுப்பினருக்கு அந்த உரிமையை நானாகக் கொடுத்திருக்கிறேன். போதும். தாங்கள் அமரலாம்.

*திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பெயரால் சட்ட அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்ட அரசினர் தீர்மானத்தின்மீது ஜனதாக் கட்சியின் சார்பில் கருத்துக்களைக் கூற வாய்பு அளித்தமைக்கு நன்றிகூறி எனது உரையைத் துவக்கு கிறேன்.

மொழித் திணிப்பு கூடாது என்பதை நாங்கள் ஒப்புக் கொள் கிறோம். அதேபோல் மறைந்த நேரு பெருமகனார் ஆட்சியில் நேரு அவர்கள் கொடுத்த வாக்குறுதியும் நிறைவேற்றப்பட வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். இந்தியாவில் உள்ள அனைத்து மொழிகளையும் சமமாகப் பாவித்து அந்த மொழிகள் வளர்ச்சியுறுவதற்கு தக்க உதவிகளை மத்திய அரசும், மாநில அரசும் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் நீங்கள் அறிவித்ததுபோல் நீதி நிர்வாகம் மற்றும் பயிற்றுமொழியிலே இன்னும் முறையாகத் தமிழில் பயன் படுத்தப்படாமல் இருக்கிறது. அதிலே தமிழைப் பயன்படுத்த

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1986 நவம்பர் 13

வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மொத்தத்தில் மொழித் திணிப்பைக் கண்டிக்க வேண்டும். ஆனால் பிற மொழிகள்மீது வெறுப்பை நாம் உண்டாக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது இந்தியக் கூட்டாட்சி முறைக்கு உகந்ததல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆட்சிமொழி, தேசிய மொழிகள் எதை வேண்டுமானாலும் படிப்பதற்கு மாணவர்களுக்கு இந்த அரசு வழிவகைகள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தவேண்டுமென்றால், அது நடக்க வேண்டுமென்றால் இந்தியப் பாராளுமன்றத்திலே பெரும்பான்மையான மெஜாரிட்டி வேண்டும். அதற்குரிய வழிவகைகளை ஆராய்ந்து கொண்டு இந்தி பேசாத மாநில முதல்வர்களோடு முதல்வர் அவர்கள் கலந்துபேசி இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கலாம். இந்தி பேசாத மாநிலங்களான மேற்கு வங்கம், கர்நாடகம், ஆந்திரம், கேரளம், மகாராட்டிரம், குஜராத், ஒரிசா, அசாம், பஞ்சாப், அருணாசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களின் முதல்வர்களோடு கலந்துபேசி, அவர்களும் இந்த மாதிரி தீர்மானங்களைக் கொண்டுவரவேண்டுமென்று சொல்லி, இதை இங்கே கொண்டுவந்திருந்தால் நலமாக இருந்திருக்கும் என்று கருதுகிறேன், அதையெல்லாம் விடுத்து தமிழ்நாட்டு அரசியல் அவசர நிமித்தம் காரணமாக அவசரம் அவசரமாக இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருப்பதாகத் தெரிகிறது என்று சொல்லி என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்..

*திரு. கு. ரமணி : மதிப்பிற்குரிய தலைவரவர்களே, மொழி பற்றிய இந்த அரசின் தீர்மானம் ஒரு முக்கியமான தனித் தீர்மானம், இந்தத் தீர்மானத்தின்மீது கொஞ்சம் விரிவாகக் கருத்துக்களைச் சொல்வதற்கு நீங்கள் அனுமதிப்பதுதான் சரியானது. மிக வேகமாக இந்தப் பிரச்சினையை முடித்துக் கொள்வது என்பதால் மட்டும் நாட்டிலே மொழிப் பிரச்சினை தீர்ந்துவிடாது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சம்பந்தப்பட்ட வரையில் எங்களுக்கு தெளிவான நிலை மொழிப் பிரச்சினையில் உள்ளது, அனைத்து மொழிகளும் ஆட்சி மொழிகளாக, நிர்வாக மொழிகளாக இப்போதிருந்தே ஆக்கப்பட வேண்டுமென்பதைத் தான் இந்த அரசு கோரவேண்டும். அது எங்களுடைய கருத்து.

அதற்காக அனைத்து மொழிகளுக்கும் சம அந்தஸ்து தரப்பட வேண்டும். இது உடனடியாகச் செய்யப்பட வேண்டும், அனைத்து மொழிகளின் வளர்ச்சிக்கு மத்திய அரசு பணச் செலவு உட்பட சகல ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும், நம் பங்குக்கு, தமிழ்நாட்டில் தமிழ் வளர்ச்சிக்கு, அதை போதனா மொழியாகவும், பயிற்சி மொழியாகவும், நிர்வாக மொழியாகவும் ஆக்குவதற்கு நம் பக்கத்துலிருந்து நாம் ஏன்ன

1986 நவம்பர் 1ம்] [திரு. கு. ரமணி]

செய்யவேண்டுமோ அதை நாம் செய்ய வேண்டும். அப்படிப் பட்ட மொழிக் கொள்கை இல்லாமல், பல மொழி பேசக் கூடிய இந்திய நாட்டில், இந்தி மொழிதான் தொடர்பு மொழி என்று ஆக்க திணிப்பு முயற்சியும், அதை எதிர்த்துப் போராடு வது என்ற பெயராலே எப்போதுமே ஆங்கிலமே இந்திய நாட்டில் தொடர்பு மொழி என்று நாமும் சொல்லுவதும் என்ற இந்த இரண்டும் பிரச்சினைகளைத் தீர்க்காது என்று தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தி உட்பட எந்த மொழிக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி விரோதியல்ல. எல்லா மொழிகளும் தேசிய இன மக்க ளால் பேசப்பட்டு, அவரவர்களுடைய மொழிகளை அவரவர்கள் வளர்க்கிறார்கள். எல்லாக் கலாச்சாரங்களும் வளர்ச்சியை நோக்கி முன்னேற, மக்கள் மொழிகளை வளர்க்கிறார்கள். ஒரு மொழியை அப்படியே எதிர்ப்பது என்பது அந்த தேசிய இன மக்களுக்கு எரிச்சலூட்டி, அவர்கள் நம்மை எதிர்ப்பதாக அமையும். இது மொழிப்பிரச்சினையைத் தீர்க்காது. இதற்கு உலகத்திலே எத்தனையோ உதாரணங்கள் இருக்கின்றன. அவைகளைச் சொல்ல நேரம் கிடையாது. அப்படிப்பட்ட மொழித் திணிப்பு பிரச்சினைதான் இந்த 40 ஆண்டுக் காலத் திலே நடத்தப்பட் து என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

அரசியல் சட்டத்தில் அத்தனை மொழிகளுக்கும் அங்கீகாரம் அளிக்கப்படவேண்டுமென்று சொல்லப்பட்டாலும், அவை செய்யப்படவில்லை. அதற்கு மாறாக இந்தித் திணிப்பு என்பது பல வழிகளில் நடத்தப்பட்டது. இந்தியில் மத்திய அரசின் சுற்றறிக்கை வந்தபோது கண்டித்தோம். அது அவர்கள் பழக் கத்திலே உள்ள ஒன்று. வேண்டுமென்றே செய்யப்படவில்லை என்று உள் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அதெல்லாம் சரியல்ல பல நடவடிக்கைகள்—சர்க்குலர் மட்டு மல்லால், மத்திய அரசில் உத்தியோகம் கிடைக்க வேண்டு மென்றால் இந்தி மொழியில் கொஞ்சமாவது பயிற்சி இருக்க வேண்டும், ஏதாவது ஒரு தேர்வு எழுத வேண்டுமென்ற முறை யில் ஒவ்வொரு மத்திய அரசு இலாக்காவிலும் ஆசிரியரை வைத்து இந்தியைப் பயிற்றுவிக்க நடவடிக்கை தமிழ்நாட்டிலும் நாடு முழுவதும் நடக்கிறது. எப்போது எப்போது சந்தர்ப்பம் கிடைக்குமோ அப்போதெல்லாம் இந்தி மொழியைத் திணிப்பது என்ற நடவடிக்கை நடைபெற்று வருகிறது. இது அபாயகர மானது. அதனுடைய விளைவுகளைத்தான் நாம் சந்திக்கிறோம். 1967ஆம் வருடம் பாராளுமன்றத்தில் ஆட்சிமொழிச் சட்டத்தின் மீது பேசுங்காலத்தில், பாராளுமன்றத்தில் இருக்கும் படியான எதிர்க்கட்சிகள் முழுவதும் இப்படிப்பட்ட எதிர்ப்பு நிலைமைகள் ஏற்படுமென்று அன்றைக்கே எச்சரிக்கை செய்து பெரும் விவாதம் நடைபெற்றது. அந்த விவாதத்தில்தான் ஜவஹர்லால் நேரு அவர்கள் அப்படிப்பட்ட பயத்திற்கு இட மில்லை, இந்தி மொழியைத் திணிக்க மாட்டோம் என்று

வாக்குறுதி கொடுத்தார்கள். அந்த நிலைமையைச் சமாளிக்க அந்த வாக்குறுதி கொடுத்தார்கள். அதற்குப் பிறகு திருமதி இந்திரா காந்தி அவர்களும் அந்த வாக்குறுதியைத் தொடர்ந்து கொடுத்து வந்தார்கள்.

(முற்பகல் 9--40)

இப்போது திரு. ராஜீவ் காந்தி அவர்கள் தொடர்ந்து அந்த வாக்குறுதியைக் கொடுத்துக்கொண்டு வந்திருக்கின்றார்கள். அதிலே என்னுடைய கருத்து என்னவென்றால் பன் மொழிகள் பேசக்கூடிய இந்த நாட்டிலே ஓரளவு சமமாக ஒரே மாதிரியாக பல மொழிகள் வளர்ந்துகொண்டிருக்கின்ற நாட்டில் ஒரு மொழியை மட்டும் தொடர் மொழியாக, 76 கோடி மக்களைக் கொண்ட இந்த நாட்டில், கொண்டுவர முடியாது. அதற்கு ஒரு வளர்ச்சி, போக்கு இருக்கிறது என்பதையும் பார்க்கவேண்டும். ஒரு உதாரணம் சொல்கிறேன். 56 மொழிகளிலே பத்திரிகைகள் வெளியிடுவதும், பேசுவதும் கொண்டுள்ள அரசு இருக்கும் நாடு சோவியத் யூனியன் ஒன்றுதான். உலகத்திலேயே இந்த மொழிப்பிரச்சினையைச் சுமுகமான முறையில் தீர்த்து வைத்த நாடு இந்த நாடு ஒன்றுதான். அங்கே இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படவில்லை. அங்கு ரஷ்ய மொழி ஆதிக்கம் இருந்தது. அப்படிப்பட்ட நிலைமை எல்லாம் மாற்றப்பட்டு அந்த மக்கள் ஒரே மொழியைத் தங்களுடைய மொழியாக ஏற்கக்கூடிய நிலை ஏற்பட்டது. சகல மொழிகளையும் வளர்க்கும்படியான நிலை ஏற்பட்டது. அந்த நிலை இங்கும் ஏற்படும். ஆகவே எல்லா மொழிகளையும் ஆட்சிமொழியாக ஏற்க வேண்டிய நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். இந்திய நாட்டிலே நாளாவட்டத்திலே இந்த உரிமைகளைக் கொடுத்து. வளர்ச்சியைப் பொறுத்து நிலைமைகளை மாற்றலாம். வளர்ச்சிப் போக்கில் ஒரு மொழிமட்டுமே இந்திய தொடர்பு மொழியாக இருக்கும் என்று இன்றைக்கு ஜோஸ்யம் சொல்ல முடியாது. ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் வரலாம். 2 மொழிகள் வரலாம், 3 மொழிகள் வரலாம். அப்படித்தான் மாற்றம் வேண்டும். ஆக அப்படிப்பட்ட ஒரு பரந்த கண்ணோட்டத்தில் அனைத்து மொழிகளுக்கும் சகல உரிமைகளும் வழங்கப்பட்டிருக்க வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் எந்த மொழியும் ஆதிக்க மொழியாக திணிக்கப்படக்கூடிய நிலை வரக்கூடாது என்பதுதான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தெளிவான கருத்து.

இந்தத் தீர்மானத்தில் சில கருத்துக்கள் சொல்லப்பட்டு இருக்கின்றன, எல்லா மொழிகளுக்கும் இப்படிப்பட்ட உரிமைகள் கொடுக்கப்பட வேண்டும் என்று இருக்கின்றது. இதிலே சொல்லப்பட்டிருக்கின்ற விஷயங்கள் எல்லாம் சரியானதுதான். அது நாம் ஏற்றுக்கொள்ளக்கூடியதுதான். ஆனால் இதிலே இருக்கிற கஷ்டம் என்னவென்று கேட்டால், இந்தி மொழியினுடைய திணிப்பு வருகின்றது, வந்துகொண்டிருக்கின்றது,

1986 நவம்பர் 13] [திரு. கு. ரமணி]

நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதன் பேரில் இருக்கும்படியான நம்முடைய கடுமையான எதிர்ப்பும், அதன் காரணமாக ஆங்கிலமே இந்தி வராத நிலையிலே நீடிக்க வேண்டும் என்று கான்ஸ்ட்டிட்டியூசனல் அமெண்ட்மென்ட், சாதாரண சட்டமல்ல, சாதாரண சட்டத்தை திரும்பவும் மாற்றலாம் என்ற அளவில், கான்ஸ்ட்டிட்யூசனல் அமெண்ட்மென்ட்டாகவே கொண்டு வந்து திருத்தவேண்டும் என்று சொல்லப்படுகிறது. அப்படியென்றால், ஒன்று இந்தியைத் திணிக்க வேண்டும் என்ற நிலை, அல்லது இந்த இடைக் காலத்திலே ஆங்கிலமே இருக்க வேண்டும் என்ற மற்றும் ஒரு நிலை. இந்த இரண்டுக்குமே அரசியல் சட்டத்தில் ஏற்றி முடிவு எடுத்துக் கொண்டால், இந்தி மொழி திணிப்பு என்பது நடக்காதா? நடக்கும். அப்போது என்ன வரும்? மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படாது. அதனால்தான் சொல்கிறேன் நம் அத்தனை பேருக்கும் ஏற்புடையதாக இருக்க வேண்டும், சகோதர மக்களுக்கு இடையிலே மொழியின் பேரால் பிளவு ஏற்படக் கூடாது. நாடு துண்டாடப்படக்கூடாது. அப்படிப்பட்ட தவறான வழிமுறைகளைத் தூண்டிவிடக்கூடிய நிலைமைகள் நாட்டில் வரக்கூடாது.

மொழி என்று சொல்லும்போது எல்லா மொழிகளும் நம்மால் மதிக்கப்படவேண்டியவைதான். மக்கள் மத்தியிலே சகோதரத்துவம் வளர்ச்சியடைய வேண்டும். அந்த மொழிகளினுடைய வளர்ச்சிப்போக்கில், அத்தனை மொழிகளில் ஒரு மொழியோ அல்லது இரண்டு மொழிகளோ ஆட்சி மொழியாக வந்து, இந்தியாவினுடைய ஆட்சிமொழியாக, தொடர்பு மொழியாக வர, இந்திய மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலை ஏற்படலாம். அந்த முறையிலே பொறுமையோடும் உறுதியோடும் இன்று இந்தியைத் திணிப்பதை நாம் வன்மையாக எதிர்க்கிறோம். கடுமையாக எதிர்க்கிறோம். அதுபோலவே வேறு எந்த மொழியினுடைய திணிப்பையும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. அந்த முறையிலே தான் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும். அப்படிப்பட்ட முறையிலே இந்தத் தனித் தீர்மானத்திலே சில பலவீனங்கள் இருக்கின்றன. இந்தத் தனித் தீர்மானத்திலே கொஞ்சம் கன்பியூஸ் பண்ணும் வார்த்தைகள் இருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் தந்து தெளிவு படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த முறையிலே சில வார்த்தைகள் இருந்து வருகின்றன. இந்தத் தனித் தீர்மானத்திலே இருக்கின்ற பலவீனங்களை மாற்ற, இந்தத் தனித் தீர்மானத்தை மேலே கூறியபடி திருத்த வேண்டும் என்று என் கட்சியின் சார்பில் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

*திரு. க. அன்பழகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தத் தனித் தீர்மானம்

[திரு. க. அன்பழகன்] [1986 நவம்பர் 13

இன்றைய நாட்டினுடைய நிலைமையில் மிகமிக வரவேற்கத் தக்க ஒரு தீர்மானமாக அமைந்திருப்பதன் காரணமாகவும், இந்தச் சட்டப் பேரவையிலுள்ள அனைத்துக் கட்சியினரும் பெரும்பாலும் ஒருமித்த முடிவுக்கு வர உதவிசெய்யும் என்ற நம்பிக்கையிலும் நான் இந்தத் தீர்மானத்தின் மீது பேசுவதில் உள்ளபடியே ஒரு நம்பிக்கை கொள்கிறேன். இந்தத் தீர்மானத்தினுடைய வாசகத்தில் 1968ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 23ஆம் நாள் நம்மை எல்லாம் இந்த நிலைக்கு, இந்த நாட்டிலே பொறுப்பேற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தகுதியை ஏற்படுத்திய பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்து வைத்த அந்தத் தீர்மானத்தினுடைய கருத்து மிகத் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப்பின்னர் தமிழக சட்டமன்றம் 1974ஆம் ஆண்டு இதே மன்றத்தில் மாநில சுயாட்சிக்கான தீர்மானத்தை நிறைவேற்றியபோது அந்தக் கருத்து வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அந்தக் கருத்தும் இந்தத் தீர்மானத்திலே இடம் பெற்றிருக்குமானால் ஒரு சட்டமன்றத்தினுடைய நடவடிக்கைகள் குறைபாடு இல்லாததாக மத்திய அரசுக்கு வலியுறுத்தப்பட்டது என்கிற வகையில் ஏற்புடையதாக இருந்திருக்கும். எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் இன்றைக்கு ஒருமித்த முடிவுக்கு வர வேண்டும் என்பதான நிலைமைக்கு நாமும் நாடும் ஆளாகிக்கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் இந்தக் கருத்தை எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

1974 ஆம் ஆண்டு இந்தச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலே சுட்டிக்காட்டப்பட்ட அந்தக் கருத்து மத்திய அரசின் ஆட்சிமொழிகளாக அரசியல் அமைப்புச் சட்டத்தின் 8-வது விவரப்பட்டியலில் குறிப்பிட்டுள்ளவாறு அதில் காணும் அனைத்து மொழிகளும் இருக்க வேண்டும். இந்த நிலைமையை எய்தும்வரை மத்திய அரசு தலைமைச் செயலகம் உட்பட மற்ற துறைகள் அனைத்திலும் மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையே தொடர்புகொள்ளவும் ஆங்கிலமே தொடர்ந்து ஆட்சிமொழியாக இருக்க வேண்டும். இந்த மன்றத்திலே நிறைவேற்றப்பட்ட அந்தக் கருத்தும் இந்தத் தீர்மானத்திலே சேர்ந்து இடம் பெற்றிருக்குமானால் ஒரு வரலாற்று அடிப்படையில் தொடர்ந்து தமிழக அரசு இந்த நீதியை கேட்கிறது என்பது இன்னும் தெளிவாகப் புலனாகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து 1972 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 7ம் நாள் ஆளுநர் உரையில் வழங்கப்பட்டிருந்ததைக் குறித்து குறிப்பிடும் போது ஆளுநர் உரை வாயிலாக முதலமைச்சர் தெரிவித்தார் என்ற வாசகம் காணப்படுகிறது. அப்படிச் சொல்வது மரபல்ல. இது பற்றி கூடுமானவரை பரிசீலிக்க வேண்டும். ஆளுநர் அறிவிக்கிறார் என்றால் அரசு அறிவித்தது என்று பொருள். அந்தக் கருத்தையும் எண்ணிப்பார்க்க வேண்டும். ஆங்கிலமே மத்திய அரசின் ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டிய கட்டாய

1986 நவம்பர் 13] [திரு. க. அன்பழகன்]

நிலையை எதற்காக வலியுறுத்துகிறோம் என்றால் நமக்காக மட்டும் வலியுறுத்தவில்லை, மத்திய ஆட்சிக்காகவும் வலியுறுத்துகிறோம்.

இங்கே பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. ரமணி அவர்கள் ஆங்கிலத்தையும் திணிக்கக் கூடாது என்று திரும்பத்திரும்பச் சொன்னார்கள். ஏற்கெனவே இருப்பதைத் திணிப்பது என்று சொல்வது மரபல்ல. ஆங்கிலத்தை வேகமாக நீக்குகிறார்கள், புறக்கணிக்கிறார்கள், அது இந்தி பேசாத மக்களை மிகப் பெரிய அளவுக்கு பாதிக்கிறது. மேற்கு வங்க முதலமைச்சர் அவர்கள் கூட ஆங்கிலத்தை வேகமாக நீக்குவதன் பாதகத்தை உணர்ந்து ஒருவகையில் அதுபற்றிச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். திணிப்பது என்ற பேச்சுக்கு ஆங்கிலத்தைப் பொறுத்தவரையில் இடமில்லை. ஒருவேளை இந்தி பேசுகிற மாநிலங்களிலுள்ள தொடக்கப் பள்ளிகளிலோ அல்லது உயர்நிலைப் பள்ளிகளிலோ ஆங்கிலத்தைப் படித்துத்தான் தீர வேண்டும் என்றால் அது ஒருவகையில் திணிப்பு என்று ஆகலாம். ஆனால் அதற்கு மாறாக மத்திய அரசு அலுவலகங்களிலே நூற்றுக்கு நூறு நிர்வாகம் ஆங்கிலத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்றைக்கும் மத்திய அரசு அதனுடைய சட்ட சரத்துக்களின்படி உச்ச நீதிமன்றத்திலும், உயர்நீதி மன்றங்களிலும் ஆங்கிலத்தைப் பயன்படுத்தலாம், பயன்படுத்த வேண்டும் என்ற நிலை ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் மேல் மட்டத்தில், பல கட்டங்களில் ஆங்கிலத் தக் கைவிட முடியாத நிலை இருக்கும்போது பிறமொழி மாநிலங்களில் சென்று பணியாற்றுகிற மத்திய அரசு அலுவலர்கள் ஆங்கிலத்தை கைவிட்டு இந்தியைப் பயன்படுத்த வேண்டுமென்று சொல்வது உள்ளபடியே பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் கொடுத்த வாக்குறுதிக்கு நேர்மாறானது என்பது மாத்திரமல்ல, அவர்களுடைய வாக்கை மதிக்காத காரியம் என்பது கூட அல்ல, மிதிக்கின்ற காரியம். ஏற்கனவே அண்மைக் காலமாக தமிழ் நாட்டிலே எந்தக் கட்சியையும் சாராத மாணவர்கள் உள்பட பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்கள் இந்திக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்ற நிலைமைகள், பல்வேறு கட்டங்களிலே வடிவெடுத்துக்கொண்டிருக்கின்றன. உண்மையாகச் சொல்லப் போனால், பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் 1959-வது ஆண்டு பேசி, அது மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்திலே 1959 செப்டம்பர் நாளிலே பேசிய பேச்சு, விரிவான பேச்சு, அதிலே சில இடங்களிலே பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், புதிய உலகத்திற்கும் பழைய உலகத்திற்கும் ஏற்படுகிற முரண்பாடுகள், சிக்கல்கள் இவற்றையும் எடுத்துக் காட்டுகிறார்கள். அதேநேரத்திலே அவர் காணும் மக்களே அடிப்படை சக்தியாக புதிய உலகம் அமைகிறபோது, மக்களிடமிருந்து பல்வேறு கருத்துக்கள், எண்ணங்கள் வளரும் என்பதை அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

[திரு. க. அன்பழகன்] [1986 நவம்பர் 13

ஒரு தலைகிறந்த ஜனநாயகவாதி என்ற முறையில் இந்தச் சிக்கலை மிக விரிவாக எண்ணிப்பார்க்கிறார்கள். எண்ணிப் பார்த்து, அவர் சொல்கிறார்கள், ''நான் இதை மொழித் திணிப்பாகக் கருத இடந்தரக் கூடாது என்று நான் சொன்ன பொழுது, எதற்காக அப்படிச் சொன்னேன் என்றால், சென்னை, ஆந்திரம், கேரளம் போன்ற எந்த இராஜ்யமாக இருந்தாலும் அந்த இராஜ்யத்தின் மீது திணிக்கப்படுகிறது என்று கருதுகிற ஒரு மொழியை அதன்மீது திணிக்கக் கூடாது''. பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் திட்டவட்டமாகக் கூறினார், ''தென்னாட்டு மக்கள் மீது இந்தியைத் திணிக்கக் கூடாது, எதையுமே கட்டாயமாகவோ, திணிப்பு முறையிலோ செய்தால் அதை அவர்கள் எதிர்க்கிறார்கள், அது எனக்குப் பிடிக்கவில்லை. சென்னை இராஜ்யத்தில் எங்களுக்குக் கட்டாய இந்தி வேண்டாமென்று சொன்னால், அவர்களுடைய பள்ளிக்கூடங்களில் கட்டாய இந்தி கற்றுக்கொடுக்க வேண்டியதில்லை''. இது, பேரறிஞர் அண்ணா அவர்கள் இங்கே இருமொழிக் கொள்கைக்காக, இருமொழி கல்வித் திட்டத்தை ஒரு கொள்கை வடிவமாக ஆக்குகிற தீர்மானம் கொண்டு வருவதற்கு முன்னாலேயே பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களாலே தரப்பட்ட ஒப்புதல் வாக்கு மூலம் என்று தெரிவிக்க நான் விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

இன்னும் அடிப்படையிலே எண்ணிப் பார்த்தால், இன்றைக்கு ஏதோ அரசியல் சட்டத்தைத் திருத்துவது என்பது மிகப்பெரிய ஒரு முறைகேடான காரியத்தைப்போல சிலபேர் தவறாக எண்ணிக்கொண்டு பேசுகிறார்கள். அதற்காகச் சில விவரங்களை அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஒன்று, அரசியல் சட்டம் இதுவரையில் 48 முறை திருத்தப் பட்டிருக்கிறது. அப்படித் திருத்தப்பட்ட சட்டம்தான் அரசியல் அமைப்புச் சட்டம். அந்த அரசியல் அமைப்புச் சட்டம் உருவாவதற்கான அரசியல் நிர்ணய சபை உருவானபொழுது, பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அவையாக அது அமையவில்லை என்பது, மூதறிஞர் இராஜாஜி முதலாக இந்தியாவினுடைய தலைசிறந்த தலைவர்கள் பலபேர் எடுத்துச் சொன்ன கருத்தாகும். மக்களாலே தேர்ந்தெடுக்கப்படாமல், 'Nomination' என்ற முறையிலேதான், இன்னும் சொல்லப்போனால் ஆளுங் கட்சி நாமினேஷன் என்ற முறையிலேதான் அரசியல் நிர்ணய சபையே அமைந்தது. ஆகவே, அந்தச் சபையிலே நிறைவேற்றப் பட்ட எந்தக் கருத்தும் அதற்குப் பின்னாலே மாற்றப்படக் கூடாது என்று வாதிப்பதற்கு, மக்கள் உரிமையை மதித்துக் கருதுகிறவர்களுக்கு, இடமில்லை.

இரண்டாவது, இந்தி மொழிதான் இந்தியாவினுடைய ஆட்சி மொழி என்னும் வாதத்திற்கு இடம் தருவதற்குக் காரணமாக இருந்த அந்தக் கருத்து அகில இந்திய காங்கிரஸ் கட்சியிலே

1986 நவம்பர் 13] [திரு. க. அன்பழகன்]

உருவானபொழுது, முதல்முறை அந்தத் தீர்மானத்தை வாக்களிப்புக்கு விட்டபொழுது, ஆங்கிலத்திற்கு 44 பேர், இந்திக்கு 44 பேர் என்று காங்கிரஸ் கட்சிக் குள்ளேயே மாறுபட்ட நிலை ஏற்பட்டிருந்தது. அடுத்த முறை வாக்குக்கு விட்டபொழுது,—சில நாட்கள் கழித்து மறுபடியும் கூடி, அனைத்து காங்கிரஸ் தலைவர்களையும் அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்களையும் வரச்சொல்லி, அந்தக் கூட்டத்திலே வாக்கெடுத்தபொழுது, 77—77 என்று, அதாவது ஆங்கிலத்திற்கு 77, இந்திக்கு 77 என்றுதான் வாக்குகள் கிடைத்தன. ஆகவே, இந்தியாவின் அலுவலக மொழி இந்தி மொழி என்பது இந்தியாவிலே அன்றைக்கு இருந்த மிகப் பெரிய பலம் வாய்ந்த கட்சியான காங்கிரஸ் கட்சியாலேகூட ஒருமன தாகக் கொண்டு வரப்படவில்லை என்பதையும், அன்றைக்குத் தலைவராக இருந்த பட்டாபி சீத்தாராமையா வழங்கிய ஒரே ஒரு வாக்கால் casting vote—மூலமே—கட்சியிலேயே நிறை வேறியது என்பது எண்ணிப்பார்க்கப்பட வேண்டியதாகும். அவருக்கு இருந்த தேசீய உணர்வு, ஆங்கிலத்தை ஏற்றுக் கொள்ள அவருக்கு மனம் இல்லாத காரணத்தால் இந்தி இருக்கட்டும் என்று அவர் ஒரு வாக்களித்த காரணத்தால் அரசியல் நிர்ணயச் சட்டத்திலே இந்தி ஏறிக்கொண்டு விட்டது. பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் அப்பொழுது குழப்பமான கருத்திலேதான் இருந்தார்கள். எந்த அளவிற்கு என்றால் ஆங்கிலத்தைக் கைவிட முடியாது என்ற கருத்தைப் பல இடங் களிலே சொல்லியிருக்கிறார்கள். ஒருமுறை அவர்கள் நாடாளு மன்றத்திலே பேசுகின்றபொழுது, இங்கே பேசப்படுகிற இந்தி அல்லது நாம் ஆட்சி மொழி என்று சொல்கிற It is only Official language அலுவலகமொழி இந்தி மொழி, பம்பாயிலே பேசப்படுகிற இந்தியா? பெங்காலிலே பேசப்படுகிற இந்தியா? சென்னையிலே பேசப்படுகிற இந்தியா? என்று பலர் கேட்கிறார்கள். அதுகூட அல்ல சேத் கோவிந்ததாசினுடைய இந்தியா, பேராசிரியர் ரகுவீரா அவர்களுடைய இந்தியா என்று கேட்கிறார்கள். எனக்கே புரியவில்லை, இருந்தாலும் எதிர்காலத்திலே இந்தி வளர்ந்து ஒரு வடிவத்தைப் பெற்று விடும் என்று எதிர்பார்க்கிறேன் என்னும் அந்தக் கருத்தைப் பலபட அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

இன்னும்கூட ஒன்று. எந்தக் காரணத்தை முன்னிட்டும் 'International numerals' என்று வழங்கப்படுகிற எண் முறை களைக் கைவிட்டுவிட்டு அகில உலகம் அறிந்திருக்கிற எண் குறிக்கும் முறைகளைக் கைவிட்டுவிட்டு இன்றைக்கு நாமெல்லாம் வழங்குகிற அந்த எண் முறைகளைக் கைவிட்டுவிட்டு, இந்தி எண் முறைகளைக் கொண்டு வருவது என்பது வரவேற்கத் தக்கதல்ல, விரும்பத்தக்கதல்ல, உலகம் போகிற விஞ்ஞான முன்னேற்றத்திற்கு ஏற்றதல்ல என்று பண்டித நேரு சொன்னார்.

[திரு. க. அன்பழகன்] [1986 நவம்பர் 13

ஆனால், அவற்றிற்கெல்லாம் மாறாக இப்பொழுது நடைபெறுகிறது. தொடர்ந்து அவருக்குப் பின்னாலே பிரதமராக இருந்த லால்பகதூர் சாஸ்திரியும் அந்த உறுதிமொழியைச் சொன்னார். இந்த அரசுத் தீர்மானத்திலே அவருடைய பெயர் இடம்பெறவில்லை. இடம் பெற்றிருந்தால் ஒரு வரலாற்று அடிப்படையிலே வலியுறுத்துவதாக இருந்திருக்கும். ஒரே ஒரு பிரதமர்தான் அந்த வாக்குறுதியைக் கொடுக்கத் தவறியவர். அவர் நீண்ட நாள் பிரதமராக இல்லை. எனவே, மற்ற எல்லா பிரதமர்களும் சொன்னார்கள் என்பது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று. அந்த முறையிலே பண்டித ஜவகர்லால் நேரு, அவரை அடுத்து வந்த திரு. லால்பகதூர் சாஸ்திரி, அவருக்குப் பின்னாலே திருமதி இந்திரா காந்தி, ஒரு முறை அல்ல, ஒவ்வொருவரும் 3 முறை, 4 முறை இந்த வாக்குறுதியைத் தந்து, அந்த வாக்குறுதி மீறப்படுகிறது என்றால், அந்த வாக்குறுதி மீறப்படுவதற்குக் காரணமாக இருக்கிற சூழ்நிலையை அரசியல் பின்னணியை, சட்டத்தின் மூலமாகத் தடுக்க வேண்டுமென்ற கருத்து மத்திய அரசிடம் பலமுறை வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆட்சிமொழிச் சட்டம் 1968—வது ஆண்டிலே நிறைவேற்றப்பட்டாலும் அதற்குச் சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்னாலே, 1963-வது ஆண்டிலே இந்த ஆட்சி மொழிச் சட்டத்திற்கான கரு உருவாகி அதற்குப் பின்னர், வடமாநிலத்தவரால் காங்கிரஸ் கட்சியிலேயும் வேறு பல மன்றங்களிலேயும் எதிர்ப்பு ஏற்பட்டு, விவாதிக்கப்பட்டதன் விளைவாக திருமதி இந்திரா காந்தி அவர்கள் முதலிலே கொண்டு வந்த ஆட்சிமொழிச் சட்டம், ஆங்கிலத்திற்குத் தருகிற பாதுகாப்பை அப்படியே நான் நிறைவேற்றப் போகிறேன் என்று எங்களைப் போன்று அன்றைக்கு நாடாளுமன்றத்திலே உள்ளவர்களுக்கு, எதிர்க் கட்சியிலே உள்ளவர்களுக்கு வாக்குறுதி கொடுத்தும், நானே கூட, பிரதமர் திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்துப் பேசுகிற அவசியம் ஏற்பட்டபோது, எப்படியும் அதை நிறைவேற்றலாம் என்று ஒரு வாரத்திற்கு முன்னாலே சொன்னவர்கள், கடைசி இரண்டு நாட்களுக்கு முன்னாலே அகில இந்திய காங்கிரஸ் கட்சியிலே எப்படியாவது இந்தியினுடைய வளர்ச்சிக்கான இடத்தை அந்த ஆட்சிமொழிச் சட்டத்தின் மூலமாகவே உருவாக்குவதற்கு, இந்தியைப் பரப்புவதற்கு, வளர்ப்பதற்கு, இடமாகும்படி, அந்தச் சட்டத்தை இரையாக்கி, அந்தச் சட்டத்தினை அன்றைக்கு நாடாளுமன்றத்திலே நிறைவேற்றினார்கள்,

அன்றைக்கு மாண்புமிகு சஞ்சீவ ரெட்டியார் அவர்கள் சபாநாயகராக இருந்தார்கள். அவருக்கும் அது திருப்தி அல்ல; ஹோம் மினிஸ்டராக இருந்த சவான் அவர்களால் தகுந்த பதில் அளிக்க முடியவில்லை. 'இப்பொழுது கொண்டுவந்துள்ள ஆட்சிமொழிச் சட்டத்தினுடைய கருத்துக்களை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. ஆங்கிலத்தை நீட்டிப்பதற்குப்

1986 நவம்பர் 13] [திரு. க. அன்பழகன்]

பாதுகாப்பு தருவதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டம் இங்கே இந்தி வெறி உள்ளவர்களாலே மாற்றப்பட்டு, அது இந்த அரசாங்கத்தாலே ஏற்றுக்கொள்ளப்படுமானால், இந்தச் சட்டத்தாலே தெலுங்கானாட்டு மக்களோ, தமிழ்நாட்டு மக்களோ என்றைக்கும் மன நிறைவு அடைய மாட்டார்கள் என்று நான் திட்டவட்டமாகத் தெரிவிக்கிறேன்' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன அந்தக் கருத்தை நாடாளுமன்றத்திலே நானே கூடப்பேசி இருக்கிறேன். நம்முடைய நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் அங்கே உறுப்பினராக இருந்து பேசியிருக்கிறார்கள். முழு எதிர்ப்பை நாங்கள் அன்றைக்குத் தெரிவித்திருக்கிறோம். இவ்வளவும் தெரிவித்தாலும் வடநாட்டுப் பெரும்பான்மை சக்திக்கு ஆட்படுகிற ஒரு மனப்பான்மை காரணமாக, திருமதி இந்திரா காந்தி அவர்கள் அங்கே உ.பி.யிலே, எம்.பி.யிலே, நம்முடைய திரு. ரமணி அவர்கள் திணிப்பது கூடாது என்று சொன்னதைப் போல, தங்கள் மொழியை மற்றவர்கள் மீது திணிப்பது நியாயமல்லவே என்ற பெருந்தன்மையான மனப்பான்மை அடியோடு இல்லாத காரணத்தால், அந்தக் கூட்டத்தார் அங்கே உள்ள அமைச்சர்கள் உள்பட கிளர்ச்சியிலே ஈடுபட்டு, தொடர்ந்து ரெயில்கள் ஓடாத நிலைமைகள் ஏற்பட்டு, அமைச்சர்களே மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு, காங்கிரஸ் அமைச்சர்களே ஈடுபட்ட காரணத்தால், ஓரளவுக்கு முற்போக்கான கருத்தை ஏற்றுக்கொள்ளக் கூடியவராக இருந்த திருமதி இந்திரா காந்தி அவர்களே அந்தக் கருத்தைக் கைவிட்டு, வடநாட்டில் மத்திய பகுதியில் பெரும் பான்மைக் கூட்டம், இந்தி பேசுகிற கூட்டம், தொடர்ந்து கலவரம் நடத்திய காரணத்தால், இந்த ஆட்சி மொழிச் சட்டத்தின் வடிவத்தையே மாற்றுவதற்கு அவர்கள் உடன் பட்டுவிட்டார்கள். இது இந்திய அரசியலிலே பரிதாபத்திற் குரியது. ஒரே வட்டாரத்தில் உள்ள ஓரளவுக்குப் பெரும் பான்மைக் கூட்டம் இந்தியாவின் ஒரு பகுதியிலே தொடர்ந்து கிளர்ச்சி செய்யுமானால், மற்ற பகுதிகளில் வாழும் பல்வேறு தரப்பினர்களாக உள்ளவர்கள், அசாமிலே உள்ளவர்கள், திரிபுராவிலே உள்ளவர்கள், மேகாலயாவிலே உள்ளவர்கள், மேற்கு வங்காளத்திலே உள்ளவர்கள், ஆந்திராவிலே உள்ளவர்கள், தமிழ்நாட்டிலே உள்ளவர்கள், கேரளாவிலே உள்ளவர்கள், கர்நாடகத்திலே உள்ளவர்கள், எல்லோரும் இந்தியாவில் வாழ்ந்தாலும் இவர்களெல்லாம் ஒருங்கிணைந்து செயல்படக் கூடிய வாய்ப்பில்லாத காரணத்தால், டில்லியைச் சூழ்ந்துள்ள வட்டாரத்திலே ஏற்பட்ட அந்த எதிர்ப்புக்குப் பயந்து அகில. இந்தியாவுக்கும் தந்த வாக்குறுதியை திருமதி இந்திரா காந்தி அவர்கள் நிறைவேற்றாமல் விட்டுவிட்டார்கள்.

ஒரு வகையில், தனிப்பட்ட முறையிலே பேசும்பொழுது "what can I do" என்றுதான் திருமதி இந்திரா காந்தி அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள். 'நான் என்ன செய்ய முடியும்?

[திரு. க. அன்பழகன்] [1986 நவம்பர் 13

எங்களுடைய கட்சியிலே பல பேர்கள் அப்படி எதிர்ப்பு தெரிவிக் கிறார்கள்' என்று பதில் சொன்னார்கள். கொடுத்த வாக்குறுதி என்னவாயிற்று? வாக்குறுதியை நம்பிய மக்களுக்கு, அதுவும் பாமர மக்களுக்கு எந்த வகையில் அந்த உறுதிமொழியினுடைய நோக்கம் காப்பாற்றப்பட்டது? காப்பாற்றப்படவில்லை என்பது தொடர்ந்து நடைபெறுகிற நிகழ்ச்சியால் தெளிவாகும். ஆனால் அண்மையிலே நடைபெற்ற நிகழ்ச்சி அவற்றையெல்லாம்விட சற்று மோசமாக அமைந்தது. மத்திய அரசாங்கத்தின் சார்பாக சர்க்குலர் அனுப்புகிற பொழுது அந்த சர்க்குலரில், அவர்கள் வெளியிட்ட அறிக்கையில், 'ஒரு வார காலத்திற்கு இந்தி வார விழா கொண்டாட வேண்டும். எல்லா அலுவலகங்களும் இந்தி யிலேயே அலுவல் நடத்த வேண்டும்' என்று குறிப்பிட்டுள் ளார்கள். எதற்காகத் தமிழ்நாட்டிலே இந்தியிலே மத்திய அரசு அலுவல் நடப்பது?

(முற்பகல் 10-00)

டெல்லி அரசோடு தொடர்பு கொள்வதற்கு—எங்களுக்கு —இந்தியிலே கடிதம் எழுதுங்கள் என்று கேட்டாலே தவறு. தமிழ்நாட்டிலே நிர்வாகத்திலே நீங்கள் இந்தியைப் பயன்படுத் துங்கள் என்று கேட்பது, அப்படிப் பயன்படுத்தத் தெரியாத வர்கள் அடியிலே கையெழுத்தாவது இந்தியிலே போடுங்கள் என்று கேட்பது; அப்படியானால் இந்தி தெரியாதவர்கள் எல்லாம் இந்த நாட்டிலே தற்குறிகளா? இந்தி தெரியாதவர்கள் எல்லாம் இந்தியிலே கையெழுத்துப் போடுவதை டெல்லி அரசு ஏற்றுக்கொள்கிறது என்று சொன்னால் டெல்லி அரசினுடைய மனப்பான்மை என்ன? இந்த நாட்டிலே இந்து தெரிந்தவர்கள் எல்லாம் அறிவாளி, பண்டிதன், ஞானி என்பதா? இந்து தெரியா தவர்கள் எல்லாம் இந்த நாட்டிலே அவர்கள் ஆங்கிலத்திலே மேதையாக இருந்தாலும்சரி, தமிழிலே புலவனாக இருந்தாலும் சரி, தெலுங்கிலே வல்லவராக இருந்தாலும் சரி அவர்கள் எல்லாம் அறிவுத் தரம் குறைந்தவனா? ஒரு அரசாங்கம் இப்படிப்பட்ட செயலில் ஈடுபடலாமா? டெல்லியிலே இருந்து 5, 6 பேர் ஆட்சி மொழியாக இந்தியை வளர்க்க தமிழ் நாட்டுக்கு வருகிறார்கள். மதுரைக்குச் செல்கிறார்கள். ஒரு அலுவலகத்தில் நுழைகிறார்கள். அலுவலக நிர்வாகம் இந்தியிலே நடக்கிறதா என்று பார்க்கிறார்கள். அங்கேயுள்ள பெயர்ப் பலகை தமிழிலும், ஆங்கிலத்திலும் மட்டும் இருந்த காரணத் தால் அந்தப் பெயர்ப்பலகையையே தூக்கி எறிகிறார்கள். எப்படிப்பட்ட ஆணவமும், திமிரும் இருந்தால் தமிழ்நாட்டில், தமிழனுடைய ஒரு தலைநகரான மதுரையில் இந்தியிலே பெயர்ப் பலகை இல்லை என்ற ஒரு காரணத்தால் இப்படித் தூக்கி எறிவர்? எதற்காக இந்தியில் இருக்க வேண்டும்? நான் இன்றைக்குச் சொல்கிறேன்—தமிழ்நாட்டில் இந்தி எந்த இடத் திலும் இருக்க அனுமதிக்க மாட்டோம், அனுமதிக்க முடியாது. (கூச்சல், குழப்பம்)

1986 நவம்பர் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து எல்லோரும் அமைதியாக அமரும்படி கேட்டுக்கொள்கிறேன். அவரவர்களுடைய கட்சியினர் பேசும்போது பதிலைச் சொல்லிக்கொள்ளலாம். இப்போது அவர் பேசிக்கொண்டிருக்கும்போது எழுந்து குறுக்கிட வேண்டியதில்லை. (கூச்சல், குழப்பம்) உறுப்பினர்கள் ஒருவருக் கொருவர் தயவுசெய்து பேசவேண்டாம என்று கேட்டுக்கொள் கிறேன். எது பேசினாலும் என் மூலமாகத்தான் பேச வேண்டும். எனவே தயவுசெய்து அனைவரும் அமரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்) எல்லோரும் ஒன்றாக எழுந் திருப்பது முறையல்ல.

திரு. க. **அன்பழகன்** : தலைவர் அவர்களே, கொடுத்த.... (கூச்சல், குழப்பம்).

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : பேரவைத் தலைவர் அவர் களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அமருங்கள். பேசுபவர் ஸ்லிப் பண்ணினால்தான் கேட்க முடியும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : எங்களுடைய பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்ன என்பதைக் கேட்டுவிட்டு பிறகு சொல் லுங்கள்

திரு. க. **அன்பழகன்** : கொடுத்த வாக்குறுதியைத் தகர்த் தவர்கள்....(கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கருத்துச் சொல்லப் பட்டால் அதற்கு பதில் கருத்தை நீங்கள் பேசும்போது தெரி வித்துக்கொள்ளுங்கள். கருத்துக்குக் கருத்தாக அமையட்டும்.

திரு. க. **அன்பழகன்**: பண்டித ஜவஹர்லால் நேரு கொடுத்த வாக்குறுதியைத் தகர்ப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தான் தேசத் துரோகிகளே தவிர, அகில இந்திய ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்கள் சார்பாக, இந்த நாட்டில் ஏறத்தாழ 27 ஆண்டுக்காலம், 30 ஆண்டுக்காலம் தொடர்ந்து பிரதமராக இருந்த பண்டித நேருவும், திருமதி இந்திராகாந்தி அம்மையாரும் கொடுத்த அந்த வாக்குறுதியைக் காப்பாற்ற முடியாது என்று சொல்பவர்கள்தான் இந்த நாட்டை உடைப்பவர்களே தவிர, பிரிப்பவர்களே தவிர வேறு யாருமல்ல. பண்டித நேரு கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற முடியாதவர்கள் நாட்டை எப்படிக் காப்பாற்றப் போகிறார்கள்? (கூச்சல, குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது முறையல்ல. அவ்வளவு பேரும் எழுந்தால் எப்படிப் பதில் சொல்வது? உங்கள் தலைவர் பேசும்போது பதில் சொல்லலாம். எனவே இப்போது அமை தியாக அமரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்).

[பேரவைத் தலைவர்] [1986 நவம்பர் 13

தயவுசெய்து எல்லோரும் அமருங்கள். எல்லா உறுப்பினர்களும் இப்படி எழுந்து நின்று பேசுவது முறையல்ல (குறுக்கீடு). அவர் பேசி முடிக்கட்டும் (குறுக்கீடு). வார்த்தைக்கு வார்த்தை பேசுவதில் தவறு கிடையாது. அன்-பார்லிய மெண்டரியாக இருந்தால்தான் தவறு. அவர் பேசியதில் ஒன்றும் தவறு இல்லை. நீங்கள் பேசும்போது வேண்டுமானால், அவருக்கு இதற்காக பதில் சொல்லிக் கொள்ளுங்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, திராவிட நாடு திராவிடருக்கே என்ற குரல் எழுப்பி, இந்த நாடு பிரிக்கப்பட வேண்டும் என்பதற்காக, 20 ஆண்டுக்காலம் 25 ஆண்டுக்காலம் தொடர்ந்து வாதாடி, போராடி அகில இந்தியாவிலே ஜனநாயக அடிப்படையிலே ஒரு நியாயத்தைப் பெற்று விட முடியும் என்ற நம்பிக்கையில் இந்தியாவினுடைய ஒற்றுமை குலையாமலேயே இன்றைக்கு இல்லாவிட்டாலும், இன்னொரு நாள் வெற்றி பெற்று விடலாம் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான், பேரறிஞர் அண்ணா அவர்கள் நான் பிரிவினையைக் கைவிடுகிறேன்; ஆனால், பிரிவினையைக் கைவிட்டாலும் பிரிவினை கேட்பதற்காக கூறப்பட்ட காரணங்கள் எல்லாம் அப்படியே இருக்கின்றன, மொழிப் பிரச்னை, மாநில சுய ஆட்சி, மாநில மக்களுடைய பல்வேறு உரிமைகள் என்ற வகையில் அப்படியே இருக்கின்றன, இவைகளை மனத்திலே கொண்டு, பிரிவினை ஒன்றைத்தான் கைவிடுகிறேன். மற்ற கோரிக்கைகள் அப்படியே இருக்கின்றன என்று அறிஞர் அண்ணா சொல்லிவிட்டு, அதற்குப் பிறகும் தொடர்ந்து ஜனநாயக அரசியலிலே அவர்கள் ஈடுபட்டார்கள். அந்த வகையில், அறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன அடிப்படையில் இந்தியாவினுடைய ஒற்றுமை காப்பாற்றப்பட வேண்டுமானால் இந்தியாவிலே இருக்கிற மக்கள் எந்த மொழி பேசுகிற மக்களாக இருந்தாலும், அவர்கள் மலைவாழ் மக்களாக இருந்தாலும் கூட, அவர்களுடைய உரிமை பறிக்கப்படுகிறது என்ற எண்ணத்திற்கு யாரும் இடம் தரக்கூடாது.

அரசியல் சட்டத்திலும் சரி, ஆட்சி மொழிச் சட்டத்திலும் சரி, ஒவ்வொரு மாநிலத்திலும் இருக்கிற சிறுபான்மை மொழி பேசுகிற மக்கள் அங்கே இருக்கிற பெரும்பான்மை மொழியைத் தவிர வேறு ஒரு மொழியைப் பேசுகிற மக்கள் ஒரு குறிப்பிடத்தக்க அளவுக்கு மேல் இருப்பார்களேயானால், அதற்காக மத்திய அரசு கமிஷனை நியமித்து அந்த மக்களின் எண்ணிக்கையை, புள்ளி விவரங்களை எடுத்து, அது ஒரு வட்டாரமாக அமையுமேயானால் அந்த வட்டாரத்தையே அந்த மொழிக்கே உரியதாக ஆக்கி, மாநில ஆட்சி மொழிக்கு ஈடாக வாய்ப்புகளும், உரிமைகளும் தரப்பட வேண்டும் என்ற கருத்து, ஆட்சி மொழிச் சட்டத்திலும், அதற்கு முன்னாலேயே அரசியல் சட்டத்திலும் இடம் பெற்றிருக்கிறது.

1986 நவம்பர் 13] [திரு. க. அன்பழகன்]

ஒரே மாநிலத்திலேயே இரண்டு மொழிகள் ஆட்சி மொழியாக இருக்க வேண்டிய நிலைமை கூட இருக்கிறது. யு.பி.யிலே இந்தி மொழி மட்டும் இருந்தால் போதாது என உருதுவிற்காக போராடிக் கொண்டிருக்கிறார்கள். அஸ்ஸாமிலே ஆங்கிலத்தோடு அஸ்ஸாமிய மொழி மட்டும் அல்ல, இன்னொரு பகுதி மொழியும் இடம் பெற வேண்டும் என்ற போராட்டம் இருக்கிறது. மேற்கு வங்காளத்திலேகூட ஒரு பகுதியில் உள்ள மக்களின் சார்பாக ஒரு மொழிக்காக ஒரு போராட்டம் கூட எழுந்திருக்கிறது. அது சரியா தவறா என்பது வேறு. அதுவும் ஒரு மொழி அடிப்படையிலே பிறந்த உணர்வுதான். இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கிறபோது ஒரு மாநிலத்திலே ஒரு மொழி மட்டும் அல்ல; இன்னொரு மொழியும் அலுவலக மொழியாக தேவைப்படுகிறது. உதாரணத்திற்கு புதுச்சேரியிலே, அங்கு ஆட்சி மொழி எதுவாக இருந்தாலும் ஒரு பகுதி ஏனாம் என்றும், இன்னொரு பகுதி மாஹி என்றும் அழைக்கப்படுகிறது என்று சொன்னால், ஒரு இடத்திலே தெலுங்கு, இன்னொரு இடத்திலே மலையாளம் இருக்கிறது. இங்கே பாண்டிச்சேரி காரைக்காலிலே தமிழ் வழக்கிலே இருக்கிறது. இப்போது ஆட்சித் தொடர்பு மொழியாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பாக உள்ளது ஆங்கிலம். ஏற்கனவே அங்கே இருந்தது பிரஞ்சு. இவ்வளவு மொழிகளையும் வைத்துக் கொண்டு ஒரு சிறிய மாநிலம், மாவட்ட அளவுக்குக் கூட பரப்பளவு இல்லாத ஒரு மாநிலம் இங்கே ஆட்சி புரிந்து வருகிறது. ஆனால் அகில இந்திய அளவிலே 75 கோடி மக்கள் இருக்கிறார்கள். 14 தேசிய மொழிகள் இருக்கின்றன, அதிலே 180 தனித்தனி மொழிகள் வழக்கில் உள்ளன. இந்தியிலேயே 18 பெரும் பிரிவுகள் இருக்கின்றன.

அந்த இந்தி 18 பிரிவுகளிலேயும் 'சிந்தி' (Sindhi) என்ற மொழி இருந்தது. அதற்கு தனி தகுதி, உரிமை வேண்டும் என்று கேட்டு இப்போது அது பட்டியலிலே இடம் பெற்று விட்டது. ராஜஸ்தானிலே கூட அப்படிக் கேட்கிறார்கள். மைதிலி என்ற ஒரு மொழி அங்கே இருக்கிறது. அதிலே எம்.ஏ. பட்டம் கூட இருக்கிறது. அந்த மைதிலி மொழியிலேதான் துளசிதாசர் எழுதிய 'ராமசரிதம்' எழுதப்பட்டிருக்கிறது. இன்றைக்குப் பேசப்படுகிற இந்தி மொழியிலே அல்ல. இவைகளைப் பற்றியெல்லாம் தெரிந்த காரணத்தாலேதான் ஜவகர்லால் நேரு அவர்கள் இணைதான் இந்தியே உருவாக்கப்பட வேண்டும் என்று சொன்னார்.

ஒரு முறை மூதறிஞர் இராஜாஜி அவர்களைப் பார்த்து, ''நீங்கள்தானே இந்தி மொழியை படிக்க வேண்டும் என்று ஆரம்பத்திலே கொண்டு வந்தீர்கள். இப்போது இந்தியை எதிர்க்கிறீர்களே. இப்போது இந்தியை நீங்கள் படிக்கச் சொல்கிறீர்களா இல்லையா'' என்று யாரோ கேட்டதற்கு அவர் சொன்னார். நான் முதலிலே இந்தியை எல்லோரும் படிக்க வேண்டும்

என்றுதான் சொன்னேன். ஆனால் இப்போது சொல்கிறேன், முதலிலே இந்தியை பள்ளிக் கூடம் போய்ப் படிக்கச் சொல்லுங்கள் "Let Hindi be sent to school to become a language" என்று இராஜாஜி அவர்கள் சொன்னார்கள்.

அந்த இந்தி மொழியைப் பரப்புவது பற்றி இன்றைக்கு இந்தியாவினுடைய பிரதமர் திரு. ராஜிவ் காந்தி அவர்களும் பேசியிருக்கிறார்கள். இன்றைக்கு அந்த மொழியையா திரு. ராஜிவ் காந்தி அவர்கள் அனைத்து உலகத் தொடர்புக்குப் பயன்படுத்துகிறார்? வெளிநாட்டு பிரமுகர்களை சந்திக்கிற போதோ அல்லது நுணுக்கமான ஒப்பந்தங்களை எழுதுகிறபோதோ அல்லது சட்ட ஷரத்துக்கள் ஆராயப் படுகிறபோதோ இந்தியையா உபயோகப்படுத்துகிறார்கள்? இவைகளுக்கெல்லாம் எந்த மொழியைப் பயன்படுத்தி இந்தியாவிலே இன்றைய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களும் மற்ற அமைச்சர்களும் பணியாற்றுகிறார்கள்? அப்படி அதற்குத் துணையாக இருக்கிற மொழி என்பதால்தான் ஆங்கிலத்தை நீக்கக் கூடாது என்று சொல்லுகிறோமே தவிர வேறு அல்ல. ஆங்கிலம் என்னுடைய தாய் மொழி அல்ல ஷேக்ஸ்பியரை திருவள்ளுவரை விட பெரிதாக மதிக்க எனக்கு எந்தவிதக் காரணமும் இல்லை,

(முற்பகல் 10-10)

அதைப்போல இந்திமொழி மக்கள், இந்தி வட்டாரத்து மக்கள் இந்தி மொழிப் புலவரை மதிப்பதைப் போல தமிழ்ப் புலவரை மதிக்க காரணமில்லை, அவசியமில்லை. நான் அப்படி விரும்புகிறவனும் அல்ல. எங்கள் மீது இந்தியைத் திணிப்பதற்கு யாருக்கு, என்ன உரிமை இருக்கிறது? நாங்கள் மனிதர்கள் அல்லவா? எங்களுக்குத் தேவைப்பட்டால் பிரெஞ்சும் படிப்போம், அவசியமானால் சோவியத் மொழி, ரஷ்ய மொழி படிப்போம். ஆனால் அறிவு வளர்ச்சிக்கு அவசியம் என்ற நிலைமை இல்லாதபோது ஒரு ஆட்சிக்காக, டெல்லியிலே ஒரு ஆட்சி இருக்கிறது என்பதற்காக நாமெல்லாம் இந்தியைப் படிக்க வேண்டுமென்றால், இந்த நாட்டு மக்கள் பிறமொழியாளர் எல்லோரும் அடிமைகளா? கிடைத்த சுதந்திரம் விந்திய மலையோடு நின்று போய் விட்டதா? அன்று டி.டி. கிருஷ்ணமாச்சாரியார் சொன்னதைப்போல கிடைத்த சுதந்திரத்தினுடைய பலனை முழுவதுமாகப் பெற்று நிர்வாகத்தை நடத்துவதற்கு வடமாநிலத்தவர்க்கு மட்டுமே உரிமையா? India is Bharath. That is true. But it is only U.P. and M.P. என்று டி.டி.கே. சொன்னார்கள். அந்தக் கருத்தை இன்றைக்கு டெல்லி அரசு ஏற்றுக்கொள்கிறதா? ஏற்றுக்கொள்ள முன்வருமா? குமரி முனையிலிருந்து காஷ்மீரம் வரையிலும் ஒரே நாடாகத் தான் இருக்க வேண்டும். அதற்காகத்தான் அரசியல் சட்டம், அதை நான் மதிக்கிறேன். ஆனால் காஷ்மீர அரசுக்குத் தனிச் சலுகை இல்லையா? அரசியல் சட்ட நீதி அத்தனையும் காஷ்மீரத்தில் செல்லுபடியாகுமா? அஸ்ஸாமில் இன்றைக்கு

1986 நவம்பர் 13] [திரு. க. அன்பழகன்]

மத்திய அரசு மற்ற மாநிலத்து மக்கள், அங்கே குடியேறியவர்களுக்கு வாக்குரிமை இல்லையென்பதை ஏற்றுக்கொண்டிருக்கிறதே, அதை அப்படியே மத்திய அரசாங்கம் வேறொரு மாநிலத்தில் அதேமாதிரி கிளர்ச்சி வந்தால் ஏற்றுக்கொள்வார்களா? மேகாலயா, மிசோரம் போன்ற அந்த எல்லையோரப் பகுதியிலே உள்ள மக்கள் வாணிபம் நடத்த, வெளிநாட்டுப் பொருளை வாங்க அவர்களுக்கு சுதந்திரம் உண்டு என்று அனுமதி இருக்கிறதே, அதையா நாங்கள் கேட்கிறோம். எங்கள் முன்னோர்கள் காலத்திலிருந்து, கால எல்லை எதுவென்று சொல்ல முடியாத காலத்திலிருந்து இருந்து வருகிற மக்களின் தாய் மொழி தமிழ்; ஒரு வரலாற்று ஆசிரியர் எழுதுகிறபோது Tamil is as old as 8000 years என்று எழுதுகிறார்கள். எட்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் பிறந்த மொழியாக, ஆங்கிலத்திற்கு அடுத்தபடியாக வல்லமை பெறக்கூடிய மொழியாக விளங்குகிற ஒரு மொழி தமிழ், அந்த மொழியை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொன்னாலும் கூட, அவர்களுடைய மொழியை வலுவில் திணிக்க என்ன நியாயம் உள்ளது? ஒரு வட்டாரத்து மொழிதானே இந்தி. குஜராத்தில் எல்லோருக்கும் இந்தி தெரியுமா? மராட்டியத்தில் எல்லோருக்கும் இந்தி தெரியுமா? வங்காளத்தில் கல்கத்தா ரிக்ஷாக்காரனுக்கு இந்தி தெரியும். கிராமத்து மக்களுக்கு இந்தி தெரியுமா? இந்தியாவில் ஏதோ எல்லோரும் இந்தியைப் படித்து விட்டதைப் போலவும், தெரிந்து கொண்டதைப் போலவும் ஒரு பாவனை செய்து, ஒரு திரையை, திரைச்சீலையைத் தொங்கவிட்டு அதன்படி இந்தி தான் ஆட்சி மொழி என்பதால் அந்த கித்தாப்பும், பெருமையும் யாரோ ஒரு சாராருக்குத் தான் போய்ச்சேரும் என்பதற்காகச் செய்யப்படுகிற ஒரு தவறான, முறைகேடான வருந்தத்தக்க காரியமாகும்: இதைத் தடுத்து நிறுத்துவதற்கு, நான் குறிப்பிட விரும்புகிறேன், எத்தனையோ முறை, எத்தனையோ வகையில் தமிழ் நாட்டில் போராட்டம் நடைபெற்று இருக்கிறது. 40 ஆண்டுக்காலமாக இந்த நாட்டிலே 1938-ல் தொடங்கி இன்றைக்கும், நாளைக்கும் ஒரு போராட்டம் காத்திருக்கிறது. அது சரியோ, தவறோ அது அவரவர்களுடைய கருத்து. ஆனால் அப்படிப்பட்ட ஒரு போராட்டம் தேவைப்பட்ட காரணத்தால் நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். அந்த அளவிற்குப் போராட வேண்டிய நிலைமை இருக்கிற போது இந்தி மொழி திணிப்பதை நிறுத்த வேண்டுமென்று சொல்கிறபோது, நாட்டில் ஒரு மத்திய அரசாங்கம் எந்த மொழியில் செயல்படும்? திரு. ரமணி அவர்களும் மற்ற நண்பர்களும் ஏதோ ஒரு லட்சிய உணர்விற்காக கருத்து வேறுபாட்டிற்கு ஆளாகியிருந்தாலும் இடையிலே நம் முடைய தமிழ் ஏற்றுக்கொள்ளப்படுகிற நாள் வரைக்கும், ஆங்கிலம்தானே நீடிக்கமுடியும். நாளைக்கே தமிழ் ஏற்றுக் கொள்ளப்படட்டும், நாங்கள் ஆங்கிலத்திற்கு வாதாடுவதை நிறுத்துகிறோம். உடனடியாக ஆந்திர மொழியோ, மலையாள மொழியோ, மற்ற மொழிகளோ ஏற்றுக்கொள்வதும் ஏற்றுக் கொள்ளாததும் அந்தந்த மாநில அரசுகள் வற்புறுத்துவதைப்

[திரு. க. அன்பழகன்] [1986 நவம்பர் 13

பொறுத்தது. தமிழை நாளையதினம் திரு. ராஜீவ் காந்தி மத்திய அரசினுடைய இரண்டு ஆட்சி மொழிகளில் ஒன்றாக, இந்தியோடு தமிழ் ஏற்றுக்கொள்ளப்படும் என்று சொல்லட்டும். அதற்கு பிறகு மொழி பெயர்ப்பு எப்படி வேண்டுமானாலும் செய்யட்டும். தவறாக இருந்தாலும் கூட நாங்கள் திருத்திக் கொள்கிறோம். அந்த அளவிற்கு ஏற்றுக்கொண்டால் இந்தப் பிரச்னையைத் தீர்க்கலாம். அப்படித் தமிழை ஏற்றுக்கொள்ள முடியாது என்று நீங்கள் சொன்னால் ஆங்கிலத்தைத் தவிர உங்களுக்கும் எங்களுக்கும் தொடர்பு கொள்ள என்ன மொழி இருக்கிறது? பண்டித ஜவஹர்லால் நேருவிற்கும், பெருந்தலைவர் காமராஜ் அவர்களுக்கும் இடையில் இருந்த தொடர்பிற்கு எந்த மொழி உதவியது? பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களை இராஜாஜி அவர்கள் சந்தித்தபோது எந்த மொழியில் பேசினார்? மகாத்மா காந்தியை சத்தியமூர்த்தி அவர்கள் சந்தித்தபோது எந்த மொழியில் பேசினார்? தேசிய கவி பாரதியார் கூட மகாத்மா காந்தியைச் சந்தித்தார். அப்போது எந்த மொழியில் பேசினார்? அரசியல் நிர்ணய சபையில் எந்த மொழியில் கருத்துத் தெளிவு அளிக்கப்பட்டது?

இன்றைக்கு நான் கேட்கிறேன். அரசியல் நிர்ணய சபையில் நிறைவேற்றப்பட்ட சட்டம் அனைவராலும் ஒப்புதல் அளிக்கப் பட்டு, அத்தனைபேரும் கையொப்பமிட்ட அரசியல் நிர்ணய சபையில் நிறைவேறிய அரசமைப்புச் சட்டம் ஆங்கிலத்தில் ஏற்பட்டதுதான். இன்றைக்கும் இந்தி மொழி பெயர்ப்பு வடிவம் இன்னும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஏற்றுக்கொள்ளவும் முடியாது. ஏனென்றால் Hindi is a growing language. இந்தி ஒரு வளர்கிற மொழி. வடிவமைப்பு மாறிக்கொண்டே இருக்கிற நிலையில் உள்ள மொழி. ஒரு கலவையாக உருவாக வேண்டிய நிலைமைக்கு ஆளாக்கப்பட்ட மொழி. ஒருமுறை நான் சொன் னேன். சமஸ்கிருத மொழி இன்றைக்கு பேச்சு மொழி இல்லை, அது இறந்து போன மொழி என்றேன். ஒரு நண்பருக்குக் கோபம் வந்தது. அவர் சொன்னார், அது பேச்சு மொழியல்ல, இறந்து போன மொழி என்கிறீர்களே, அது தவறு என்றார். ஏனென்று கேட்டேன். அது பிறக்கவே இல்லை என்றார். ஏன் பிறக்க வில்லை என்றேன். அது செய்யப்பட்ட மொழி. பேசப்பட்ட மொழிகள் பிராகிருத மொழிகள். இது கிளாசிக்கல் லாங்வேஜ் பிரிப்பேர்ட் லாங்வேஜ், உருவாக்கப்பட்ட மொழி என்றார். It is prepared as a classical language, for writing purpose. இன்றைக்கு இந்தி மொழி கூட உருவாக்கப்படுகிற மொழியினுடைய கட்டத்தை அடைந்து கொண்டு இருக்கிறது. என்பதை இந்தி வட்டாரத்துப் பெரியவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். It is being created: ஆகவே அப்படிப்பட்ட ஒரு மொழியைக் கொண்டு இந்தியா முழுவதும் ஒரே மொழியை வைத்து ஆட்சி நடத்த வேண்டும் என்று கருதினால், நான் சொல்வேன், இது கரிகால் பெருவளத்தான் காலம் அல்ல.. இன்னும் சொல்லப்போனால் ராமராஜ்யம் மறுபடியும் வராது!

1986 நவம்பர் 13] [திரு. க. அன்பழகன்]

இன்னும்திட்டவட்டமாகச் சொன்னால்அக்பரோ, ஔரங்கசீப்போ இனி ஆட்சி நடத்த முடியாது. எனவே ஜனநாயகத்தில் ஆட்சியிலே உள்ளவர்களுக்காக ஒரு மொழி என்பது மிகப் பெரிய தவறு இந்தியாவிலே வாழ்கிற மக்களுக்காகத்தான் ஆட்சியே தவர. ஆதிக்கம் செலுத்த வல்லவர்கட்காக அல்ல. நான் என்னுடைய உரிமையை இழக்கத் தயார், ஆனால் என்னுடைய மக்களுடைய உரிமையை இழக்க நான் தயாராக இல்லை. நான் யாருக்கும் அடிமையாகிப் போய்விடலாம். ஒரு அன்பழகனோடு அது ஒழிந்துவிடும், ஆனால் தமிழ்நாட்டு மக்கள் வரலாற்று அடிப்படையிலே பிற மொழி ஆதிக்கத்தால் பல முறை பாதிக்கப்பட்ட மக்கள். பிற மொழித் தொடர்பால் பல காலம் சிதைக்கப்பட்ட மொழிக்குச் சொந்தக்காரர்களாக ஆனவர்கள்.

இன்னும் சொல்லப்போனால் தமிழ்தான் தெலுங்கு ஆயிற்று என்பது வரலாறு. அந்தத் தெலுங்குக்குத்தான் ஆதியிலே அரவம் என்று பெயர். தமிழ்தான் கன்னடம் ஆயிற்று. தமிழ்தான் மலையாளம் ஆயிற்று. ஆயினும் நாம்கூட வேறுபடுத்திப் பேசிக்கொண்டு இருக்கிறோம். அப்படி மலையாளம், தெலுங்கு, கன்னடம் எல்லாம் ஒருகாலத்திலே வடமொழி ஆதிக்கத்தாலே அவ்வப்பகுதியிலே வழங்கிய தமிழ் சிதைந்து, வரலாற்றைத் தெரிந்த மறைமலை அடிகளும், பன்மொழிப் புலவர் கா. சு. பிள்ளையும், நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களும், இந்தியைத் தமிழ்நாட்டு மக்கள் படிக்கக்கூடாது, படிக்க வைக்கக் கூடாது, கேடு வரும், தாய் மொழிக்குத் தீங்கு வரும் என்று சொன்னார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். மனித உரிமை என்ற அடிப்படையில் தமிழ் மொழிக்கும் மத்தியிலே ஆட்சி மொழி உரிமை கிடைக்க வேண்டும். நாம் 5 கோடி மக்கள். ஈழத்திலே இருக்கிற 25 லட்சம் தமிழர்கள் எப்படி போராடுகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். அதிலே என்ன விளைவோ, அது வேறு. 6 கோடி மக்கள் அரபு நாட்டிலே. அந்த 6 கோடி மக்களுக்கு 26 நாடுகள் சொந்தம். 5 கோடி மக்களுக்கு இந்தியாவிலே, நாம் கேட்பது எங்கள் மொழிக்கு சம உரிமையுள்ள இடம் தாருங்கள் என்பதுதான். தமிழ் மக்களுக்கு மட்டும் தர முடியாது என்பதால் இந்தியாவிலே உள்ள 14 தேசிய மொழிகளுக்கும் தாருங்கள். எந்தெந்த மொழி மாநில ஆட்சி மொழி என்று ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்கிறதோ, அந்த மாநிலங்களை மதிப்பதற்காக அந்த மொழிகளையும், 'லிங்க் லேங்குவேஜ்' ஆக ஏற்றுக்கொள்ளுங்கள். எங்கள் மொழியை 'ராஷ்டிரபாஷாவாக' ஆக்கச் சொல்லவில்லை. தேசிய மொழி என்று சொல்லச் சொல்லவில்லை. எங்கள் மொழியை வடக்கே உள்ளவர்களைப் படிக்கச் சொல்லவில்லை, எங்களோடு உறவு வைத்துக்கொள்ள, எங்கள் மொழியை ஏற்றுக்கொள்ளுங்கள். இந்த வேண்டுகோளைக் கூட ஏற்றுக்கொள்ள கூடாதா வடக்கே உள்ளவர்கள்.

[திரு. க. அன்பழகன்] [1986 நவம்பர் 13

இன்னும் சொல்லப் போனால் வடக்கே உள்ளவர்கள், தங்கள் இந்தியே இந்தியாவினுடைய ஆட்சி மொழியாக ஆகி விடும் என்று நம்புகிற காரணத்தாலேதான், அந்த உணர்வுகள் அடிப்படையிலே செயலாற்றிய காரணத்தாலேதான், தொடர்ந்து இந்திய அரசாங்கம் இந்திக்கு எல்லாவிதமான சலுகைகளையும் அளித்து வருகிறது. பிளானிங் கமிஷன் என்று ஒன்றை மத்திய அரசு உருவாக்கியது. அது It has become a Super-Cabinet அமைச்சரவைக்கு மேற்பட்ட அமைச்சரவையாக மாறிவிட்டது என்று பல பொருளாதார நிபுணர்களே குறிப்பிட்டார்கள். அது பொருளியல் துறையிலே, சமுதாயத் துறையிலே, நாட்டிலே ஏற்படவேண்டிய திட்டங்களுக்கு ஆலோசனை கூறுவதற்கு மத்திய சர்க்காரால் உருவாக்கிய குழு என்ற முறையிலே அதிக மாறுபாடு எழ இடம் இல்லாவிட்டாலும், அரசியல் சட்டத்திலே அந்தக் குழு அமைக்க விதி கிடையாது. அமைச்சரவையிலே போடப்பட்ட தீர்மானமே தவிர, பாராளுமன்றத்தில் கூட அதற்கு ஒரு சட்டம் நிறைவேற்றவில்லை அந்தக் குழுவிற்கு இந்தியைப் பரப்புகிற பணி ஒப்படைக்கப் பட்டு இருக்கிறது. இது எப்படி நியாயம்? 'பிளானிங் கமிஷன் எல்லோருக்கும் பொதுவானது. அது ஒரு வட்டாரத்து மொழி யான இந்தியைப் பரப்புவதற்காக கோடிக்கணக்கான ரூபாய் களை ஒதுக்கிச் செலவிட கடந்த 15 ஆண்டுகாலமாக வழி செய்து வருகிறது. The Planning Commission is entrusted with the work of spreading Hindi என்ன முறை இது? அப்படி மத்திய அரசு இந்திக்கு அளவுகடந்த நிதியைக் கொடுத்து, செல்வாக்கைக் கொடுத்து பிற மொழிகள் இந்தியாவிலே இருப்பதை உலகத் திற்கே தெரியாத அளவிற்குச் செய்கிற ஒரு ஆதிக்க மனப்பான் மைக்கு ஆளாகி இருக்கிறது.

இன்றைக்கு மத்திய அரசின் அமைச்சர் திரு. பூட்டாசிங் அவர்கள் ஒரு அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். வெளிநாட்டு உறவுகளுக்கு எல்லாம், தூதரகாலய நடவடிக்கைகளுக்கு எல்லாம் ஒப்பந்தங்களுக்கு எல்லாம், இனி இந்தி மொழியிலேயே நடத்துங் கள் என்று நான் திரு. பூட்டாசிங் அவர்களைக் கேட்டுக்கொள் கிறேன். இந்தி மொழியிலே நீங்கள் ஒப்பந்தம் செய்துவிட்டு வந்தால், இங்கே வந்தவுடனே இரண்டு அர்த்தம் சொல்வார்கள். அதற்கு பின்னால், ஒப்பந்தத்தினுடைய ஷரத்து நிலைநாட்டப் பட முடியாத ஒரு சிக்கலுக்கு ஆளாகும். அந்த பலகீனத்தை உணரவேண்டும். என்னுடைய தமிழ் மொழி உயர்ந்த மொழி என்பதற்காக உடனே, உயர்நீதிமன்றத் தீர்ப்பை தமிழிலே எழுது என்று சொல்ல நான் தயாராக இல்லை- அதற்கு ஒரு கால கட்டம் வந்தால்தான் முடியும்.

விஞ்ஞான படிப்பிலே எல்லாக் கட்டப் படிப்பும் தமிழாலே முடியும் என்று நான் கூறினால் அது தவறு. என்னுடைய தாய் மொழிப்பற்று வேறு எவருடைய தாய்மொழிப் பற்றையும் விடக் குறைந்தது அல்ல. ஆகவே தாய்மொழிக்கு கிடைக்கவேண்டிய

1986 நவம்பர் 13] [திரு. க. அன்பழகன்]

இடத்தை நாம் படிப்படியாக வளர்த்துத் தரவேண்டுமே தவிர திடீரென்று கோபுரத்திலே ஏற்றி, பிறகு அது கவிழ்ந்துவிடுகிற நிலைமைக்கு நாம் ஆளாகக்கூடாது.

அதுபோல எண்ணிப்பார்க்காமல் இந்தி மொழியை எந்த அளவிற்கு அவர்கள் புகுத்துகிறார்கள் என்றால், வெளிநாட்டுத் துறையிலே, வெளி நாட்டு உறவுகள் வளர அத்துறையில் பணியாற்றுகிற அத்தனை பேர்களும் இந்தியில் செயல்படவேண்டுமா. அத்தனை பேரும் இந்தி வட்டாரத்துக்காரர்களா? ஆந்திரக் காரர்கள் கிடையாதா? கேரளத்துக்காரர்கள் கிடையாதா? ஆங்கிலத்திலே சிறந்த திறமையைப் பெற்றவர்கள் கிடையாதா? அப்படி இருக்கிறபோது மத்திய சர்க்கார் இப்படி ஒரு அறிக்கையை வெளியிடுகிறது என்றால் அவர்கள் நம்மைப் பார்த்து 'நீங்கள் என்னதான்சொன்னாலும், இந்தியை எப்படியும் நாங்கள் ஒவ்வொரு இடமாக புகுத்திக் கொண்டுதான் வருவோம், அதற்கு ஆட்பட்டுத்தான் தீரவேண்டும் அடிமைப்பட்டுத்தான் தீரவேண்டும்'' என்ற கருத்துதான் அவர்கள் அறிக்கைகள் மூலமாக அவ்வப்போது வெளியாகிறது.

(முற்பகல் 10—20)

அப்படிப்பட்ட நிலைமையைத் தடுத்து நிறுத்துவதற்கு என்னதான் வழி என்று எங்களைப் போன்றவர்கள் எண்ணிப் பார்த்தபோது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நாங்கள் பலமுறை கூடி விவாதித்தபோது, தமிழக அரசு ஒரு திட்டவட்டமான முடிவோடு இருப்பதாக எங்களுக்குப் புலனாகாத வகையில் முதலமைச்சர் கருத்துக்கள் என்று வெளியிடப்பட்ட கருத்துக்கள், அரசியல் சட்டத்தைத் திருத்தத் தேவையில்லை என்று அவர் சொன்னதாக ஏடுகளில் வெளிவந்தது. அப்படிப்பட்ட முதலமைச்சர் அறிவிப்புக்கு 2 நாட்களுக்கு முன்னால் ஆளுங்கட்சியின் செயற்குழுவிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி அரசியல் சட்டத்தைத் திருத்துவதுதான் பாதுகாப்பைத் தரும் என்ற கருத்து வரவேற்கிற முறையில் இடம் பெற்றிருந்தாலும், அதற்கு பிறகு மறுபடியும் தேவையில்லை என்று முதல்வரே சொன்னார். எங்களுடைய போராட்டத்தை தரம் குறைந்த போராட்டம், யூஸ்லெஸ் போராட்டம் என்றும் சொன்னார்கள். நான் அதற்காக வருத்தப்பட மாட்டேன். அரசியலிலே இது கூடச் சொல்லாவிட்டால் வெவ்வேறு கட்சியில் இருக்க முடியாது. ஆகவே அப்படிச் சொல்வது வரவேற்கத் தக்கது. ஆனால் அரசியல் சட்டத்தைத் திருத்தத் தேவையில்லை என்று முதலமைச்சரே சொல்லிவிட்டார் என்று எண்ணிய போது தமிழ்நாடு கைவிடப்பட்டு விட்டது என்ற கவலை எங்களுக்கு ஏற்பட்டது. அந்தக் கவலை காரணமாகத்தான், விளைவுகளைப் பற்றிக் கவலைப்படுவது இனி விபரீதத்திற்கு இடம் தந்து விடும் என்ற நிலையில் ஒரு போராட்டத்தை மாநில அரசுக்கு எதிராக அல்ல, மத்திய அரசினுடைய நடவடிக்கைகளுக்கு எதிராக, தமிழ்நாட்டு மக்களுடைய உணர்ச்சிகளை

[திரு. க. அன்பழகன்] [1986 நவம்பர் 13

எடுத்துக்காட்ட நடத்துவது என்று தீர்மானித்தோம். ஒரு காலத்தில் ராஜாஜி அவர்கள் எப்படிப்பட்ட உணர்வுகளை வெளியிட்டாரோ, இன்னும் நேரம் இருக்குமானால் அதைப்பற்றி விளக்கிச் சொல்ல முடியும், பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் என்ன என்ன சொன்னாரோ அவற்றை எல்லாம் உள்ளத்திலே கொண்டுதான் போராடத் தீர்மானித்தோம். இந்த நாடு ஒன்றாக இருக்க வேண்டுமானால் இந்தி ஆட்சி மொழி ஆகக் கூடாது. இந்தி ஆட்சிக்கு வருமானால் நாடு ஒன்றாக இருக்காது என்று காமராஜ் அவர்கள் அன்றைக்கே சொன்னார்கள். எனவே அப்படிப்பட்ட இந்தித் திணிப்புக்கு இடம் தரக் கூடாது என்ற நல்ல எண்ணத்தோடு, ஒரு வகையில் ஒருமைப்பாட்டை இன்னும் எங்களுடைய உள்ளம் ஏற்றுக்கொள்ளுகிற காரணத்தால்தான் அந்த ஒருமைப்பாட்டுக்கு உட்பட்டு, இந்தி திணிப்பை எதிர்ப்பதற்காக அரசியல் சட்டத்தினுடைய 17-வது பகுதியில் அதனுடைய முதல் வரி "Hindi in Devanagari script will be the official language of India." என்பதை நீக்க...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது உங்களுடைய வெளி விவகாரம். இங்கே அது வேண்டாம்.

திரு க. அன்பழகன்: அதனுடைய கருத்தை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கருத்து இல்லை. நீங்கள் செய்யப்போவதை என் முன்னால் சொல்ல வேண்டாம்.

திரு க. அன்பழகன்: இங்கே நான் கொஞ்சமாட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை வெளியே பேசலாம். நீங்கள் எடுத்த முடிவுகளை இங்கே வந்து பேச வேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் என்பதைச் சொல்ல வேண்டாம்.

திரு க. அன்பழகன்: பேரறிஞர் அண்ணா அவர்கள் அரசியல் சட்டத்தை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது நல்லது அல்ல. அரசியல் சட்டத்தைப் பற்றி இங்கே பேசுவது, விமர்சிப்பது நல்லது அல்ல.

திரு. க. அன்பழகன்: நாட்டுக்கே தெரிந்த உண்மை. இந்த அவையிலே சொல்ல வேண்டாம் என்றால் நான் சொல்லவில்லை. நாட்டுக்கே தெரியும். எல்லோருக்குமே தெரியும். தெரிந்ததை சொல்லுவது நேரத்தை வீணாக்குவதுதான். எனவே அப்படி ஒரு கடமையில் ஈடுபடுவதாக நாங்கள் அறிவித்துள்ளபோது, நல்ல வேளையாக இந்த நேரத்தில் இப்படி ஒரு தீர்மானத்தை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே கொண்டு வர முன்வந்ததும், ஒரு வேளை நாங்கள் மேற்கொண்ட கடமைகளினுடைய விளைவாகலாம். இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றும் நல்ல சூழ்நிலை உருவாகி இருக்கிறது என்று

1986 நவம்பர் 13] [திரு. க. அன்பழகன்]

நான் நம்புகிறேன். இந்தச் சூழ்நிலையில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுகிற அளவோடு நின்றுவிட முடியாது. இது இங்கே நிறைவேற்றப்பட்டால் கூட, எத்தனையோ முறை வற்புறுத்திச் சொல்லப்பட்டாலும் கூட உரிய பலன் இல்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள், உடனடி பலன் இல்லை. 1974-லே இந்த மன்றத்திலே அந்தக் கருத்து இடம் பெற்றது, உடனடி பலன் கிடைக்கவில்லை. இப்போது இந்தத் தீர்மானம் வருகிறது. உடனடி பலன் கிடைக்க வேண்டும் என்றால் போராட வேண்டும். இந்த அரசு ஆட்சியில் இருப்பதே தமிழ் மக்கள் தந்த வாக்கால்தான். எனவே அந்தத் தமிழ் மக்களுக்கு செலுத்துகிற நன்றியாக, கடமையாக அறிஞர் அண்ணா அவர்களுக்கு நாம் கடமைப்பட்டவர்கள் என்பதை மறவாதவர்களாக இந்த மாநில அரசு அந்த அளவுக்கு மத்திய அரசினிடத்திலே வலியுறுத்தி இதை நிறைவேற்றித் தருவதற்கான உறுதிமொழியைப் பெற முயற்சிக்க வேண்டும். அதை உறுதி மொழி என்று சொன்னாலும் மறுபடியும் பழைய வாக்குறுதி களைப் போன்ற வாக்குறுதியாக அல்ல. 3 மாத காலத்தில் அரசியல் சட்டத்தின் இந்தப் பிரிவைத் திருத்தி பண்டித நேரு அவர்களுடைய வாக்குறுதிக்கு இணங்க ஆட்சி மொழி பற்றிய கருத்து இடம் பெறச் செய்யப்படுவதை மத்திய அரசு ஒப்புக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட உறுதியான ஒப்புதலைப் பெறுகிற முயற்சிக்கு திராவிட முன்னேற்றக் கழகம் முழு அளவுக்கு ஒத்துழைக்கும். அந்த உறுதியைப் பெறுகிற முயற் சிக்குப் பேராதரவைத் தரும் திராவிட முன்னேற்றக் கழகம், அதை இங்கே எடுத்துச் சொல்லக் கூடாது என்பதால் அதற் கான போராட்டத்தை மிகத் தீவிரமாக நடத்தும் என்று தெரிவித்து இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறேன். வணக்கம்.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் மூலமாக கல்வி மற்றும் சட்ட அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திற்கு கொண்டு வந்திருக்கிற தனித் தீர்மானத்திலே நான் சார்ந்து இருக்கின்ற இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் எங்கள் கருத் துக்களை இங்கே சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

200 ஆண்டுகளாக அடிமைப்பட்டு கிடந்த காலத்தில் பல அடக்குமுறை நடவடிக்கைகளுக்குப் பிறகுதான் ஆங்கில மொழி அறிவை 5 சதவீத மக்கள் பெற்று இருக்கி றார்கள் என்பது நாம் அறிந்த ஒன்றாகும். அதே போன்று இன்றைக்கு கண் இருந்தும் குருடனாய், வாய் இருந்தும் ஊமை யாய், இன்னும் தமிழகத்தில் ஆங்கிலமே தெரியாத கோடிக் கணக்கான மக்கள் வாழ்கிறார்கள். படித்தவர்கள், பட்டதாரி கள் பயன்படுத்துவதைவிட சாதாரண மக்கள் மத்தியில் இன்று ஆங்கிலம் இருக்கிறதா என்பதை ஏன் கணக்கில் எடுத்துக்

[திருமதி டி. யசோதா] [1986 நவம்பர் 13

கொள்ளவில்லை என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்பு கிறேன். அடித்தளத்திலே இருக்கின்ற கிராமப்புறங்களிலே இருக் கின்ற மக்களும் எளிதிலே புரிந்துகொண்டு அவர்கள் அவர்களுடையதாய் ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலைமை தமிழகத்தில் ஆங்கிலத்திற்கு இருக்கிறதா என்பதையும் நீங்கள் பரிசீலிக்க வேண்டும், 15 மொழிகளில் ஒன்றுதான் இந்தி. அந்த 15 மொழிகளில் நாம் 8-வது ஷெட்யூலின் அடிப்படையில் அதை இந்த நாட்டு அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அந்த 15 மொழிகளில் ஒன்றுதான் இந்தி என்றாலும்கூட, நமக்கு இந்தி பிடிக்கவில்லை என்கிற காரணத்தால் அதை எவ்வளவு கேவலமாக நாம் விமர் சனம் செய்யமுடியுமோ, அந்த அளவுக்கு விமர்சனம் செய்கின் றோம். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்று சொன்னால், சில பத்திரிகைகளிலே இந்தி மொழியை 'லம்பாடி' என்று சொல் கிறார்கள். நம்முடைய அமைச்சராக இருந்தவர்கூட நடத்தை கெட்டவள் என்ற பொருள்படக் கூடிய அளவிற்கு அந்த மொழியை விமர்சனம் செய்திருப்பதைக்கூட நாம் பத்திரிகையிலே படித்திருக்கிறோம். இதுதான் தமிழன் பண்பாடு என்று சொன் னால், மற்றவர்கள் நம்மைப்பற்றி நம்முடைய தரத்தைப் பற்றி சிந்திக்க வேண்டிய நிலைமைகூட ஏற்படலாம்.

நான் இன்னும்கூட தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சில இக்கட்டான பிரச்சினைகளையெல்லாம் உங்களுக்கும் சேர்த்து பேராசிரியர் அவர்களே பதில் சொன்ன நேரத்திலே, அது இறுதி வடிவமாக இருந்தது. மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் குறிப்பிட்டபோது சொன்னார்கள். தமிழ் ஆட்சி மொழியாக நீடிப்பது, அது ஆட்சி மொழியாக ஆக்கப்பட்ட தற்குப் பிறகு ஆட்சிக்கு வந்தவர்கள் இதுவரை அந்த தமிழ் வளர்ச்சிக்கு அதிகமான நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்கின்ற ஆதங்கத்தோடு குறிப்பிட்டார்கள். நான் கூட அதைக் கேட் கின்ற நேரத்திலே பேராசிரியர் அவர்கள் சொன்னதை இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. இந்தி மொழிமீது பற்று இருக்கின்ற காரணத்தால் அவசர அவசரமாக அதைக் கொண்டு போய் கோபுரக் கலசத்திலே வைத்து, பின்னர் எங்கே அது கீழே சாய்ந்துவிடக் கூடிய நிலைமை ஏற்பட்டுவிடுமோ என்ற அக்கறையோடு சொன்னார்கள். அவசர அவசரமாக என்று சொல்வது 1967-லிருந்து 1986 வரையிலும் கிட்டத்தட்ட 19 ஆண்டுகளாக தமிழை ஆட்சிமொழியாக்கி—1956—லே இந்த தமிழகத்தை காங்கிரஸ் பேரியக்கம் ஆண்டு கொண்டிருந்த நேரத்திலே இந்தச் சட்டமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றப் பட்டு, அன்றைக்கு ஜனாதிபதியாக இருந்த டாக்டர் ராஜேந்திர பிரசாத்திடம் கையெழுத்திற்குப் போனது. டாக்டர் ராஜேந்திர பிரசாத் இந்தி மொழியைப்பற்றி தீர்மானிக்கின்ற அந்தக் கமிட்டிக்குத் தலைவராக இருந்தவர். குறிப்பாக சொல்ல வேண்டுமென்று சொன்னால், நமக்கு தமிழ் மீது எவ்வளவு பற்று இருக்கிறதோ அதைவிட இந்தி மொழி மீது பற்று, பாசம்

1986 நவம்பர் 13] [திருமதி டி. யசோதா]

அவருக்கு அதிகமாக இருந்தது என்பதைச் சொன்னார்கள் அதை மறுக்கமுடியாது. அப்படிப்பட்ட இந்தியை தம்முடைய உயிர் மூச்சாகக் கொண்டிருந்த டாக்டர் ராஜேந்திரபிரசாத் அவர்கள், இங்கேயிருந்து போன தீர்மானத்திற்கு எந்தவித மறுப்பும் இல்லாமல்—எத்தனையோ தீர்மானங்கள் திருப்ப திரும்ப வந்துவிடுகிறது—தமிழை ஆட்சிமொழியாக்க வேண்டுமென்று போன நேரத்திலே, உடனடியாக அதிலே கையெழுத்து போட்டுக் கொடுத்து, தமிழை ஆட்சிமொழியாக்கினோம்.

(முற்பகல் 10-30)

1956—லிருந்து 1986 வரை 30 ஆண்டு காலம். 10 ஆண்டுகாலம் காங்கிரஸ் ஆட்சியிலே இருந்தது. அதற்கு பிறகு 9 ஆண்டு காலம் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம். 10 ஆண்டு காலம் முடித்து இன்றைக்கு 11-ஆவது ஆண்டிலே அடி எடுத்து வைத்திருக்கிறது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் சழகம். ஆனாலும்கூட அந்த தமிழை ஆட்சி மொழி ஆக்கியதை குறித்து நாம் மேற்கொண்டு தமிழ் ஆட்சி மொழிக்குரிய இடத்தை தமிழகத்திலே பெறுவதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுக்கவில்லை. இன்னும்கூட பல இடங்களிலே தமிழே இல்லை. ஆங்கிலம்தான். சென்னையிலே இருக்கின்ற மக்கள்கூட கார்ப்பரேஷனிலிருந்து ஒரு வரி ரசீது வந்தால்கூட அதை படிக்க முடியாமல் பரிதவிக்கின்ற நிலை இருப்பதைப் பார்க்கின்றோம். காரணம் ஆங்கிலத்திலே வருகின்றது. மின் சார இலாக்காவிலிருந்து வருகின்ற பில்கள்கூட ஆங்கிலத்தில் வருகின்ற காரணத்தினால் படிக்க முடியாமல் பக்கத்து வீட்டிற்கு எடுத்து வருகின்ற நிலைமைதான் இருக்கிறது. ஆக, கண் இருந்தும் குருடர்களாக இருக்கிறார்கள். ஆக தமிழ் ஆட்சி மொழியாக ஆக்கப்பட்டதற்கு பிறகும் எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று சொல்லுகின்ற நாம், அந்தத் தமிழை இன்று வரையிலும் நடைமுறைக்கு கொண்டு வருவதிலே தயக்கம்தான் காட்டிக்கொண்டிருக்கிறோம். அதை மறுக்க முடியாது.

1974 என்று நினைக்கிறேன். என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால், அன்றையதினம் ஆட்சியிலே இருந்தவர்கள் திடீரென்று ஒரு அறிவிப்பை வெளியிட்டார்கள். தமிழ் வருடப் பிறப்பு 14-ந் தேதி ஏப்ரல் மாதம் டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டுகளில் எல்லாம் நடவடிக்கைகள் தமிழிலேயே நடைபெறும் என்று, உடனே அன்றைய சட்ட அமைச்சராக இருந்தவர் இன்றைய மாண்புமிகு உறுப்பினர் செ. மாதவன் அவர்கள் என்று நினைக் கின்றேன். அந்த அறிவிப்பு பத்திரிகையிலே வந்தவுடன் எல்லோரும் ஆச்சரியப்பட்டு போனார்கள். எப்படி என்று சொன்னால், திடீரென்று அறிவித்தார்கள். முன் கூட்ட வேலைகள் எதையும் செய்யாமலேயே அறிவிக்கப்பட்டது. அதற்குப் பிறகுதான் சட்ட அமைச்சர் அவர்கள் கோகலே ஹாலில் ஒரு கூட்டத்திலே பேசினார். நான் அந்த நேரத்திலே அங்கே போனபோது அவர்கள் சொன்னார்கள். உண்மையிலேயே

[திருமதி டி. யசோதா] [1986 நவம்பர் 13

எங்களுக்கு தெரியவில்லை. நாங்கள் தீர்மானம் போட்டு விட்டோம். 3 வாரம்தான் இருக்கிறது தமிழ் வருடப்பிறப்பு வருவதற்கு. டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டினுடைய நடவடிக்கை தமிழிலே வரும் என்று சொல்லிவிட்டோம். ஆனாலும்கூட இது எங்கள் அமைச்சரவை சிபாரிசு செய்து, அதை கவர்னர் அவர்களிடம் கொடுத்து, கவர்னர் அவர்களுடைய பரிந்துரையை ஏற்று ஜனாதிபதி அவர்கள் கையெழுத்து இட்டதற்கு பிறகுதான் இது கூட வரும் என்கின்ற நிலை இருப்பது எங்களுக்கு பின்னர் தான் தெரிந்தது என்று அவர்கள் உண்மையான ஒரு சூழ்நிலையை எடுத்துச் சொன்னார்கள்.

அது போலத்தான் இன்றைக்கும்கூட நாம் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நம்முடைய இன்றைய தீர்மானத்திலே அண்ணா அவர்கள் 1968 ஜனவரித் திங்களிலேயே நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தை, தமிழக முதல்வர் அவர்கள் 1977 ஜூலை திங்கள் 7-ம் நாள் ஆளுநர் அவர்களுடைய உரை வாயிலாக திட்டவட்டமாக தெரிவித்த ஒரு கருத்தினை மீண்டும் இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தித் திணிப்பு என்று வரும்போது நீச்சயமாக உங்களுக்கு நாங்கள் எந்த வகையிலுமே சளைத்தவர்கள் அல்ல. இந்தி திணிப்பு என்று வருகின்றபோது, அதை எதிர்க்கின்றவர்களிலே நாங்கள் ஒரு படி மேலேகூட போய் நிற்கின்றோம் என்பதை நாங்கள் குறிப்பிட வேண்டிய நிலையில் இருக்கின்றோம். உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்று சொன்னால், சமீபத்திலே மத்திய அரசுத் துறை வெளியிட்ட பி.ஐ.பி. சர்க்குலரை எதிர்த்து, முதன் முதலாக அறிக்கை வெளியிட்டு அவர்களுக்கு தந்தி கொடுத்தது எங்கள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைமை என்பதை இங்கே நாங்கள் குறிப்பிடாமல் இருக்க முடியாது. (மேசையை தட்டும் ஒலி).

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதைப்போல அரசியல் சட்டத்தில் மொழிகள் பற்றிய 17-வது பகுதியில் எந்த இடத்திலும் 15 மொழிகள் தேசிய மொழிகள் என்று குறிப்பிடப்படவில்லை. 8-வது ஷெட்யூலில் தான் 15 மொழிகள் ஆட்சி மொழி பற்றிய கமிஷன் அமைக்க வகை செய்து 344(1) ஷரத்தில் 'Representing the different languages specified in the VIII Schedule.' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. டிஃபரன்ட் லாங்குவேஜ், பல்வேறு மொழிகள் என்றுதான் 15 மொழிகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. தேசிய மொழிகள் என்று குறிப்பிடப்படவில்லை. இந்தி மொழியை பரப்புவதை இந்தியன் யூனியன் கடமையாகக் கொண்டுள்ளது என்று எனக்கு முன்னால் பேசியவர்கள் குறிப்பிட்டார்கள்.

351-வது ஷரத்தில், 'other languages of India specified in the Eighth Schedule'.. என்ற வாசகம் இருக்கிறது அதிலும் தேசிய மொழிகள் என்று போடப்படவில்லை. இந்தியை மட்டுமே இந்தியாவின் தேசிய மொழி அல்லது தேசிய பொது மொழி என்று அரசியல் சட்டப் பிரிவு 351 அங்கீகரித்துள்ளது.

1986 நவம்பர் 13] [திருமதி டி. யசோதா)

உலகிலுள்ள நாடுகள் மற்றும் சார்பு பிரதேசங்கள் 155-இல் 37 நாடுகள் மட்டுமே ஆங்கிலத்தை ஒரே ஆட்சிமொழியாக அல்லது கூடுதல் ஆட்சிமொழியாக பயன்படுத்துகின்றன. 27 நாடுகள் பிரெஞ்சு மொழியையும், 21 நாடுகள் ஸ்பானிஷ் மொழியையும் ஆட்சி மொழியாக, கூடுதல் மொழியாகக் கொண்டு இருக்கின்றன. அதேபோல், ஐரோப்பா கண்டம் முழுவதிலேயும், ஆங்கில மொழியை மட்டும் தனி ஆட்சி மொழியாக அல்லது கூடுதல் மொழியாக—பிரிட்டன், அயர்லாந்து, மால்டா ஆகியவை மட்டும் பயன்படுத்துகின்றன. ஐரோப்பா விலுள்ள மற்ற எந்த நாட்டிலும், மூன்று நாடுகள் நீங்கலாக, ஆங்கிலம் ஆட்சி மொழியாக இல்லை.

ரஷ்யா, பிரான்ஸ், ஜெர்மன், போர்ச்சுகல், ஸ்பெயின் போன்ற ஐரோப்பிய நாடுகள் எல்லாம் தத்தம் தேசிய மொழியையே ஆட்சிமொழியாகப் பயன்படுத்துகின்றன. அது மட்டும் அல்லாது, விஞ்ஞான தொழில் நுட்பத் துறையில் பெரும் முன்னேற்றம் அடைந்துள்ள ரஷ்யா, ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகள் ஆங்கிலத்தை ஆட்சிமொழியாகக் கொண்டவைகள் அல்ல. விஞ்ஞான தொழில் நுட்பத் துறைகளின் வளர்ச்சிக்கு ஆங்கில மொழி அறிவு உதவுமே தவிர, வளர்ச்சிக்கோ, முன்னேற்றத்திற்கோ அதுதான் அடிப்படை என்று ஏற்றுக் கொள்ளமுடியாது. அப்படிக் கூறுவது நம்முடைய மொழிகளை நாமே இழிவுபடுத்துகின்ற ஒரு நிலைமையாகும் என்றுதான் நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, ஐரோப்பாவில், பெல்ஜியத்தில் பிரெஞ்சு மொழியைப் பயன்படுத்துகிறார்கள். பிரான்சிலும் பிரெஞ்சு இருக்கிறது. பெல்ஜியத்திலும் பிரெஞ்சைப் பயன்படுத்துகிறார்கள். ஆகவே, கூடுதல் மொழியாக பயன்படுத்தும் ஆங்கிலத்தை மட்டும்தான் குறிப்பிட்டீர்கள். பிரெஞ்சைப் பற்றிக் குறிப்பிடவில்லை.

திருமதி டி. யசோதா : இப்போது பிரச்சினை ஆங்கிலத்தைப் பற்றித்தானே தவிர, பிரெஞ்சைப் பற்றி அல்ல.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் அந்தப் பிரச்சினையைப் பற்றிச் சொல்லவில்லை. அந்தந்த தேசத்திலுள்ள மொழிகள் மட்டும்தான் பயன்படுத்தப்படுகின்றன என்ற கருத்தை வலியுறுத்தி அந்த ஆதாரத்தைச் சொன்னார்கள். அதற்குத்தான் நான் இப்போது பதிலைச் சொன்னேன். பெல்ஜியத்தில் பிரெஞ்சு மொழியைப் பயன்படுத்துகின்றார்கள் என்ற விவரத்தை அவர்கள் தெரிவிக்கவில்லை. ஒருவேளை வேண்டுமென்றே அவர்கள் தெரிவிக்கவில்லையா என்பதைத்தான் நான் அறிய விழைகிறேன்.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. குறிப்பாக, நான் இங்கே கூற விரும்புவது, இணைப்பு மொழியாக இதுவரை ஆங்கிலம் இருந்து வருகின்றது. அப்படி

[திருமதி டி. யசோதா] [1986 நவம்பர் 13

இருந்து வருகின்ற இந்தச் சூழ்நிலைமையில் ஆங்கில அறிவு நம்மை ஆங்கிலம் தெரியாத மக்களிடமிருந்து பிரித்துக் காட்டுகின்றது. ஒரு வித்தியாசமான பிரிவினை—ஆங்கிலம் தெரியாதவர்கள் ஒரு பக்கம், தெரிந்தவர்கள் ஒரு பக்கம் என்கின்ற நிலை ஏற்படுகிறது. நமது அரசியல் சட்ட அமைப்பில் மத்திய அரசு செயல்களுக்கு இணைப்பு மொழியாக இந்தி மொழி முன்வைக்கப்பட்டுள்ளது. ஏனென்றால் அதுவே நடைமுறை சாத்தியமான மொழி என்ற அடிப்படையில் அதை இணைப்பாக வைத்திருக்கிறார்கள். ஆனால் இந்த மாறுதலானது திடீரென்று ஏற்படமுடியாது.

அதை ஒப்புக்கொள்ளமுடியாது என்று அந்த நேரத்திலேயே அதைத் தெரிவித்து இருக்கிறார்கள். ஒரு தேதியைக் குறிப்பிட்டு, இந்தத் தேதியிலிருந்து ஆங்கிலம் வருகிறது; இந்தத் தேதியிலிருந்து இந்தி ஆட்சிமொழி ஆகிறது என்று குறிப்பிடமுடியாது. அதைப் படிப்படியாகத்தான் மக்கள் ஏற்றுக்கொண்டு அது ஆட்சிமொழி அந்தஸ்தைப் பெறவேண்டும் என்பது எங்களுடைய மத்திய ஆட்சியிலே இருக்கின்றவர்களும் சரி, அன்றைய ஆட்சியை நடத்திக் கொண்டிருந்த காங்கிரஸ் பேரியக்கமும் சரி, ஏற்றுக் கொண்ட ஒன்று.

இன்றைக்கு பெரும்பான்மையான மக்கள், அதிலும் குறிப்பாக இந்த மாமன்றத்திலே கூட பேசினார்கள்—நேரு உறுதிமொழி காப்பாற்றப்படவேண்டும் என்று; அதற்குப் பிறகு, நேரு தந்த உறுதிமொழியை திரு. சாஸ்திரி அவர்களும் ஏற்றுக் கொண்டார்கள். அன்னை இந்திரா அவர்களும் ஒப்புக் கொண்டார்கள்.

(முற்பகல் 10—40)

அதைப் போலவே பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களும் ஏற்றுக்கொண்டார்கள். இந்த சந்தர்ப்பத்தில் உண்மையிலேயே பண்டித நேரு அவர்களின் உறுதிமொழி என்ன என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 'ஆங்கிலம் துணை மொழியாக, மாற்று மொழியாக, மக்கள் விரும்புகிற வரை தொடர்ந்து இருக்கும். அதைத் தீர்மானிக்கும் பொறுப்பை இந்தி மொழி அறிந்த மக்களிடம் விடாமல் இந்தி மொழியை அறியாத மக்களிடமே விடுவேன்.' இதுதான் பண்டித நேரு அவர்கள் அளித்த உறுதிமொழியின் வாசகம். இதுதான் பிறகு வந்த திரு. லால் பகதூர் சாஸ்திரி அவர்களாலும் வலியுறுத்தப்பட்டது. 11—2—1965 அன்று திரு. லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் வானொலியில் உரை நிகழ்த்தும்போது ஒன்றைக் குறிப்பிட்டார். ''பண்டித நேருவின் கருத்தை அவருடைய மறைவிற்குப் பிறகு எந்தக் காரணத்தைக் கொண்டும் எந்தவித ஊறும் நேராமல் பாதுகாப்பேன்'' என்றார். அதற்குப் பிறகு அன்னை இந்திரா காந்தி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு 1967 ஆம் ஆண்டில் மொழிபற்றிய ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் தீர்மானத்தை முன்மொழியும் வகையில் அப்போது

1986 நவம்பர் 13] [திருமதி டி. யசோதா]

உள்துறை அமைச்சராக இருந்த திரு. ஒய். பி. சவான் அவர்கள் 16–12–1967–ல் பேசுகிறபோது "மொழி என்பது மக்களுடைய நன்மைக்காகத் தோற்றுவிக்கப்பட்ட ஒரு கருவி என்பதை மறுக்க முடியாது. நான் அதை மக்களைப் பிரிக்கும் ஒரு கருவியாக உபயோகிக்க விரும்பவில்லை. ஒரு ஜனநாயக நிர்வாகம் கொண்ட ஆட்சி மக்களிடம் பேசும்போது ஒரு மொழி தேவைப்படுகிறது. அந்த மொழி மக்களின் வாழ்க்கை முறைகளிலும் அவர்கள் உள்ளங்களிலும் ஒரு ஆழ்ந்த இடத்தைப் பெற்றிருப்பதாக இருக்கவேண்டும். இந்தி மொழி என்பது பெரும்பான்மையான மக்கள் அறிந்த மொழியாக இருக்கிறது. இதன் காரணமாகத் தான் இந்தி மொழியை ஏற்றுக்கொண்டிருக்கிறோம்" என்றார். இவ்வாறு இந்தி மொழியை ஏற்றுக் கொண்டதற்கு விளக்கம் அளித்திருப்பதோடு எங்களைப் பொறுத்த வரையிலும் தேவ நாகரி மூலமாகக் குறிப்பிடப்படலாம் என்றும் மற்றும் எத்தகைய காரியங்களுக்குப் பயன்படுத்தப்படலாம் என்பதற்கான சட்டத்தை நாடாளுமன்றம் நிறைவேற்றலாம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

அடுத்து, நேருவின் உறுதிமொழி என்று சொல்லப்படும்போது 1963 ஆம் ஆண்டில் அந்த உறுதிமொழி சட்டபூர்வமாக நிறை வேற்றப்படும்போது இந்தியாவில் உள்ள 14 மொழிகளுக்கும் தேசிய மொழிகள் என்கிற அந்தஸ்தைக் கொடுத்திருக்கிறார்கள். இந்திய அரசியல் சட்டத்திலேயே அப்படிப்பட்ட வகையில் பதிவாக்கப்பட்டிருக்கிறது.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் பேராசிரியர் அவர்கள் கூட ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். அதாவது இன்றைய தினம் 15 மொழிகள் மாநிலங்களில் பேசப்படும் ஆட்சி மொழி களாகும். அந்த மொழிகளையெல்லாம் மத்திய அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது.

நம்முடைய தீர்மானத்தின் மூலமாக உடனடியாக அந்த மொழிகளையெல்லாம் ஆட்சி மொழிகளாக ஏற்று அரசிய லமைப்புச் சட்டத்தில் கொண்டு வந்து, ஆட்சி மொழிச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னால் அதிலே நியாயம் இருக்கிறது. ஆனால் அதற்குப் பதிலாக 15 மொழி களைப் பேசுகிற அந்த மாநிலங்களில் எல்லாம் ஒரு மொழியைக் கொண்டு போய் நாம் சுமத்துகிற நிலைதான் இன்றைக்கு உருவாக்கப்படுகிறது. அதாவது ஆங்கிலம் என்கிற மொழியை, அந்த மொழி பேசாத மற்ற மாநிலங்களில், அந்த மாநிலங் களின் சூழ்நிலையை அறிந்து கொள்ளாமல், அங்கெல்லாம்கூட ஆங்கிலத்தை நாம் ஆட்சி மொழியாகக் கொண்டுவர வேண்டு மென்று தீர்மானத்தைக் கொடுக்கிறோம்.

[திருமதி டி. யசோதா] [1986 நவம்பர் 13

பண்டித நேரு அவர்களின் உறுதிமொழியை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அது எந்தக் காலகட்டத்தில், எந்தச் சூழ்நிலையில் கொடுக்கப்பட்டது என்று எண்ணிப் பார்க்க வேண்டும். 1963 ஆம் ஆண்டில் கொடுக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் பேராசிரியர் அவர்கள் சொன்னதைப் போல் இன்றைக்கு இந்தியா முழுவதும் இந்தி ''வாக்–அவுட்'' ஆகி விட்டது. ஆனால் அப்படிப்பட்ட ''வாக்–அவுட்'' என்று சொல்லுகிற நிலை இல்லாதபோது, இந்தியை அரசுப் பள்ளி களில் விருப்பப் பாடமாகப் படித்துக்கொண்டிருந்த காலகட் டத்தில், இந்தியை அடித்தளத்தில் இருக்கிற ஏழை எளிய மக்கள் படிக்கிற சூழ்நிலை இருந்தபோது, பண்டித நேரு அவர் களால் அந்த வாக்குறுதி அளிக்கப்பட்டது. இந்தி பேசாத மக்கள் விரும்புகிறவரை, அவர்கள் ஏற்றுக்கொள்கிற காலம் வரை, ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருக்கும் என்று அப்போது அவர்கள் உறுதிமொழி அளித்தார்கள். அந்தக் காலகட்டம் எப்படிப்பட்ட காலகட்டம்? இந்தியை நாம் படிப் படியாகப் படித்துக்கொண்டு வந்த காலகட்டம்; இந்தியை அறிந்துகொள்வதில் அக்கறை காட்டிக்கொண்டிருந்த காலக் கட்டம். இப்போது எந்தக் காலக் கட்டத்திலே நம்முடைய முதல்வர் அவர்கள் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். எந்தக் காலகட்டத்திலே? இதுவே இந்தி திணிப்பைக் கண்டித்தல்ல. இந்திக்குப் பதிலாக ஆங்கிலத்தை ஆட்சி மொழியாகக் கொண்டு வரவேண்டுமென்ற அடிப்படையிலே கொண்டு வந்திருக் கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் நடத்துகிற போராட்டத்தைப் பற்றி நிருபர்கள் கேட்டபோது, ''அது தேவையற்றது'' ''யூஸ்லெஸ்'' என்று முதல்வர் சொன்னார். பத்திரிகையாளர் களும் இதைத் தமிழிலே எப்படிப் போடுவது என்று கேட்ட போது ''யூஸ்லெஸ்'' என்றே போடுங்கள் என்று சொன்னார். யூஸ்லெஸ் என்று போடக்கூடிய அளவிற்கு அன்றைக்கிருந்தது சூழ்நிலை. அதற்குப் பிறகு பெரிய பெரிய சாலைகளில் எல்லாம் தமிழக அரசின் சார்பில் முதல்வர் அவர்களுடைய படத்தைப் போட்டு, ''பிரதம அமைச்சர் திரு. ராஜீவ் காந்தி அவர் களுடைய உறுதிமொழியை ஏற்றுக்கொண்டு கல்லூரி மாணவர் களே உடனடியாக கல்லூரிக்குத் திரும்புங்கள்'' என்று விளம்பரப் படுத்தப்பட்டது. ஆக அந்தச் சூழ்நிலை மாறி இரண்டு வாரம் கழித்து இப்போது இந்தத் தீர்மானம் கொண்டுவருகிற நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.

அதைப் போல நேருஜி அவர்கள் உறுதிமொழி கொடுத்தது எந்த நேரத்தில் என்று பார்க்கவேண்டும். இந்தியை எல்லா இடங்களிலும் படிக்க வேண்டும், இந்தி படிப்பதிலே ஆர்வம் காட்ட வேண்டும். அதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற சூழ்நிலை இருக்கும்போது என்றாவது ஒரு நாள் இந்தியை நிச்சய மாக இந்தியா பூராவிலும் உள்ள மக்கள் தெரிந்து கொண்டு,

1986 நவம்பர் 13] *[திருமதி டி. யசோதா]*

இனிமேல் ஆங்கிலத்திற்கு இடமில்லை, தேவையில்லை, இந்தியே எங்களுக்குப் போதும் என்ற காலக்கட்டம் வரும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அந்த உறுதிமொழி கொடுக்கப்பட்டது. ஆனால் இன்றைக்கு இந்தி தமிழ்நாட்டை விட்டே மிகப் பெரிய அளவிலே ''வாக்-அவுட்'' ஆகியிருக்கிறது என்று சொன்னார். இந்தி தமிழகத்தை விட்டு ''வாக்-அவுட்'' ஆகியிருக்கிறது என்பதை என்னாலே ஒப்புக்கொள்ள முடியவில்லை. இன்றைக்கும் தனியார் பள்ளிகளில் இந்தி ''வாக்கிங்'' நடைபெற்றுக்கொண்டிருக்கிறது, ''வாக்-அவுட்'' நடைபெறவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும். எப்படி நடைபோடுகிறதென்றால், சாதாரண நடையல்ல, தனியார் பள்ளிகளில் இராஜ நடை போட்டுக்கொண்டு வருகிறது என்றுதான் சொல்லவேண்டும். இன்று அரசியல்வாதிகள், மிகப் பெரிய தலைவர்கள் அத்தனை பேர்களுடைய குழந்தைகளும் இந்தியிலே தேர்ச்சி பெறக்கூடிய அளவிற்கு முன்வந்திருக்கிறார்கள். நாவலர் அவர்கள் மன்னிக்க வேண்டும். சமீபத்திலே ஒரு பத்திரிக்கையைப் பார்த்தேன். அவருடைய துணைவியார் இந்தியில் ஒரு பரீட்சை பாஸ் செய்திருக்கிறார் என்ற செய்தி பத்திரிகையில் வந்தது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நான் அமைதியாக உட்கார்ந்து கொண்டிருந்தேன். ஏன் இந்த அம்மையார் வீண் வம்புக்கு இழுக்கிறார்கள் என்பது தெரியவில்லை. (சிரிப்பு) அப்படியே இந்தியைப் படித்தாலும் தவறில்லை. (பலத்த மேசையைத் தட்டும் ஒலி). பன்மொழிப் புலவராக ஆவதில் தவறில்லை. எங்களுடைய பன்மொழிப் புலவர் திரு. க. அப்பாதுரை அவர்கள் பல மொழிகள் படித்தவர். இந்தியில ''விஷாரத்'' படித்தவர். எனக்குக்கூட, நேரம் இருந்தால் பதினைந்து, இருபது மொழிகள் படிக்க வேண்டுமென்று ஆசை. ஆனால் இந்த நாட்டின் மீது இந்தி திணிக்கப்படக்கூடாது, அதற்கு இடமில்லை, அதற்கு இந்த மாநிலம் உரியதல்ல என்பதுதான் பிரச்சினை. (பலத்த மேசையைத் தட்டும் ஒலி). என்னுடைய துணைவியார் இந்தி படிக்கவில்லை. பரீட்சை எழுதவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி).

திருமதி டி. யசோதா : நாங்கள் கூட இந்தி திணிப்பை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை மறுபடியும், மறுபடியும் சுட்டிக் காட்டுகிறேன். (பலத்த மேசையைத் தட்டும் ஒலி). அதே போல இந்திபடிப்பதிலும் தவறில்லை என்று முன்னவர் அவர்கள் சொன்னார்கள். வசதியிருந்தால், வாய்ப்பு இருந்தால், நேரம் இருந்தால் நான்கூட படிப்பேன் என்று சொன்னார்கள். அவருடைய நல்ல மனதை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). ஆனால் வசதி இன்றைக்கு ஏழையெளிய மாணவர்களுக்கு.....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் உங்கள் கட்சியின் சார்பாகத்தான் பேசுகிறார்.

[1986 நவம்பர் 13

(முற்பகல் 10—50)

திருமதி டி. யசோதா : அது மட்டுமல்ல, இன்னும்கூட நான் குறிப்பிட்டுச் சொல்லுகிறேன். ஏழையெளிய மாணவர்கள், கிராமப்புறத்திலே உள்ளவர்களுடைய குழந்தைகள் 'கான்வென்ட்'-டில் படிக்க முடியாது, தனியார் பள்ளிகளுக்குச் செல்ல முடியாது; வசதியில்லை. அப்படிப்பட்டவர்கள் அரசாங்கப் பள்ளிகளுக்குப் போகும்போது, அவர்கள் விரும்பினால் படிப்பதற்குரிய சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டும். மாண்புமிகு முன்னவர் அவர்கள், வாய்ப்பும், வசதியும், நேரமும் இருந்தால் நான்கூடப் படிப்பேன் என்று சொன்னார்கள். அந்த நிலையை அடித்தளத்து மக்களுக்கு உருவாக்கித்தர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இந்தி வருவதனால் நம் தமிழ்மொழி அழிந்து விடுமா என்று கேட்டால் நிச்சயமாக அது அழியாது. ஏனென்று கேட்டால், மொகலாயர்கள் காலத்தில் பாரசீக மொழி ஆட்சி மொழியானபோதுகூட தமிழ் அழிந்ததாக வரலாறு இல்லை. அதைப் போலவே ஆங்கிலேயர்கள் ஆட்சியின்போது, கடுமையான சூழ்நிலையில் ஆங்கிலம் ஆட்சிமொழியாக்கப்பட்ட சூழ்நிலையிலும் தமிழ் அழிந்ததாக வரலாறு இல்லை. ஆனால் இன்றைக்கு தமிழுக்கு வக்காலத்து வாங்குவதை விட்டுவிட்டு, நாம் ஆங்கிலத்திற்கு அதிகமான வக்காலத்து வாங்கக்கூடிய சூழ்நிலைதான் இருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் எட்டாம் ஷெட்யூலில் தேசிய மொழிகள் என்று சொல்லக்கூடிய, மாநிலங்களின் மொழிகளாக இருக்கும் 15 மொழிகள்தான் இன்றைக்கு ஆட்சி மொழிகளாக ஆக்கப்பட வேண்டுமென்பதில், நம்முடைய அரசாங்கம் சர்க்காரியா கமிஷனுக்குக் கொடுத்த அறிக்கையில், 8 ஆம் இணைப்புப் பட்டியலில் ஆங்கிலத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லுவது நம்முடைய தேசியத்தின்மீது நாம் வைத்திருக்கிற எண்ணத்தையே கேள்விக்குறியாக்கும் என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. இந்தி மொழியை ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளாத எல்லா மாநில சட்டசபைகளும் ஆங்கில மொழியை.....

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தியாவிலே கிட்டதட்ட 75 கோடி மக்களிலே 6, 7 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆங்கிலோ இந்தியர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய தாய்நாடு இந்தியா. அவர்களுடைய தாய்மொழி ஆங்கிலம். சென்சஸ் கணக்குப்படி இந்தியாவில் 1,652 மொழிகள் இருக்கின்றன. இந்த நாட்டிலே 1,652 மொழிகள் இருக்கின்றன. 850 குரூப்புகள் இருக்கின்றன. அவற்றிலே முக்கியமானவை 125. அவற்றில் எடுக்கப்பட்டவை 15. தாய்மொழியாகக் கொள்ளாமல், யாரும் பேசாமல் இருக்கிற சமஸ்கிருதம் இந்த 15 மொழிகளுள் ஒன்று. ஆகவே ஆங்கிலத்தைச் சேர்க்க வேண்டுமென்று திரு. பிராங்க் அந்தோனி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

1986 நவம்பர் 13] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

திரு. சாக்ளா அவர்கள் தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். அவர்கள் மத்தியிலே கல்வி அமைச்சராக இருந்திருக்கிறார்கள். இந்த நாட்டின் மொழியாக அது ஆக்கப்பட்டதென்று அவர்கள் சொல்லுகிறார்கள். அதனால் 8 ஆம் அட்டவணையில் ஆங்கிலத்தைச் சேர்ப்பதில் தவறில்லை, ஆகவே சேர்க்க வேண்டுமென்பதுதான் முறை, நியாயமும்கூட.

திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவரவர்களே, திரு. பிராங்க் அந்தோனி அவர்கள் பாராளுமன்றத்திலே அதற்காக ஒரு தீர்மானம் கொடுத்து, விவாதம் நடத்துகின்றபோது, பண்டித நேரு அவர்கள், இன்னும் கொஞ்ச காலம் பொறுங்கள், அந்தக் குறிக்கோள் நிறைவேறும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரை மணி ஆயிற்று.

திருமதி டி. யசோதா : பேரவைத் தலைவரவர்களே, பாயிண்டுக்குத்தான் வந்து கொண்டிருக்கிறேன். நான் குறிப்பிட விரும்புவது, ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருக்க வேண்டுமென்பதில் எங்களுக்கு எந்தவிதமான வேற்றுமையான கருத்து மில்லை, ஆனால் 8 ஆம் ஷெட்யூலில் ஆங்கிலத்தைச் சேர்க்க வேண்டுமென்று இன்றைக்குச் சொல்லப்படுகிறது. நம்முடைய நாவலர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, தேர்ந்தெடுக்கப்பட்ட 15 மொழிகளும் இந்தநாட்டின் மொழிகள். எனவே தேசிய மொழிகள்தான் அவற்றிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. 1 1/2 கோடி பேர்கள் ஆங்கிலோ இந்தியர்கள் இருக்கிறார்கள் என்றால் அவர்கள் ஆங்கிலத்தை ஆட்சிமொழியாக்க வேண்டுமென்று கோரிக்கை எழுப்பவில்லை.

என்னைப் பொறுத்தமட்டில் நான் குறிப்பிட விரும்புவது ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருக்கக்கூடாது என்பது எங்கள் நோக்கமல்ல; இந்தியைத் திணிக்க வேண்டுமென்பதும் எங்கள் நோக்கமல்ல. 8 ஆம் ஷெட்யூல் என்பது தேசிய மொழிகளுக்குக் கொடுக்கப்பட்ட சலுகை. அந்தச் சலுகைகளுக்குள்ளே வேற்றுமொழியான ஆங்கில மொழியை சேர்க்க வேண்டுமென்று சொல்லுவதை நான் வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, இந்தி மொழியை ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளாத எல்லா மாநிலங்களின் சட்டசபைகளும் ஆங்கில மொழியை சட்டத்தில் குறிப்பிட்ட காரியங்களுக்குத் தொடர்ந்து பயன்படுத்துவதை நிறுத்திவிடலாமென்ற தீர்மானத்தை நாம் கொண்டுவந்து, நிறைவேற்றிய பிறகு ஆங்கிலத்தை நிறுத்தக்கோரும் அந்த தீர்மானத்தை மத்தியிலே இருக்கின்ற இரண்டு சபைகளும் நிறைவேற்றினாலொழிய, ஆங்கிலம் ஒழிக்கப்படமாட்டாது.

[திருமதி டி. யசோதா] [1986 நவம்பர் 13

நம் கிட்டவே அந்த விவகாரம் இருக்கிறது. ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டும் என்று நாம் விரும்பினால், நிச்சயமாக நம்முடைய சபையிலே அந்த தீர்மானம், ''ஆங்கிலம் இருக்கவேண்டும்'' என்ற தீர்மானம் வருகிறபோது அது இருக்கத்தான் செய்யும். நாம் வேண்டாம் என்று, ஆங்கிலம் தேவையில்லை என்று ஒரு தீர்மானத்தைப் போட்டு, அதாவது மேல்சபையை ஒழிக்க எப்படி தீர்மானம் போட்டோமோ, அதுபோல ஒரு தீர்மானம் போட்டு மேலே, டெல்லியிலே இருக்கின்ற இரண்டு சபைகளும் தீர்மானம் நிறைவேற்றிய பிறகுதான், ஆங்கிலம் போகக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அது மட்டுமல்ல, திருத்தப்பட்ட சட்டம் ஒன்றால் வலியுட்டப்படுகிறது. எப்படி என்று சொன்னால், இந்தி மொழி வளர்ச்சிக்கும் எல்லா இந்தியமொழிகளின் வளர்ச்சிக்கும் தன்னை அர்ப்பணித்துக்கொள்கிறது. மும்மொழி திட்டத்தை அது ஏற்றுக் கொள்கின்றது. பிராந்திய மொழிகளை யூ.பி.எஸ்.சி. பரிட்சைகளில் பாடமொழியாக ஏற்றுக்கொள்கிறது. மத்திய பணிகளுக்கு ஆட்கள் சேர்க்கும் நிலையில், இந்தி அல்லது ஆங்கில மொழியில் கட்டாய அறிவு தேவை எனக் கூறுகிறது. இந்தியும் ஆங்கிலமும் இருக்கவேண்டும் என்றுதான் இருக்கிறது. யூ.பி.எஸ்.சி.-க்கும் அப்படி கட்டளை பிறப்பித்திருக்கின்றார்கள். ஆனாலும்கூட நம்முடைய துரதிருஷ்டம், இந்த முறை ஐ.ஏ.எஸ். பரிட்சையில் 3 பேர்கள்தான் பாஸ் செய்திருக்கிறார்கள். அது நமக்கு ரொம்ப வருத்தமாகத்தான் இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ் நிலைகள் இருந்தாலும்கூட, 1976—லேயிருந்து 'அபிசியல் லேங்குவேஜ் இம்பிளிமென்டேஷன் கமிட்டி'யிலேகூட நம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் கூட இருக்கின்றார்கள். அவர்களையும் வைத்துக்கொண்டு இந்தி வாரத்திற்கான சூழ் நிலை ஏற்படுகிறது. அதற்கான சுற்றறிக்கையே விடப் படுகிறது. அங்கே இதைப் பற்றிய பிரச்சினைகளை நாம் எழுப்புவது இன்னும் சாலச் சிறந்ததாக இருக்கும் என்றுதான் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

பேராசிரியர் அவர்கள் பேசுகிறபோது, மதுரையிலே சில எம். பி.—க்கள் வந்தார்கள், போர்ட்-ஐ எடுத்தார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர், எம். எல். ஏ.வா அல்லது எம்.பி.யா என்று எனக்கு தெரியவில்லை, அவர் போய் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். திரு. சண்முகம் எம். பி. அவர்கள் என்று நினைக்கிறேன். எனக்கு வந்த தகவலைச் சொல்லுகிறேன். அவர் என்ன சொல்கின்றார் என்றால், அப்படி எந்தவிதமான இன்சிடன்ஸும் நடக்கவில்லை என்று சொல்கின்றார். அப்படி இருந்திருந்தால் அது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக நிச்சயமாக இல்லை என்பதைத்தான் இந்த நேரத்திலே கூறவிரும்புகிறேன்.

1986 நவம்பர் 13] [திருமதி டி. யசோதா]

ஆங்கிலத்தை ஆட்சிமொழி என்று அரசமைப்புச் சட்டத்திலே கொண்டுவர நாம் இன்றைக்குத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறோம். எனக்கு முன்னாலே பேசிய பேராசிரியர் அவர்கள், இராஜாஜி அவர்களைப் பல கட்டங்களிலே கொண்டுவந்து சொன்னார்கள், ''அவர்கள் சொன்னார்கள் அவர்கள் சொன்னார்கள்'' என்று சொன்னார்கள். நான்கூட இப்போது இராஜாஜி அவர்களை நினைவு கூறுகிறேன். இந்த நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் இருந்தபோது, சாராயக் கடைகளைக் கொண்டுவர முடிவு எடுத்தார்கள். அந்த நேரத்திலே கொட்டும் மழையிலேகூட இராஜாஜி அவர்கள் மழையில் நனைந்துகொண்டே போய், 'வேண்டாம், இந்த காரியத்தை செய்யவேண்டாம்' என்று கேட்டுக்கொண்டார்கள், அப்போது அன்றைய முதல்வர் அவர்கள் ''கூற்றி தீப்பிழம்பாக இருந்து கொண்டிருக்கும்போது, தமிழகம் கற்பூரமாக இருந்துகொண்டிருக்கின்றது. ஆகவே ஏற்றுக் கொள்ள முடியாது.'' என்று சொன்னார்கள். இந்த நிலையிலே இப்போதுகூட நான் சொல்லுகிறேன். சுற்றியிருக்கின்ற ம நிலங்கள், திராவிட நாடு என்று சொல்கின்றோமே, தெலுங்கு தேசம், கேரளம், கர்நாடகம். அத்தனை மாநிலங்களிலே இது போன்ற தீர்மானங்கள் இல்லை. இந்தி பேசாத எந்த மாநிலத்திலேயும் இதுபோன்ற தீர்மானம் கொண்டுவரவில்லை. காரணம் அவர்களைப் பொறுத்த மட்டிலும், அவர்களுக்கு இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவரத் தெரியாது என்பதல்ல, இது அவர்களுக்குத் தேவையற்றது என்று நினைக்கின்றார்கள். இதன் மூலமாக இந்த நாட்டு மக்களைத் தற்குறிகளாக ஆக்கக்கூடாது என்ற நினைப்பிலே படிக்கின்றவர்கள் படிக்கட்டுமே என்ற எண்ணத்திலே அவர்கள் இருப்பதைப் போல, மற்ற எல்லாவற்றிற்கும் மற்ற மாநிலங்களைச் சுட்டிக்காட்டுகின்ற நாம் இதிலேயும் மற்ற மாநிலங்களிலே இருக்கின்ற சூழ்நிலையைத் தெரிந்து, அவர்கள் நடத்துகின்ற அந்த முறையையே நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதல்ல, அதைத் தெரிந்து கொள்வது சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைத்தான் நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்.)

(முற்பகல் 11-00)

இந்த மொழிப் பிரச்சினையைப் பற்றி சுட்டிக்காட்டி பேசிய போது இந்த நாட்டை ஆளத் தெரியாதவர்கள் என்று பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டார்கள், (குறுக்கீடுகள்) மன்னிக்க வேண்டும். கட்டிக்காக்க முடியாதவர்கள். காப்பாற்ற முடியாதவர்கள் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். 1947 ஆம் ஆண்டிலிருந்து இன்றையவரையிலும் இந்த நாட்டை எங்கள் பாரம்பரியத்தைத் தவிர வேறு எந்த பாரம்பரியமும் கட்டிக்காக்க முன்வரவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1977 ஆம் ஆண்டிலே நீங்கள் மாற்றி பார்த்தீர்கள். 2½ ஆண்டுக்குப் பின்னாலே தாக்குபிடிக்க முடியாது தாமாகவே

[திருமதி. டி. யசோதா] [1986 நவம்பர் 13

விட்டுவிட்ட வரலாறுதான் இந்திய சரித்திரத்தில் காணப்படும் வரலாறு. (குறுக்கீடுகள்) நான் யாரையும் குறிப்பிட்டு பேச வில்லை, (குறுக்கீடுகள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொன்றுக்கும் விளக்கம் கேட்கக் கூடாது. உறுப்பினர் அவர்கள் அதை மறுக்கிறார்கள். மற்ற உறுப்பினர்கள் அமருங்கள். சீக்கிரம் முடியுங்கள்.

திருமதி டி. யசோதா : நான் திரும்பவும் சொல்கிறேன். 1947 ஆம் ஆண்டிலிருந்து, 1977—ல் இருந்து 1980 வரை விட்டுவிட்டு பார்த்தால், இன்றைய வரையில், 1984 தேர்தல் வரையில் காங்கிரஸ் பேரியக்கத்தின்மீதுதான், அகில இந்திய அளவில் இருக்கிற நாட்டு மக்கள் நாட்டை காப்பாற்றக் கூடிய கட்சி என்று நம்பிக்கை வைத்தார்கள். அது மட்டுமல்ல, நாட்டை எந்த நிலையிலும், எந்தச் சூழ்நிலையிலும் காட்டிக் கொடுக்காதவர்களாக இருப்பார்கள் என்ற அடிப்படையிலும், நாட்டை முன்னேற்றப்பாதைக்குக் கொண்டு செல்கின்றவர்கள் இவர்கள் தான் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலும் அகில இந்திய அளவில் மக்கள் காங்கிரஸ் பேரியக்கத்துக்கு வாக்களித்தார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்,

இறுதியாக ஒன்றைக் குறிப்பிட்டு சொல்லுகிறேன். அவசியம் என்றால் ருஷ்ய மொழியைப் படிப்போம். அவசியம் என்றால் பிரெஞ்ச் மொழியைப் படிப்போம். அவசியம் என்றால் எல்லா மொழிகளையும் படிப்போம். ஆனால் இந்தி மொழியை மட்டும் படிக்கமாட்டோம் என்று பேசுகின்ற வாதத்தை விட்டுவிடுங்கள். அவசியம் என்ற நிலை உங்களுக்கு வேண்டுமானால் இல்லாமல் இருக்கலாம். ஆனால் இந்த நாட்டு மக்களுக்கு அது அவசியமா இல்லையா என்பதை நீங்கள் சற்றுப் பரிவுடன் சிந்திக்க வேண்டும். மகாத்மா காந்தியுடன் ராஜாஜி பேசினார். (கூச்சல் குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைதியாக உட்காருங்கள். ஒருவருக்கொருவர் கருத்து பரிமாறிக்கொள்வது முறையல்ல. தலைவர் மூலம்தான் கருத்துகளைச் சொல்ல வேண்டும்.

திருமதி டி. யசோதா : மகாத்மா காந்தியுடன் ராஜாஜி அவர்கள் பேசினார்கள் என்றால் அது ஆங்கில மொழி மூலம்தான். நேருவுடன் காமராஜர் அவர்கள் பேசினார்கள் என்றால் அது ஆங்கில மொழி மூலம்தான். திரு. சத்தியமூர்த்தி அவர்கள் மற்றவர்களுடன் பேசினார்கள் என்றால் அது ஆங்கில மொழி மூலம்தான். நான் அதையெல்லாம் இல்லையென்று சொல்லவில்லை. அது தொடர்ந்து இணைப்பு மொழியாக இருப்பதிலே எங்களுக்கு எந்தவிதமான ஐயப்பாடும் கிடையாது, வெறுப்பும் கிடையாது, வருத்தமும் கிடையாது. இந்த நேரத்திலே இந்தத் தீர்மானம் தேவையற்ற ஒன்று என்று கூறி விடைபெறுகிறேன்.

1986 நவம்பர் 13]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறு விளக்கத்தை மட்டும் அம்மையாரிடத்திலே நான் கேட்க விரும்புகிறேன். மொழியைப் படிப்பதா அல்லது படிக்க மாட்டேன் என்பதா என்பது பிரச்னையே அல்ல. தாய்மொழி தமிழையே படிக்கவும் மாட்டேன், பள்ளிக்கூடத்திற்குப் போகவும் மாட்டேன், எழுதவும் மாட்டேன் என்கின்ற மக்கள் இன்னும் 100-க்கு 54 பேர்கள் சென்சஸ் கணக்குப்படி இருக்கிறார்கள். அது அல்ல பிரச்சினை.

இந்தியை நாங்கள் படிக்க மாட்டோம் என்று யாரும் சொல்லவே இல்லை. இந்த மாநிலத்தினுடைய வரிப் பணம் இரண்டு மொழிகளுக்குத்தான் பயன்படுத்தப்படும். ஒன்று, தாய் மொழி தமிழுக்கு—இந்த மாநிலத்திற்கு உரிய மொழிக்குப் பயன்படுத்தப்படும்; மற்றொன்று, உலகத்தோடு தொடர்பு கொள்ளவும், அறிவியல் உலகத்தோடு தொடர்பு கொள்ளவும், தொழில் நுட்ப அறிவோடு தொடர்பு கொள்ளவும், பிற மாநிலங்களோடும், மத்திய அரசோடும், பிற பகுதிகளோடும் தொடர்பு கொள்வதற்கும் இருக்கின்ற இன்டர்நேஷனல் லாங்க்வேஜ் என்று சொல்லப்படுகின்ற, தொடர்ந்து தொடர்பு கொண்டு வந்த ஆங்கிலத்திற்கும். ஆகவே, இருமொழிக் கொள்கை என்பதை நாம் சொல்லி விட்டோம். இந்த மாநிலத்தினுடைய பணம் இந்த இரண்டு மொழிக் கொள்கைக்குத்தான் வாய்ப்பு தரும் என்று சொன்னோமே தவிர அவரவர்கள் தனித்தனி மொழி படிப்பதை நாம் தடுக்கவே இல்லை. எத்தனை மொழிகள் வேண்டுமானாலும் படிக்கலாம். (குறுக்கீடு) நான் சொல்லி முடித்த பிறகு வேங்கடரமணன் அவர்கள் கேட்கலாம். யார் சந்தேகத்தையும நான் தீர்க்கத் தயாராக இருக்கிறேன், நேரம் அனுமதி தந்தால். ஆச, சிறுபான்மையோருடைய மொழியை நாம் தடுக்கவில்லை. 13 மொழிகளுக்கும் நாம் கல்வித்துறை மூலமாக வாய்ப்புகள் தந்திருக்கிறோம்.

இந்தியையே தாய்மொழியாகக் கொண்டு வட சென்னையிலே இருக்கின்றவர்களுக்கு, நான்கைந்து பள்ளிக்கூடங்களிலே இந்தி மொழியிலே பாடத் திட்டங்களை நடத்த இடம் தந்திருக்கிறோம்; மராட்டிய மொழியிலே நடத்த இடம் தந்திருக்கிறோம். தெலுங்கு மொழி, கன்னட மொழி, மலையாள மொழி, உருது மொழி, வங்காள மொழி என்று இப்படி 13 மொழிகளிலே நடத்துவதற்கு இடம் தந்திருக்கிறோம். அவர்களுக்கு, சிறுபான்மையோர் என்ற கணக்கிலே பள்ளிக்கூடங்களைத் தருகிறோம். ஆனால் மாநில மொழி இரண்டு மொழி என்று சொல்கிறோமே தவிர, படிக்க மாட்டோம் என்று நாம் சொல்ல வில்லை. படிப்பது அவரவர்கள் விருப்பம். இரண்டு மொழி அல்ல, மூன்று மொழி அல்ல, பல மொழிகளைக்கூடப் படிப்பது அவரவர்கள் விருப்பம். ஆனால் இந்த மாநிலத்தினுடைய பணம், ஆங்கிலம், தமிழ் என்ற இரண்டுக்கும் என்பதுதான் நம் கருத்து.

[டாக்டர் இரா நெடுஞ்செழியன்] [1986 நவம்பர் 13

மற்றொன்று, அம்மையார் அவர்களிடத்திலே தெரிவிக்க விரும்புவது,— 7–8–1959 அன்று பாராளுமன்றத்திலே பண்டித நேரு அவர்கள் உறுதிமொழி அளித்தார்கள். அந்த உறுதி மொழியைப்பற்றித்தான் இன்றைக்கு அத்தனைபேரும் பேசிக் கொண்டிருக்கிறோம். அந்த உறுதிமொழிக்கு ஆக்கமும், ஊக்கமும், அரசமைப்புச் சட்ட ரீதியான ஒரு பாதுகாப்பும் வேண்டும் என்பதுதான் இப்பொழுது இருக்கின்ற பிரச்சினை.

"I will suggest two things. Firstly, as I have stated, there must be no imposition. Secondly, for an indefinite period--I do not know how long--I would have English as an associate additional language which can be used for official purposes. I would have English as an alternate language as long as the people require it and I would leave the decision not to the Hindi-knowing people but to the non-Hindi knowing people."

என்பது பண்டித நேரு அவர்கள் அப்போது அளித்த உறுதிமொழி அந்த உறுதிமொழியை நேரு காப்பாற்றுவேன் என்று சொன்னார் அதற்குப் பிறகு இந்தியாவினுடைய பிரதமர் மாண்புமிகு இந்திரா காந்தி அம்மையாரும் அந்த உறுதிமொழியின்படிதான் நான் நடப்பேன், அதைக் காப்பாற்றுவேன் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு இப்பொழுது வந்திருக்கிற இந்தியப் பிரதமர் இராஜீவ் காந்தி அவர்களும், அதைக் காப்பாற்றுவேன் என்று சொன்னார்கள். அந்த உறுதிமொழி காப்பாற்றப்படுகின்ற சூழ் நிலைகள் இருந்தாலும், மீறப்படுகின்ற சூழ்நிலைகளும், உத்தரவு களின் மூலமாகவும், நடைமுறைகளின் மூலமாகவும் அவ்வப்போது வந்திருப்பதைத்தான் மாண்புமிகு எதிர்க்கட்சி வரிசையிலே இருக் கின்ற தலைவர்களெல்லாம் இங்கே விரிவாக எடுத்து சுட்டிக் காட்டினார்கள். அதற்கு இடம் இருக்கக் கூடாது என்பதுதான் நம் கருத்து. 15 ஆண்டு காலம் வரைதான் ஆங்கிலம் இருக்கும், 1965–ம் ஆண்டு வரையில்தான் ஆங்கிலம் இருக்கும், அதற்குப் பிறகு ஆங்கிலம் அடியோடு போய்விடும், இந்திதான் இருக்கும் என்பது அரசமைப்புச் சட்டம் வகுத்தபோது இருந்தது. அதற்குப் பிறகும் சட்டத்தின்படி நீட்டியிருக்கிறார்களே தவிர, இருக்கிற மெஜாரிடியை வைத்து ஒரு தீர்மானத்தை லோகசபையிலே கொண்டு வருவார்களேயானால் அந்த உறுதிமொழி காற்றிலே போய்விடும். ஆகவேதான் பாதுகாப்பு வேண்டுமென்று சொல் கிறோம், அந்த உறுதிமொழியை நீங்களும் மதிக்கிறீர்கள்: நாங் களும் மதிக்கிறோம்: இங்கே இருக்கின்ற காங்கிரஸ் சட்சியினரும் மதிக்கிறார்கள். அத்தனைபேரும் மதிக்கிறார்கள்: அந்த உறுதி மொழியிலே இருக்கின்ற கருத்துக்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்பதுதான் இந்த அவையிலே இருக்கின்ற அத்தனை பேர்களுடைய நோக்கமும் ஆகும்,

இங்கே இருப்பவர்கள் அத்தனை பேரும் இந்தி பேசாத மாநிலத்தைச் சார்ந்தவர்களே தவிர இந்தி பேசுகிற மாநிலத் தைச் சார்ந்தவர்கள் இந்த அவையிலே யாருமே இல்லை.

1986 நவம்பர் 13] [டாக்டர் இரா நெடுஞ்செழியன்]

ஆகவே, அந்த வகையிலேதான் நாம் சொல்வது, Act of law விலே வைத்திருக்கிறார்களே தவிர, அதை அரசமைப்புச் சட்டத்திலே ஏற்றி விடுவோமேயானால் அதிகப் பாதுகாப்பு ஏற்படும், அதிக மதிப்பு ஏற்படும், அதிக மரியாதை ஏற்படும். நான் கேட்பதெல்லாம் — இந்தக் கருத்துக்களிலே வேறுபாடு ஒன்று மில்லை ; நேரு உறுதிமொழியை, இந்திராகாந்தி கொடுத்த வாக்குறுதியை, இராஜிவ் காந்தி கொடுத்திருக்கிற வாக்குறுதியை நாங்கள் அத்தனைபேரும் வரவேற்கிறோம்; நீங்களும் மதிக்கிறீர்கள்; காங்கிரஸ் கட்சியினரும் மதிக்கிறார்கள். இதை அரசமைப்புச் சட்டத்திலே ஏற்றுவதிலே ஏன் தகராறு ? என்ன கஷ்டம் ? என்ன நஷ்டம் ? அதை எதிர்ப்பானேன் ; அது தேவையில்லை. என்ன மீறியிருக்கிறார்கள் என்பதற்கு ஏராளமான உதாரணங்கள் சொல்லலாம். சென்ற ஆண்டு இந்து பத்திரிகையிலே வந்ததைச் சொல்கிறேன். " Central aid only if Hindi is used." இந்தி பயன்படுத்தினால் மட்டுமே நாங்கள் உதவி செய்வோம் என்றெல்லாம் உத்தரவு வந்தது. ஏராளமாக விவரம் வைத்திருக்கிறோம், மணிக் கணக்கிலே கூட பேசலாம். ஆகவே, இதிலே ஒரு தகராறும் இல்லை. இந்தக் கருத்தை நீங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். இந்தச் சட்டத்தை அரசமைப்புச் சட்டத்திலே சேர்ப்பதிலே ஒரு தகராறும் இல்லை. அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்கிறோம். உம்முடைய எண்ணம் எதுவோ நாம் அறியோம். உம்முடைய கொள்கை எதுவோ யாம் அறியோம். ஆனால், எங்களுடைய வேண்டுகோள் இது.

(மு.ப. 11-10)

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, தாக்குப் பிடிக்க முடியாது என்று.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த வார்த்தை 'அன் பார்லிமெண்டரி' இல்லையே. (குறுக்கீடுகள்) சரி, நீங்கள் 'தாக்குப் பிடித்தீர்கள்' என வைத்துக்கொள்ளுங்கள். (சிரிப்பு)

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலத்தால் மிகவும் வேண்டப்பட்ட அவசியமும் அவசரமுமாக ஒரு தீர்மானத்தை, நாட்டினுடைய மொத்த நலம் கருதி மாண்புமிகு முதலமைச்சர்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வைன்ட் ஆப் ஆகிவிட்டது. ஏதாவது ஒரு கிளாரிபிகேஷன் மாதிரி கேளுங்கள். இப்பொழுது பேசுகின்ற முறை தவறு. (குறுக்கீடுகள்) சரி, 'காமன் இன்ட ரஸ்ட்' என்பதால் அனுமதிக்கிறேன்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : மெத்த நன்றி. இந்தத் தீர்மானம் எந்தவிதமான விவாதமுமின்றி இந்தப் பேரவையிலே ஒருமனதாக நிறைவேற்றப்பட்டிருக்குமானால் அது உண்மையிலேயே தமிழகத்தினுடைய மொத்த உள்ள உணர்ச்சியை நல்ல முறையிலே எடுத்துக்காட்டக்கூடிய முறையில் அமையும். ஆனால்,

[திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்] [1986 நவம்பர் 13

மத்தியிலே ஆளுங்கட்சியாக இருக்கக்கூடிய காங்கிரசினுடைய பிரதிநிதியாக இருக்கும் என்னுடைய மதிப்பிற்குரிய திருமதி யசோதா அம்மையார் அவர்கள் பேசும்பொழுது சொன்ன சில கருத்துகளின் மீது இரண்டொரு கருத்துக்களை மாத்திரம் இந்தத் தீர்மானத்திற்கு வலிவு தேடக்கூடிய வகையில் சொல்ல நான் விழைகிறேன்.

திரு. ஆர். தியாகராசன் : எங்கள் கட்சி துணைத் தலைவர் பேசிய பிறகு அதுபற்றி அவர் கருத்து சொல்லலாமா ? அமைச்சர் அல்லவா பேசவேண்டும் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்றவற்றிற்கு இது மாதிரி நடக்காது. இது மொழிப் பிரச்சினை என்பதால் இந்த முறை மட்டும் 'அலவ்' செய்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

திருமதி டி. யசோதா : ஒரு முறை நீங்கள் 'அலவ்' பண்ணினால், பிறகு ஒவ்வொரு முறையும் இதுபோல் வரும். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் உட்காருங்கள். இப்பொழுதே சொல்கிறேன், இனிமேல் இதுபோல் புதிய மரபு இங்கே உருவாகாது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் சமத் அவர்கள் மற்ற தலைவர்களுடைய கருத்துக்கு பதில் உரை என்றில்லாமல் அவருடைய கருத்து என்ற முறையிலே எடுத்துச் சொல்லும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : இந்தத் தீர்மானம் மிகத் தெளிவானது, எளிமையானது. நம்முடைய பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் பாத்திரமாக இருந்த ஆசியாவினுடைய ஜோதி என்று பாராட்டப்பட்ட பண்டித நேரு அவர்கள், அவர்களின் புதல்வி, அருமை மகளார் இந்திரா அம்மையார் அவர்கள், அவருடைய மகனார் நம்முடைய மதிப்பிற்குரிய பாரதப் பிரதமர் அவர்கள், இந்த மூன்று பேர்களும் தந்திருக்கக்கூடிய உறுதி மொழியைச் சட்டவடிவமாக்க வேண்டுமென்ற கோரிக்கை வைக்கக்கூடிய தீர்மானம்தான் இந்தத் தீர்மானம்.

அது மாத்திரமல்லாமல், நாட்டிலே அவ்வப்போது பெரும் கிளர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு நாமெல்லாம் உணர்ச்சி வசப்படக்கூடிய சில காரியங்கள் சிலரால் தெரிந்தோ தெரியாமலோ நடந்துவிடுகின்றன. அப்படிப்பட்ட காரியங்களைத் தடுத்து நிறுத்துவதற்காக அரசியல் அமைப்பில் தெளிவாக எட்டாவது ஷெடியூலிலே ஆங்கிலம் ஒரு மொழியாக இணைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்வது என்பது இந்தத் தீர்மானத்தில் மற்றொரு அம்சம்.

1986 நவம்பர் 13] [திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்]

ஆங்கிலம் ஒரு அந்நிய மொழி ; அதை நம்முடைய நாட்டு அரசியல் அமைப்புச் சட்டத்தில் இணைக்கலாமா, இணைப்பது சரி ஆகுமா என்று பலர் இங்கே வலியுறுத்திக்கேட்டார்கள். ஆனால் நமக்கு ஒரு முன்னுதாரணம் இருக்கிறது. 14 மொழிகளை முதலிலே அரசியல் அமைப்பில் தேசிய மொழிகளாக இணைத்தோம். 15-வது மொழியாக இந்தி மொழியை இணைத்தோம். இந்தி மொழி நம்முடைய நாட்டு நிலப்பரப்புக்கு உட்பட்ட ஒரு மொழி அல்ல. நம்முடைய நாட்டு நிலப்பரப்பு எல்லைக்கு அப்பாற்பட்ட நிலப்பரப்பில் வழங்கப்பட்ட ஒரு மொழி. ஆக, இந்தி மொழி இந்த நாட்டிலே பரவலாக வழக்கில் இருந்த மொழி அல்ல என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். ஆனால் தனிப்பட்ட ஒரு மனிதரை மதித்து, ஜெய ராம்தாஸ் தெளலத்ராம் என்ற தனிப்பட்ட மனிதரின் கோரிக்கையை நாம் கவனித்து, அதற்கு ஆதரவு அளித்து, நம்முடைய நாட்டின் எல்லைக்கு அப்பாற்பட்ட நிலப்பரப்பில் வழங்கப் பட்டுவந்த ஒரு மொழியாக இருந்தபோதிலும் அதனை அரசமைப்புச் சட்டத்தில் இணைத்து தேசீய மொழிகளில் ஒன்றாக ஏற்றுக்கொள்ளும்போது இந்தியத் துணைக் கண்டத்திலே இலட்சோப இலட்சம் மக்களால் பேசப்பட்டு வருகின்ற ஆங்கில மொழியை, 200 ஆண்டுகாலமாக இந்த நாட்டை ஒருமைப் படுத்திவந்த ஒரு மொழியாக இருக்கிற ஆங்கில மொழியை, நம்மை ஒன்றுபடுத்திய மொழியை அரசமைப்புச் சட்டத்தில் தேசீய மொழிகளில் ஒன்றாக இணைத்துக்கொள்வதில் தவறு இல்லை ; அது நியாயமான ஒன்று.

ஆங்கிலம் நம்மை அடிமைப்படுத்திய மொழியாக இருந்தாலும் நாடு விடுதலை பெறுவதற்கு நமக்கு உணர்ச்சி ஊட்டிய மொழி ஆங்கில மொழிதான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஆங்கிலத்தை நாம் தேசிய மொழிகளில் ஒன்றாகக் கொள்வது நாம் ஆங்கிலத்திற்கு அடிமைப்பட்டு விடுவோம் என்பதல்ல : ஆங்கிலத்தை நர்ம் அடிமைப்படுத்தி, ஆங்கிலத்தை நமது அடிமையாக்கி, நாம் உலகத்தில் பெறவேண்டிய அறிவைப் பெறுவதற்காக.பல்வேறுபட்ட அறிவுத்துறைகளுக்கும் இன்றைக்கு ஆங்கிலம் ஒரு பலகணியாக இணைந்திருக்கக்கூடிய இந்தக் காலகட்டத்தில் திட்டவட்டமாக ஆங்கிலம் 8-வது ஷெடியூலில் இணைக்கப்பட்டு, அது தேசீய மொழிகளில் ஒன்றாக்கப்பட வேண்டும். அந்த அடிப்படையில் ஆங்கிலம் தொடர்ந்து இருக்க வேண்டுமென்று கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மொழித் தீர்மானத்தை, நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தத் தீர்மானத்தை இங்கே நிறைவேற்றுவதோடு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்தியிலே அடிக்கடி தொடர்பு கொண்டு, இதற்கு வலிவூட்டுகின்ற வகையிலே அரசமைப்புச் சட்டத்திலே திருத்தம் செய்வதற்கு ஏற்ற சூழ்நிலைகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1986 நவம்பர் 13

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கொண்டு வந்திருக்கிற இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தனித் தீர்மானத்திற்கு அடிப்படைக் காரணங்கள் என்ன என்பதைப்பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள் எடுத்து இயம்பி இருக்கிறார்கள்.

1937 ஆம் ஆண்டிலேயிருந்து தமிழ்த்திருநாட்டில் திராவிட பாரம்பரியத்தின் மூலமாக இந்தி மொழி திணிப்பு கூடாது என்பதை வலியுறுத்தி, போராடி, எடுத்து இயம்பி வந்திருக்கிற வரலாற்று உண்மை யாருக்கும் தெரியாத ஒன்றல்ல.

பெருந்தகை பேரறிஞர் அண்ணா அவர்கள் பலமுறை தெளிவாக எடுத்துரைத்திருப்பதைப்போல, இங்கே இப்போது பேசிய மரியாதைக்குரிய மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சுட்டிக் காட்டியதற்கு ஒப்ப, இந்தி மொழி அரசியல் சட்டத்தின் 343-வது பிரிவிலே இந்தியத் துணைக்கண்டத்தின் கட்டாய மொழியாக ஆக்கப்படுவதுகூட ஒரு திணிப்புதான். அது மக்களால் விரும்பி செய்த முடிவு அல்ல.

(முற்பகல் 11-20)

அரசியல் நிர்ணய சபையைப் பொறுத்தவரையில் சமவாக்குகள் என்ற நிலை வந்து, ஒரு கட்டத்திலே 44 : 44 என்ற நிலை வந்து, அடுத்த கட்டத்திலே 77:77 என்ற நிலை வந்து, அதற்குப் பின் 'காஸ்டிங் வோட்' மூலமாகத்தான் இந்திமொழி இந்தியத் துணைக்கண்டத்தில் கட்டாய மொழி என்று திணிக்கப்பட்டதே ஒழிய, மக்களாலே இது எந்தக் காலகட்டத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதும் அல்ல; மக்கள் எந்த மாற்றத்தையும் அவர்களாகவே செய்ததுமல்ல, இதைத்தான் பெருந்தகை பேரறிஞர் அண்ணா அவர்கள் பலகட்டங்களிலே எடுத்து இயம்பி இருக்கிறார்கள். இரண்டு விதக் குடிமக்களை பாரத நாட்டிலே உருவாக்கி விடக்கூடாது; அதுவும் பெரும் பான்மையான குடிமக்கள் இரண்டாந்தர குடிமக்களாகத் தள்ளப்பட்டு விடக்கூடாது; அந்தப் பாவச் செயலுக்கு மத்திய அரசு என்றும் உடந்தையாக இருந்துவிடக்கூடாது என்பதைப் பல காலகட்டங்களிலே வலியுறுத்தி இருக்கிறார்கள்.

பாரதத் தாய் ஈன்றெடுத்த பிள்ளைகள் நாம், நாடு என்பது ஒன்று, ஒற்றுமை தேவை என்றெல்லாம் கூறுகிறோம். அதை நாம் மறுக்கவில்லை. ஆனால் பாரதத் தாய் ஈன்றெடுத்த பிள்ளைகள் 30 பிள்ளைகள் 'இன்க்குளூடிங் யூனியன் டெரிட்டரிஸ்'. அப்படி இருக்கும்போது இந்தப் பாரத நாட்டிலே பாரதத் தாயினுடைய 9 பிள்ளைகள் மட்டும் இந்தி மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிருக்க அதுவும் மாண்புமிகு நாவலர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல் பல்வேறு பிரிவுகட்கு உட்பட்ட, மாறுபட்ட இந்தியை அந்த 9 பகுதியினரும் தாய்மொழியாகக் கொண்டிருக்க, யூனியன் டெரிட்டரிஸ் உள்ளிட்ட 21 பகுதிகளில் இந்தி தாய்மொழி அல்ல. அப்படி

1986 நவம்பர் 13] [திரு. சி. பொன்னையன்]

இருக்கும்போது பாரதத் தாய் தான் பெற்றெடுத்த 30 பிள்ளைகளுள் 9 பிள்ளைகளினுடைய கண்ணுக்கு வெண்ணெயும் மீதம் உள்ள 21 பிள்ளைகளினுடைய கண்ணுக்கு சுண்ணாம்பும் இட வேண்டும் என்ற பாரபட்சச் செயலைச் செய்யவேண்டும் என்று நாட்டினுடைய ஒற்றுமையில், நாட்டினுடைய நலனில் அக்கறை உள்ள யாரும் எண்ண மாட்டார்கள், கூறமாட்டார்கள். இதைத்தான் மறைந்த மாமேதை பெருந்தகை பேரறிஞர் அண்ணா அவர்கள் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள்.

ஒரு ஒட்டப்பந்தயம் நடக்கிறது. அந்த ஓட்டப்பந்தயத்திலே இந்தி பேசுகிற 9 மாநிலத்தைச் சேர்ந்த பிள்ளைகளின் முதுகிலே இரண்டு மூட்டை அரிசி மட்டும் சுமக்கச் சொல்லிவிட்டு மீதம் உள்ள இந்தி பேசாத 21 மாநிலங்களில் உள்ள பிள்ளைகள் முதுகிலே 3 மூட்டை அரிசியை ஏற்றி ஓடுங்கள் என்று ஓட்டப் பந்தயத்தில் இறக்கினால் இரண்டு மூட்டை அரிசி மட்டுமே தூக்கிக் கொண்டு ஓடுகின்ற 9 மாநிலங்களைச் சேர்ந்த, பாரத மாதாவினுடைய அந்த 9 பிள்ளைகள் மட்டுமே வெற்றி பெற்றுவிடுவார்கள். மாறாக, இந்தி பேசாத மாநிலங்களைச் சேர்ந்த பிள்ளைகள் ஓட்டப்பந்தயத்திலே தோற்றுவிடுவார்கள். இது அண்ணா அவர்கள் சொன்னது.

பொருளாதாரத் துறையாக இருந்தாலும் சரி, விஞ்ஞான ரீதியான எந்த வகைப்பாடாக இருந்தாலும் சரி, தொழில் துறை மேம்பாடாக இருந்தாலும் சரி, சோஷியோ எக்கனாமிக் டெவலப்மெண்ட் என்று சொல்லக்கூடிய சமுதாயப் பொருளாதார மேம்பாடாக இருந்தாலும் சரி இந்தி ஒன்றுதான் இந்தியத் துணைக்கண்டத்தின் ஆட்சி மொழி என்றும், இணைப்பு மொழி என்றும் வருகிறபோது இந்தி பேசாத 21 மாநிலங்களைச் சேர்ந்த குழந்தைகள் இரண்டாம்தரக் குடிமக்களாக வரும் காலகட்டத்தில் கட்டாயம் பின் தள்ளப்பட்டுவிடுவார்கள். மேல் ஜாதி, கீழ் ஜாதி என்ற பாகுபாட்டைப்போல் இந்தி பேசுகிற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் உயர்ந்த குடிமக்கள் ஆகவும், எல்லா வசதிகளைப் பெற்றவர்களாகவும் ஆகி இந்தி பேசாத 21 மாநிலங்களைச் சேர்ந்த மக்கள் தாழ்த்தப்பட்ட மக்களாக ஒதுக்கப்பட்டுவிடுவார்கள் என்பதை பல கட்டங்களிலே நாம் எடுத்து இயம்பி இருக்கிறோம். தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தி பேசாத பல மாநிலங்களிலேயும் இந்த உணர்வுகள் அவ்வப் போது மேலோங்கி இருக்கின்றன. மத்திய அரசினுடைய ஆதிக்க முறைக்கு இந்தி மொழி என்ற ஒரு மொழியை மட்டும் இணைப்பு மொழி என்று கட்டாயமாக ஆக்கி, இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள முக்கிய பிரச்சினைகளான பொருளாதாரப் பிரச்சினை, சமுதாய மேம்பாட்டுப் பிரச்சினை, விஞ்ஞான ரீதியான வளர்ச்சிப் பிரச்சினை ஆகியவற்றில் எல்லாம் அக்கறை செலுத்தாமல் இந்தியாவுக்கு இந்தி என்ற ஒரு மொழியை மட்டும் இணைப்பு மொழியாக ஆக்குவதன் காரணமாக மட்டும் இந்தியத் துணைக்கண்டம் வளர்ந்துவிடும் என்று எண்ணுவது அவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்ளக் கூடிய எண்ணமாகும். இதுபற்றி பலமுறை எடுத்து இயம்பியிருக்கிறார்கள்.

[திரு. சி. பொன்னையன்] [1986 நவம்பர் 13

போராட்ட உணர்வுகள் அவ்வப்போது வெடித்ததகாரணத்தால், 1937லேயிருந்தே தமிழகத்திலுடைய திராவிட இயக்கங்கள் இந்தப் போராட்டங்களை மேற்கொண்ட காரணத்தால், 1959 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7 ஆம் தேதி மறைந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் ஒரு உறுதியைத் தந்தார்கள். அதிலே அவர்கள் தெளிவாகக் கூறி இருக்கிறார்கள்.

நாவலர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல,

"I suggest two things. Firstly, as I have said, there must be no imposition. Secondly, for an indefinite period — I do not know how long — I would have English as an associate, additional language which can be used for official purposes. I would have it so, not mainly because of the existing facility, but because I do not wish the people of non-Hindi areas to feel that advantages are denied to them. . . . .".

"They can correspond in English. I would have English as an alternate language as long as the people require it and I would leave the decision, not to the Hindi-knowing people, but to the non-Hindi knowing people."

என்று அப்போது அவர்கள் அதைத் தெளிவுபடுத்தினார்கள்.

அதையொட்டி 1963 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்திலே மசோதா ஒன்று வந்தபோது நேரு அவர்கள் மீண்டும் அந்த உறுதிமொழியை வலியுறுத்தித் தந்திருக்கிறார்கள். அப்போதுதான் சில பிரச்னைகள் உருவாகின. 1963 ஆம் ஆண்டில் இந்திய அரசியல் சட்டத்தினுடைய 343-வது பிரிவைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் எடுத்துச் சொன்னார்கள். அதிலே மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

"The official language of the Unions shall be Hindi in Devanagari script." என்று. இந்திய அரசியல் சட்டத்தின் மூலமாகவே இந்தியத் திருநாட்டினுடைய பெரும்பான்மை மக்களின் மீது திணிக்கப்படுகிற ஒரு கொடுமை செய்யப்பட்டது என்பது பல காலக் கட்டங்களில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. அதிலே இரண்டாவது ஷரத்தைப் பொறுத்த வரைக்கும்,

"Notwithstanding anything in clause (1), for a period of fifteen years from the commencement of this Constitution, the English language shall continue to be used for all the official purposes of the Union for which it was being used immediately before such commencement."

என்று இருந்தது. அந்த ஷரத்தின் பிரகாரம் 1965 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் தேதிக்குப் பிறகு ஆங்கிலம் இந்திய துணைக் கண்டத்தின் லிங்க் அண்டு அபீஷியல் லாங்குவேஜ் என்ற நிலைமையில் இருக்க இயலாத நிலை ஏற்பட்டது. அப்போதுதான் தமிழ்நாட்டிலே போராட்டங்கள் வெடிக்க ஆரம்பித்தன.

1986 நவம்பர் 13] [திரு. சி. பொன்னையன்]

சட்டத் திருத்தங்கள் வேண்டும் என்று கேட்க ஆரம்பித்தோம். ஆங்கிலத்திற்குப் பாதுகாப்பு என்பது ஆங்கில மொழியின் மேல் உள்ள காதலால் அல்ல; மாறாக ஆங்கிலம் அகற்றப்படுகிறபோது, அந்த இடத்தை இந்தி மொழி பிடித்துக் கொள்கிறபோது, இந்தி பேசாத 21 மாநிலங்களின் பகுதியிலே இருக்கிற மக்களை அடிமைப்படுத்துகின்ற நாளாக அந்த நாள் ஆகிவிடும். அப்படிப் பட்ட துரதிருஷ்டமான நிலை வராமல் இருக்க வேண்டும் என்றால், ஆங்கிலம் தொடர்ந்து இருக்க வேண்டும்.

''இந்தி என்ற பாய்ந்து வருகிற ஈட்டியிலிருந்து 21 மாநிலங் களில் உள்ள அந்த அந்தப் பகுதிகளின் தாய் மொழிகளைக் காக்க வேண்டும் என்றால் ஆங்கிலம் என்ற கவசம் இன்றியமையாத ஒன்று'' என்று பெருந்தகை பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதையொட்டித்தான் சட்டத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற முறையில், நாம் அன்று அதற்குப் போராட்டத்தை நடத்தினோம்.

343-வது பிரிவிலேயும் அதேபோல ஆர்ட்டிகள் 120 என்று சொல்லக்கூடிய 120-வது பிரிவிற்கும் சட்டத் திருத்தம் வேண்டும் என்று பல போராட்டங்கள் தமிழகத்திலே பல்வேறு காலக் கட்டங்களில் 1963 வரை நடந்தன. அதிலே ஆர்ட்டிகள் 120-வது பிரிவினைப் பொறுத்தவரைக்கும்

"Notwithstanding anything in Part XVII, but subject to the provisions of Article 348, business in Parliament shall be transacted in Hindi or in English"

என்று சொல்லி அதனுடைய 2-வது பிரிவிலே

"(2) Unless Parliament by law otherwise provides, this article shall, after the expiration of a period of fifteen years from the commencement of this Constitution, have effect as if the words "or in English" were omitted therefrom".

என்று தெளிவாக அப்போது இருந்தது, அந்த நிலை மாற்றப் பட வேண்டும். அதனால் வருகிற பாதிப்புகள், விளைவுகள் அகற்றப்பட வேண்டுப் என்ற நோக்கோடுதான் அரசியல் சட்டத்திலே திருத்தம் கொண்டுவர வேண்டும் என்று போராட் டம் நடந்தபோது 1963 ஆம் ஆண்டு Act 19 of 1963 என்ற சட்டத்தின் மூலமாக ஓரளவிற்குப் பாதுகாப்பைத் தர முன் வந்தார்கள். ஆனால் அந்தச் சட்டத் திருத்தத்தைப் பொறுத்த வரைக்கும், அது அரசியல் சட்டத் திருத்தம் அல்ல. நாவலர் அவர்கள் சொன்னதைப் போல It is merely an Act of law என்று கொண்டு வந்தார்களே தவிர வேறு அல்ல. அதிலே

"Notwithstanding the expiration of a period of fifteen years from the commencement of the Constitution, the English language may, as from the appointed date, that is, from the 26th day of January 1965, continue to be used in addition to Hindi for all the official purposes of

the Union in which it was being used immediately before that date as per Article 343 and for the transaction of business in Parliament as per Article 120."

(முற்பகல் 11-30)

என்ற திருத்தத்தை 1963-ம் ஆண்டில் பாராளுமன்றத்தில் கொண்டுவந்தார்கள். பெருந்தகை அண்ணா அவர்கள் பாராளுமன்றத்தில், ராஜ்ய சபாவில் இது குறித்து பேசுகிறபோது அதை அவர்கள் ஏற்கவில்லை. அதற்கான காரணத்தை அண்ணா அவர்கள் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள்.

"The Prime Minister has stated that English will remain as an associate official language, and if the Prime Minister's assurance is to be fully carried out, I would request the Home Minister to drop this Bill, gird up his loins, take the consequences that may arise out of it because they are courageous people that is the Tamil people and bring forward an amendment of the Constitution maintaining the *status quo,* that is, keeping English as the official language. Please do not think that because it is foreign we should discard it. Therefore, I plead before the Home Minister for a reappraisal of the language issue, pending that reappraisal, for an amendment of the Constitution for maintaining the *status quo* and keeping English as the official language."

என்று சொன்னார்கள். அப்போது இன்னுமொன்றை அண்ணா அவர்கள் தெளிவுபடுத்தினார்கள்.

"Therefore, till such time we should not disturb the present *status quo* of keeping English as the official language till we arrive at a stage when all the fourteen national languages become the official languages. Perhaps multi-lingualism is the price that we have to pay for keeping India one and united. You can have India disunited through Hindi. But if you want, to have a contented India, if you want to have an India which does not feel that one region will dominate over another, if you do not want genuine apprehension to get into the minds and hearts of millions of people, if you want an India about which everyone of us could be proud, you will have to take into consideration the problem of multi-lingualism."

என்று சொல்லி இந்தியத் துணைக் கண்டத்தினுடைய ஆட்சி மொழியாக இந்தி மொழி மட்டுமல்ல, ஆங்கில மொழி மட்டுமல்ல, அரசியல் சட்டத்தினுடைய எட்டாவது அட்டவணையில் கூறப்பட்டிருக்கிற பதினைந்து மொழிகளுமே ஆட்சி மொழிகளாக வர வேண்டும். மேலும் சொன்னார்கள். அரசியல் சட்டத்தினுடைய எட்டாவது அட்டவணையைத் திருத்தி ஆங்கிலத்தையும் அந்த அட்டவணையின் பட்டியலில் ஒரு மொழியாக

1966 நவம்பர் 15] [திரு. சி. பொன்னையன்]

சேர்த்து, காரணம் நாவலர் அவர்கள் சொன்னதைப் போல, பாரத நாட்டில் இருக்கிற கிட்டத்தட்ட எட்டு லட்சத்திற்கும் மேற்பட்ட இந்திய குடிமக்களான ஆங்கிலோ இந்தியர்களுடைய தாய் மொழியாகவும், 2 கோடி முதல் 3 கோடி வரை உள்ள மக்களால பேசப்படுகிற மொழியாகவும் இருக்கிற ஆங்கில மொழியை எட்டாவது பிரிவைத் திருத்தி சேர்க்க வேண்டும். அதையும் இந்தியத் துணைக்கண்டத்தினுடைய link and official language என்று சொல்லக்கூடிய இணைப்பு மொழியாக, ஆட்சி மொழியாகக் கொண்டுவர வேண்டுமென்ற கருத்தை அப்போது பெருந்தகை அண்ணா அவர்கள் வலியுறுத்தினார்கள். அதற்கு பிறகு 1965-ம் ஆண்டில் நடந்த போராட்டத்தைத் தமிழகம் மறந்திருக்காது; எந்தக் காலத்திலும் மறந்துவிட முடியாத ஒன்றாகும். இங்கே பேசிய மரியாதைக்குரிய எதிர்க்கட்சியின் துணைத் தலைவர் திருமதி யசோதா அம்மையார் அவர்கள், 1965-ம் ஆண்டில் தமிழகத்தில் ஏற்பட்ட எழுச்சியை, கொந்தளிப்பைக் கருத்தில் கொண்டு சில கருத்துக்களைக் கூறியிருப்பார்களானால் அது சிறப்பாக இருந்திருக்கும். காரணம் அப்போது ஏற்பட்ட அந்தப் போராட்டத்தினுடைய உச்சக் கட்டத்தை, அந்த அளவிற்குப் பாரத துணைக்கண்டத்தின் பிரதமராக இருந்த நேரு அவர்களின் மறைவிற்குப் பிறகு வந்தவர்கள் எல்லாம் உணர்ந்தார்கள் என்பதை வரலாறு நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது.

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் அளித்த வாக்குறுதி 8—1—1968-ல் சட்ட ரீதியாக்கப்பட்டது. அபிஷியல் லாங்வேஜ் ஆக்ட்டில் இடம்பெற வேண்டுமென்று ஒரு முடிவிற்கு வந்து நாம் அதை ஏற்றுக் கொளவில்லை. அரசியல் சட்டத்தில் திருத்தப் வேண்டுமென்றுதான் நாம் அதை வலியுறுத்தி வந்தோம். ஆனால் அப்போது ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டது.

The provisions of clause (*a*) of sub-section (1), the provisions of sub-section (2), sub-section (3), sub-section (4) shall remain in force until the resolutions for the discontinuance of the use of English language for the purposes mentioned therein have been passed by the Legislatures of all the States which have not adopted Hindi as their official language and until after considering the resolutions aforesaid, a resolution for such discontinuance has been passed by each House of Parliament.

இதைக் கூட மறைந்த மாமேதை அண்ணா அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இதற்குக் கூட ஒரு மாற்றுக் கருத்தை சொல்லியிருக்கிறார்கள். அரசியல் சட்டத்தில் இதற்குரிய இடத்தை நாம் சட்டத் திருத்தத்தின் மூலம் தரத்தவறுவோமானால் இந்தி பேசாத மக்களை அடிமைகள் ஆக்குகிற நிலை இறுதியாக வந்துவிடுமென்பதை தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

[திரு. சி. பொன்னையன்] [1986 நவம்பர் 13

அதோடு டிசம்பர் மாதம் 1967—ல், பாராளுமன்றத்திலே பெருந்தகை பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக வந்த பிறகு 1968-லே இந்தி மொழித் திணிப்பை எதிர்த்து இரு மொழிக் கொள்கையை தமிழ் மண்ணில் தவழவிட வேண்டும் என்ற நோக்கோடும், இந்திமொழி தமிழ்நாட்டில் கற்றுக் கொடுக்கப்பட மாட்டாது என்ற நோக்கோடும் அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு அடிப்படையாக அமைந்தன இரண்டு. ஒன்று 8—1—1968-லே நேருவினுடைய உறுதி மொழி வெறும் சட்டமாக மட்டும் ஆக்கப்பட்டு, அரசியல் சட்டத்திலே திருத்தத்தோடு உட்படுத்தப்படாதது ஒன்று. அதையொட்டி, உடனடியாக அப்போதே, இன்னொரு தீர்மானத்தைக் கொண்டு வருகிறார்கள். அந்தத் தீர்மானத்தை 18—1-1968-லே பாராளுமன்றத்திலே நிறைவேற்றுகிறார்கள். அந்தத் தீர்மானத்திலே மும்மொழிக் கொள்கையைப் பற்றிப் பேசுகிறார்கள். அந்தத் தீர்மானத்தில்

Where it is necesary for promoting a sense of unity and facilitating communication between people in different parts of the country that effective steps should be taken for implementing fully in all the States the three language formula evolved by the Government of India in consultation with the State Governments, this House resolves that arrangements should be made in accordance with the formula for the study of a modern Indian language, preferably one of the southern languages apart from Hindi and English in Hindi speaking areas and Hindi along with the regional languages and English in non-Hindi speaking areas. என்று நிறைவேற்றுகிறார்கள்.

முன்னாலே பேசிய தலைவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல இப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிய பிறகு. இந்தி பேசுகிற அந்த 9 மாநிலப் பகுதிகளில், மும்மொழித் திட்டம் என்பது இந்தி பேசாத 21 மாநிலப் பகுதி மக்களை ஏமாற்றுகிற ஒரு உத்தியாகவே இன்று வரை அவர்கள் நடைமுறையிலே கொண்டு இருக்கிறார்களே தவிர, மும்மொழித் திட்டத்தை இந்தி பேசாத மாநிலங்கள் கட்டாயத்திற்கு உட்பட்டு ஏற்றுக் கொள்ளக் கூடிய சூழல் உருவானதை நாம் மறந்துவிடக் கூடாது. இதைப் பெருந்தகை பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்டித்தார்கள். இதனுடைய அபாயத்தைச் சுட்டிக்காட்டினார்கள். இரண்டாந்தர குடிமக்களாக— இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற பெரும்பான்மையான மக்கள் 9 மாநிலங்களிலே வாழ்கிற சிறுபான்மையான மக்களுடைய மொழியான தாய் மொழியான இந்தி மொழி, இந்தியத்துணைக் கண்டத்தினுடைய மீதம் உள்ள 21 பகுதிகளில், இந்தியத் துணைக் கண்டத்

1986 நவம்பர் 13] [திரு. சி. பொன்னையன்]

தினுடைய பெரும்பான்மையான மக்களால் பேசப்படுகிற, அவர்களது தாய் மொழிகளை அழிக்கின்ற பாணியிலே இந்தத் தீர்மானம் அமைந்துவிடுகிறது, இதை ஏற்க முடியாது என்று அண்ணா அவர்கள் 1968-லே தெளிவுபடுத்தினார்கள், அப்போதுதான் அந்தத் தீர்மானம் அண்ணா அவர்களால் சட்ட மன்றத்திலே கொண்டுவரப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்தியம்பியதைப் போல, அது தெளிவாக்கப்பட்டு இருக்கிறது.

அப்போதே அண்ணா அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். மொழிப் பிரச்னையைப் பற்றி அண்ணா அவர்கள் 1968—லே எதற்காக இந்த அரசியல் சட்டத்திருத்தம் தேவை என்பதை வலியுறுத்துகிறபோது, அதன் காரணங்களை அவர்கள் விளக்குகிறார்கள். "கவர்னர் அவர்களுடைய உரையில் மத்திய அரசு மாநில அரசு தொடர்பு நிலை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தைத் திட்டவட்டமாக வைத்திருக்கிறார். கவர்னர் உரையில் நல்ல முறையில் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள் என்பதால் இந்த உரைக்கு எங்களுடைய கட்சியினுடைய உறுப்பினர்கள் நன்றி தெரிவித்துக் கொண்டது முறையாகும். அதை எடுத்துக் கொண்டு பேசுவது, அதனால் ஒருமைப்பாடு கெட்டுவிடும் என்று வாதாடினால், நான் வெளிப்படையாகச் சொல்லுகிறேன், ஒருமைப்பாடு மூடிமறைத்தால்தான் கெடுமே தவிர, இப்படி இப்படி கூடி வாழலாம், இப்படி இப்படி அதிகாரங்களைப் பங்கிட்டுக் கொள்ளலாம் என்பதில் வெளிப்படையான கருத்து ஏற்பட்டாலொழிய, மூடி மறைப்பதன் மூலம், திருக்குறளில் வருகிறபடி ஒரு குடத்திற்குள் பாம்பை விட்டுக் குடியிருப்பது எவ்வளவு கடினமோ, நமக்குள் இருக்கிற அதிகாரத் தொடர்புகளைப் பற்றி விவாதித்துத் திருத்திக் கொள்ளாமல், ஒருமைப்பாட்டைப் பற்றிப் பேசுவது நல்லது அல்ல, பலனும் தராது. அதை அடிப்படையாகக் கொண்டு மொழிப்பிரச்சனை பற்றி தீர்மானம் வந்தபோது திரு. ம.பொ.சி. அவர்கள், மத்திய அரசில் குவிந்திருக்கிற அத்தனை அதிகாரங்களும் பரவலாக்கப்படும் அளவுக்கு நிலைமை இருந்தால் இந்தப் பிரச்னை தீரும் என்று விளக்கினார்கள்.

அதே நேரத்தில் அண்ணா அவர்கள் மேலும் சொன்னார்கள். "ஒரு தவறான கருத்து இருக்கிறது, ஆனால் வலிவோடு பலரால் பின்பற்றப்பட்டு வருகிறது. ஆங்கிலத்தில் சொல்லுவதானால், The inevitability of Hindi இந்தி எப்படியும் வந்தே தீரும், இந்தி தவிர்க்க முடியாதது என்ற எண்ணத்தை நாமாக வளர்த்துக் கொண்டிருக்கிறோம்".. இது அண்ணா அவர்கள் சொன்னது. இந்தி பேசாத மாநில மக்கள், இந்தி பேசாத பகுதிகளைச் சேர்ந்த, 21 பகுதிகளைச் சேர்ந்த, இந்தியத் துணைக் கண்டத்தினுடைய பெரும்பான்மையான மக்கள் The inevitability of Hindi என்பதை நாமே வளர்த்துக் கொண்டு

[திரு. சி. பொன்னையன்] [1986 நவம்பர் 13

இருக்கிறோம் என்பதை அண்ணா அவர்கள் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். அப்படிச் சொல்லிவிட்டு, The inevitability of Hindi, இந்தி எப்படியும் வந்தே தீரும் என்ற பீதியை இந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை, பொது மொழி தேவை என்று வாதாடப் படுமானால் அது யாருக்குப் பொது மொழி?

(முற்பகல் 11-40)

மரியாதைக்குரிய மாண்புமிகு திருமதி யசோதா அம்மையார் அவர்கள் பல வினாக்களை இங்கே இப்போது எழுப்பியிருக்கிறார்கள். இதற்கு அப்போதே பேரறிஞர் அண்ணா அவர்கள் தெளிவாகப் பதில் சொல்லியிருக்கிறார்கள், பொது மொழி தேவை என்று வாதாடப்படுமானால், அது யாருக்குப் பொது மொழி? எதற்காகப் பொது மொழி என்பதும் விளக்கப்பட வேண்டும். எனக்குத் தமிழ் தாய் மொழி. என் நண்பர் ஹண்டே அவர்களுக்கு கன்னடம் தாய் மொழி. என் நண்பர் வினாயகம் அவர்களுக்கு தெலுங்கு தாய் மொழி என்று இருக்குமானால், மூன்று பேர்களுக்கும் சேர்ந்த ஒரு மொழி கன்னடமாகவோ, தமிழாகவோ, தெலுங்காகவோ இருக்க முடியாது என்று சிந்தனைச் செறிவோடு பெருந்தகை பேரறிஞர் அண்ணா அவர்கள் மொழிப் பிரச்சினைக்கு ரத்தினச் சுருக்கமான ஒரு விளக்கத்தை அன்றே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்தோடுதான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசினுடைய கருத்தும் ஒன்றுகிறது என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அதைப் போலவே மாண்புமிகு திருமதி யசோதா அம்மையார் அவர்கள் பேசுகிறபோது இந்தி மொழியினால் ஆபத்து இல்லை என்பதையும் ஆங்கில மொழி தேவை அற்ற ஒன்று என்பதையும் பல உதாரணங்களைச் சொல்லி எடுத்துச் சொன்னார்கள், இதில் நான் ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அரசியல் சட்டத்தினுடைய அடிப்படை நோக்கம் என்ன என்பதை நாம் புரிந்துகொண்டு ஆக வேண்டும். ஒருவேளை அரசியல் சட்டத்தை அவர்கள் அரசியல் நிர்ணய சபையில் முடிவு எடுத்த போதே அந்த casting vote பிரகாரம் ஒரு முடிவு வந்தபோது சமமாக இந்தி வேண்டும் என்று ஒரு பிரிவினரும் இந்தி வேண்டாம் என்று ஒரு பிரிவினரும் இருந்தபோது இந்தி வேண்டும் என்று ஒரு முடிவுக்கு வந்தவர்களுடைய உள்நோக்கம் எல்லாம் இந்திய துணைக் கண்டத்தில் காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரை பிறக்கின்ற குழந்தைகள் எல்லாம் பிறக்கும்போதே அம்மா என்று சொல்லுவதற்கு 'மா' என்று சொல்ல வேண்டும், வளர்கின்ற குழந்தைகள் வளர்கிறபோது அப்பா என்று சொல்லுவதற்கு 'பிதாஜி' என்று சொல்ல வேண்டும் என்று அந்த அளவுக்கு ஒரு வெறி நோக்கோடு அது சொண்டுவரப்பட்டதோ என்ற ஒரு அச்சக்தை அரசியல் சட்டத்திலேயே ஒரு பிரிவிலே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அதை நாம் ஆழமாகக் கவனிக்க தவறி விடக் கூடாது. ஆர்ட்டிகிள் 351 என்று சொல்லப்படுகிற

1986 நவம்பர் 13] [திரு. சி. பொன்னையன்]

பிரிவிலே—அம்மையார் அவர்கள் அவர்களுக்கு வேண்டியதைப் படித்தார்கள்—இந்தி பேசாத மாநிலங்களுக்கு உள்ள ஆபத்து அங்கே என்ன இருக்கிறது என்பதை அவர்கள் கவனிக்க வில்லையோ அல்லது கவனித்தும் வேண்டும் என்றே விட்டு விட்டார்களோ என்று புரியவில்லை.

It shall be the duty of the Union. This is a constitutional mandatory direction, provision. It shall be the duty of the Union to promote the spread of Hindi language — the word is to be noted down 'spread of Hindi language'—to develop it so that it may serve as a medium of expression for all the elements of composite culture of India and to secure its enrichment by assimilating, without interfering with its genius, the forms, style and expressions used in Hindustani and in other languages of India specified in Eighth Schedule, and by drawing, wherever necessary or desirable for its vocabulary, primarily on sanskrit and secondarily on other languages. அதை மட்டும் அம்மையார் அவர்கள் சொன்னார்கள். Primarily on sanskrit and secondarily on other languages. என்பதை 343—வது பிரிவிலே இந்திய துணைக் கண்டத்தினு டைய கட்டாய இணைப்பு மொழி, கட்டாய ஆட்சி மொழி என்று கொண்டுவரப்பட்டபோது அதனுடைய உள்நோக்கம் என்பது தூய்மையானது அல்ல. இந்தியத் திருநாட்டினுடைய பெரும்பாலான குடிமக்களை காலகட்டத்தில் அடிமைப்படுத் துவதே, இரண்டாந்தர குடிமக்களாக ஆக்குவதே அதனுடைய உள்நோக்கம் என்பதை, இந்தி பேசுகிற மாநிலப் பகுதிகளைச் சேர்ந்தவர்களுடைய ஆதிக்க அதிகாரம் அதிகமாக இருந்து விட்ட காரணத்தால் அரசியல் சட்டத்திலேயே அந்த உள் நோக்கத்தைக் காட்டியிருக்கிறார்கள்.

What does it mean by medium of expression ?

ஏதோ பள்ளியிலே மட்டும் அல்ல, கல்லூரியிலே மட்டும் அல்ல, Medium of expression for all the elements of composite culture of India என்று தெளிவுப்படுத்தியிருக்கிறார்கள். நோக்கம் என்ன என்றால், படிப்படியாக இந்தி மொழியை துணிந்து கொண்டு வந்து 15 ஆண்டுக் காலத்திற்குள் ஆங்கிலத்தை அகற்றி விடுவோமானால்—கவசம் போல பாதுகாத்துக் கொண்டு இருக்கிற மொழி ஆங்கிலம். இந்தி பேசாத 21 மாநில மக்களுக்கு உள்ள பாதுகாப்பு. அந்த ஆங்கிலத்தை அகற்றிவிட்டோம் என்றால்—நேரடியாக இந்தி என்னும் ஈட்டி வந்து பாய்ந்து Composite culture of India என்று சொல்லக்கூடிய அனைத்து மட்டத்திலும் சென்று Medium of expression—ஆக கால கட்டத்தில் இந்தி வந்துவிட வேண்டும் என்பதுதான் உள்நோக்கம் என்பதை வெளிப்படையாக தெள்ளத் தெளிவாக 351—வது

[திரு. சி. பொன்னையன்] [1986 நவம்பர் 13

பிரிவிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட அவர்கள் வளர்க்க விரும்புகிற இந்தியைக் கட்டாயப்படுத்துகிற நிலை—''To promote the spread of the Hindi language, to develop.... .''—This is now treated as a mandatory one.—இந்த ஆர்டிகிள் பிரகாரம் வந்திருக்கிறது. ஆகவேதான் வளர்க்கப்படுகின்ற மொழிகளில், பிற மொழிகளுடன் சேர்த்து இந்தியையும் வளருங்கள் என்று சொன்னார்கள். பேராசிரியர் அவர்கள் கூட சொன்னார்கள். This is a language not born, but this is a language created. அப்படி அவர்கள் மொழிகள் உற்பத்தி செய்கின்றபோதும் கூட, Primarily from Sanskrit, secondarily from other languages என்று சொல்லி, சமஸ்கிருத மொழியினுடைய பெரும்பான்மையான பங்கை எடுத்து இந்தி மொழியிலே வளர்க்க வேண்டுமென்று அன்றைய உள்நோக்கத்தைச் சுட்டிக் காட்டினார்கள். 344 பிரிவிலே ஒரு ஷரத்தை அப்போதே கொண்டு வந்திருக்கிறார்கள்.

''The President shall, at the expiration of five years from the commencement of this Constitution and thereafter at the expiration of ten years from such commencement, by order constitute a Commission which shall consist of a Chairman and such other members representing the different languages specified in the Eighth Schedule as the President may appoint.....'' என்று சொல்வது, ஒரு கமிஷனை கான்ஸ்டிட்யூட் பண்ண வேண்டியது, This is again a mandatory direction. அப்படி ஒரு குழுவைப் போட்டு, அந்தக் குழுவின் பணி என்ன என்பதையும் அரசியல் சட்டத்திலே கட்டாயப் பணியாகச் சொல்லியிருக்கிறார்கள்.

''It shall be the duty of the Commission.——''

இது Mandatory provision. 'ஷெல்' என்ற வார்த்தையைப் பயன் படுத்திச் சொல்லியிருக்கிறார்கள்.

''It shall be the duty of the Commission to make recommendations to the President . . . ''

In fact the President is bound to carry out these recommendations. அதைச் சொல்லும்போது பிரிவு 2—ஏ-விலே சொல்கிறார்கள். ''2(a) the progressive use of the Hindi language for the official purposes of the Union'' படிப்படியாக, கட்டாயமாக மைய அரசினுடைய அனைத்து அலுவலகப் பணிகளுக்கும் இந்தி கொண்டுவரப்படவேண்டுமென்பதை அரசியல் சட்டப் பிரிவிலே அன்றே கொண்டுவந்துவிட்டார்கள். இன்று மாட்டோம், மாட்டோம், திணிக்க மாட்டோம் என்று ஒருபுறம் சொல்வதும். . . .(குறுக்கீடு)

திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இடையிலே தலையிடுவதற்கு மன்னிக்கவும். இவ்வளவு தெளிவாகச் சொன்ன நீங்கள், அமைக்கப்பட்ட அபிஷியல் லாங்வேஜ் கமிஷனுடைய டார்ம்ஸ் ஆப் ரெஃபரென்சையும் இணைத்துச் சொல்வீர்களானால் நன்றாக இருக்கும்.

1986 நவம்பர் 13]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இதை முதலில் முடித்து விடுகிறேன். அப்படி அவர்கள் கமிஷனை கான்ஸ்டிட்யூட் பண்ணச் சொல்லிவிட்டு, "the progressive use of the Hindi language for the official purposes of the Union" என்று சொல்லிவிடுகிறார்கள். அதற்கடுத்து 343 (3)-வது பிரிவு பிரகாரம், "....the Parliament may by law provide for the use, after the said period of fifteen years...." என்று ஆங்கிலம் தொடர்ந்து இருக்க சட்டம் கொண்டுவரலாம் என்ற பிரிவைப் பயன்படுத்தி 1963-லே அபிஷியல் லேங்குவேஜ் ஆக்ட் என்ற சட்டம் கொண்டுவந்து, பண்டித நேருவினுடைய உறுதிமொழி 1968-லே சேர்க்கப் பட்டிருக்கிறது. This is nearly an act of law. With a simple majority of Parliament at any time it can be scrapped. என்ற முறையிலே அதைக் கொண்டு வருகிறோம். காரணம் அதே நேரத்தில், 344-வது பிரிவில், This is a constitutionally mandatory provision. அதையும் கட்டாயப்படுத்துகிறார்கள். "The progressive use of Hindi language for the official purposes of the Union" அதைத்தான் தற்போது செய்துவருகிறார்கள். அரசியல் சட்டத்திலே எங்களுக்கு அதிகாரத்தைப் பெற்றுவிட்டோம்—அபிஷியல் லேங்வேஜ் ஆக்ட் என்று நேருவினுடைய உறுதிமொழியின்படி சட்டத்தைக் கொண்டு வந்தாலும்கூட, அதைவிட உயர்ந்த சட்டம் அரசியல் சட்டத்திலே இருக்கிற பாதுகாப்பு, கட்டளை இந்தியை வளர்க்கவேண்டும், பரப்பவேண்டும் என்று—எனவே திணிக்கிறோம் என்று சொல்லி, நாம் எத்தனை போராடினாலும், அவர்கள் திணித்துக்கொண்டே யிருக்கிறார்கள். ஆனால் சொல்கிறார்கள், ரெஸ்ட்ரிக்ஷன்ஸ் என்று, இந்தியை இங்கேயும் பரப்புவது, திணிப்பது, விரிவு படுத்துவது என்பது மட்டுமல்ல. "Restrictions on the use of the English language for all or any official purposes of the Union" எப்போது இந்தியைத் திணிக்கமுடியும்? எப்போது இந்தியைப் பரப்பமுடியும்? எப்போது இந்தி மொழி பேசாத மக்களை இந்தி மொழியின் மூலமாக அடிமைப் படுத்தமுடியும்? அல்லது ஷரத்து 351-ல் கூறியபடி, "medium of expression" என்று சொல்லக்கூடிய அளவிற்கு, குழந்தைப் பருவத்திலேயிருந்து எல்லா வீடுகளிலும் இந்தி மொழி தவழவேண்டுமென்ற இந்த உள்நோக்கத்தை ஈடேற்றமுடியும்? அந்த 344-வது பிரிவிலே சுட்டிக்காட்டப் பட்டவாறு இந்தியை பரப்புவது ஒரு முறை. மாறாக அதற்கு தடைக் கல்லாக, தடுக்கின்ற கவசமாக இருக்கின்ற ஆங்கிலத்தை அகற்றினாலொழிய இந்தி திணிப்பை ஈடேற்ற முடியாது என்ற சூழ்ச்சியான எண்ணம் வருகின்ற முறையில், அந்த உள்நோக்கத்தில், அது வகுக்கப்பட்ட காரணத் தால்தான் "Restrictions on the use of the English language for all or any official purposes of the Union." என்று அதையும் அங்கே தெளிவுபடுத்திவிட்டார்கள்.

அதைப்போலவே இன்னும் ஒரு அபாயத்தை அப்போது செய்தார்கள். இன்னும் ஒரு அபாயம் என்று சொல்லும்போது, நீதிமன்றங்களைப் பற்றி அம்மையார் அவர்கள் பேசுகிறபோது

[திரு. சி. பொன்னையன்] [1986 நவம்பர் 13

சொன்னார்கள், நீதிமன்றங்களில் ஏன் இந்தத் தாய் மொழியைக் கொண்டுவரக்கூடாது என்று. அரசினுடைய நோக்கம் அப்படி அல்ல. நீதிமன்றங்களின் மொழியாக இருந்தாலும் சரி, ஆட்சி மன்ற மொழியாக இருந்தாலும் சரி, தாய் மொழி தமிழ் மொழியாக தவத் திருநாட்டில் தவழவேண்டுமென்பது தான் கொள்கை. ஆனால் ஆங்கிலத்தைப் பொறுத்தவரையில் இந்திய துணைக் கண்டத்திலே அரசியல் சட்டத்தினுடைய 343-வது பிரிவும், அதையொட்டி 210, 120 போன்ற பிரிவுகள் எல்லாமும் திருத்தப்பட்டு அரசியல் சட்டரீதியான பாதுகாப்பு இந்தி பேசாத 21 மாநிலப் பகுதி மக்களுக்குக் கிடைக்கின்ற காலம் வரை இந்திய துணைக் கண்டத்தினுடைய பாதுகாப்பு மொழியாக, இந்தி பேசாத மக்களுடைய பாதுகாப்பு மொழியாக, கவசமாக ஆங்கிலம் இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்தத் தீர்மானத்தை தற்போது நாம் கொண்டு வந்திருக்கிறோம். இதையொட்டி மாண்புமிகு முதல்வர் அவர்களும் 3–2–1983-லும், அதற்கு முன்னால் 1977-லும் தமிழ்நாடு சட்ட மன்றக் கூட்ட அவையிலே, ஆளுநர் உரையிலே இந்த அரசினுடைய கொள்கை என்ன என்பதைத் தெளிவுபடுத்தினார்கள். அமரர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது உருவாக்கிய, இப்பேரவையால் ஒருமனதாக ஒப்புக்கொள்ளப் பட்ட இரு மொழிக் கொள்கையை செயல்படுத்துவதே எனது அரசாங்கத்தின் உறுதியான கோட்பாடாக இருக்கும், இந்த இருமொழிக் கொள்கை தமிழ்நாட்டினுடைய மக்களின் விருப்பத்தை அப்படியே பிரதிபலிக்கிறது என தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அண்ணா அவர்களுடைய கொள்கையிலிருந்து சிறிதும் பிறழாத முறையில் இந்தி பேசாத மக்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற முறையில் தமிழ்நாட்டு மக்கள் எதிர்காலத்திலே அடிமைகளாக இந்தி மொழித் திணிப்பால் ஆக்கப்படக்கூடாது என்பதனை உணர்த்துகின்ற வகையில் அப்போது அதைக் கொண்டு வந்தார்கள்.

(முற்பகல் 11–50)

அதைப்போலவே 1983ம் ஆண்டு இந்தி பல்வேறு கட்டங்களில்— நான் ஏற்கனவே சொன்னேன்— அரசியல் சட்டப் பிரிவுகளுடைய ஆதாரத்தின் அடிப்படையில் திணிக்கப்பட்டபோது அந்தத் திணிப்பைக் கண்டித்து மத்திய அரசுக்குத் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தாக்கீது அனுப்பினார்கள்.

அதை 3–2–1983-லே அனுப்பியிருக்கிறார்கள்.

"Dear Prime-Minister",

"I am writing this letter to express the grave concern of the people in Tamil Nadu over the move to impose Hindi on people of non-Hindi speaking areas, contrary to the assurances given by the

1986 நவம்பர் 13] [திரு. சி. பொன்னையன்]

Late Prime Minister Pandit Jawaharlal Nehru. You have also reiterated it and assured us that Hindi would never be imposed on non-Hindi speaking people against their will and that English would continue to be the Official language as long as they wished. It was in this spirit that you were kind enough to revise the earlier stand of the Government of India and to order the discontinuance of the relay of news bulletin in Hindi by the Madras T.V. Station and also to drop the use of the name 'Akashvani' for 'All India Radio'.

While official pronouncements of leaders like you thus reassure and allay the fears of non-Hindi speaking people, several things are being done to disturb the assured position and to insinuate and impose Hindi gradually on non-Hindi speaking people. For instance, it is reported that in Central service, efforts are being made to replace English by Hindi gradually much to the chagrin of the non-Hindi speaking people.".

பெரியார் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல, டாக்டர் நாவலர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல பல்வேறு அமைப்புகள் மூலமாக இந்தி திணிக்கப்படுவதைக் கண்டித்து 3-2-1983-ல் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அனுப்பினார்கள்.

"It appears that the Railway Board is in the lead and has launched a massive programme to speed up the process of opening Hindi Cells in the Offices in Railways and by insisting on notes and correspondences being in Hindi. This puts the non-Hindi speaking staff at a great disadvantage. It is also stated that they would not be eligible for their annual increments if they did not pass 'Praveen', the examination in Hindi within a period of two years."

இரண்டு ஆண்டுக் காலத்திற்குள் இந்தி மொழியைப் படிக்கத் தவறுவார்களேயானால் இரயில்வே துறையிலே உத்தியோக உயர்வே இந்தி பேசாத மக்களுக்கு கிட்டாது என்பதைக் கண்டித்து எழுதுகிறார்கள். அதைப்போலவே,

"Added to this is the celebration of Hindi Week by the Railways, that has been organised in the city of Bangalore, a non-Hindi speaking area. This raises a strong suspicion in the minds of the people of this region, about the intention of the Government of India. All these are contrary to the assurances of Nehru.

மீண்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாக்குகிறார்.

"I am afraid such measures which are ill-advised" would only undermine national integration and would create distress in the minds of the non-Hindi speaking people."

இதுபோன்ற தவறான ஆலோசனையின் பேரில் மேற்கொள்ளப் படுகின்ற பாதகமான இந்தி திணிப்பு நாட்டு ஒற்றுமைக்குப் பங்கத்தை விளைவித்துவிடும்; இந்தி பேசாத மக்களுடைய

[திரு. கி. பொன்னையன்] [1986 நவம்பர் 13

உள்ளத்தில் சந்தேகத்தை ஆழமாக எழுப்பிவிடும் என்பதனைத் தெளிவுபடுத்தி இந்த முறையினை மாற்ற வேண்டும் என்று வலியுறுத்தி அன்றைக்கு அவர்களுக்கு எழுதியிருக்கிறார்கள்.

அதைப் போலவே, 1985-லே சர்க்காரியா கமிஷன் மத்திய அரசால் அமைக்கப்பட்டு மாநில அரசினுடைய கருத்து கேட்கப் பட்டபோதே, நான் இதுகாறும் விளக்கிய அனைத்தும் அண்ணா அவர்களுடைய கொள்கை என்ன, ராஜ்யசபாவில் என்ன பேசினார், அதைப் போலவே, அண்ணா அவர்கள் 1968-லே சட்ட மன்றத்திலே தீர்மானம் போட்டபோது என்ன கருத்துக்களைச் சொன்னார்கள் என்பதையெல்லாம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் சேர்த்து இரு மொழிக் கொள்கையினுடைய இன்றியமையாத் தேவையை வலியுறுத்தி, இந்தி மொழியினுடைய அபாயத்தையும் ஆங்காங்கு சுட்டிக்காட்டி அரசியல் சட்டத்திலே எத்தகைய மாற்றங்களை ஆர்ட்டிகிள் வாரியாகச் செய்யவேண்டும் என்பதையும் தெளிவுபடுத்தி 1985-லே மைய அரசு நியமித்த சர்க்காரியா கமிஷனுக்கு ஒரு ரிப்போர்ட்டை நாம் அனுப்பியிருக்கிறோம்.

அதைப் போலவே, நமது டாக்டர் நாவலர் அவர்களும் 16-9-1986-இல்— இந்தி மொழித் திணிப்பிற்காக நடவடிக் கைகள் மைய அரசால் மேற்கொள்ளப்பட்டபோது— மைய அரசுக்குத் தெளிவுபடுத்தி ஒரு தாக்கீதை எழுதியிருக்கிறார்கள். அதிலே "The circulars, instructions and clarifications have given rise to agitations and domonstrations in several cities and towns in Tamil Nadu" என்று சொல்லியுள்ளார். மாண்புமிகு மரியாதைக்குரிய பேராசிரியர் அவர்கள் கூட அந்த சர்க்குலரைப் பற்றிச் சொன்னார்கள். அதை சாதாரணமாக இந்த அரசு எந்தக் காலத் திலும் எடுத்துக் கொள்ளவில்லை. அப்படி மத்திய அரசினுடைய ஒரு சர்க்குலர் வந்தபோது, உடனடியாக அதை நாம் ஏற்காமல், நிலைமையைத் தெளிவுபடுத்தி அது அபாயகரமான ஒன்று ; அது தமிழக மக்களுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய ஒன்று என்று மாண்புமிகு முதல்வர் அவர்களின் சார்பில் நாவலர் அவர்கள் மைய அரசுக்குத் தாக்கீதை எழுதினார்கள்.

அந்த சர்க்குலரை மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் திருமதி யசோதா அம்மையார் அவர்களும் படித்திருக்கக்கூடும். அதிலே ஏதோ ஒரு வாரத்திற்குத்தான் அத்தகைய இந்தித் திணிப்பு என்பதாக வெளியே சொன்னார்கள். உண்மை நோக்கம் அது அல்ல. இது எந்த ஷரத்தின் அடிப்படையில் வெளியிடப்படுகிறது என்பதை ஏற்கனவே பேசுகிறபோது நான் சுட்டிக்காட்டினேன்.

351-வது ஆர்ட்டிகிளின் பிரிவில் கட்டாயப்படுத்தப்படுகிறது. பிறந்த குழந்தைகளே, பேசத் துவங்குகிறபோதே, 'மா', 'பிதாஜி' என்று கூறக்கூடிய அளவுக்கு " medium of expression for all the elements of the composite culture" என்று ஒரு விதியைப் போட்டு விட்டு—கட்டாய விதியை—அதைப் பரப்புவது கட்டாயக்

1986 நவம்பர் 13] [திரு. சி. பொன்னையன்]

கடமை என்று 344-வது பிரிவிலே ஒரு கமிஷனையும் போட்டு, இந்தியைப் பரப்ப வேண்டும், திணிக்கவேண்டும், விரிவுபடுத்த வேண்டும், அதற்குத் தடையாக இருக்கிற ஆங்கிலத்தை அகற்ற வேண்டும் என்ற பிரிவையும் போட்டுவிட்டு, இப்படி அவர்கள் அனுப்புகிற சர்க்குலர் எல்லாம் ஏதோ விளையாட்டாக அனுப்பு கிறார்கள். தெரியாமல் அனுப்புகிறார்கள் என்றால், இந்தி பேசாத மாநிலத்தைச் சேர்ந்த மக்கள் ஏமாளிகள் என்று எண்ணுவது இந்திய ஒற்றுமைக்கே ஆபத்தாக விளைந்துவிடும் என்பதைத்தான் பல தலைவர்கள் அவ்வப்போது எடுத்துச் சொல்லி வருகிறார்கள்.

ஏதோ இந்தி பேசாத மாநிலத்தைச் சேர்ந்த மக்கள் எல்லாம் இந்தியத் துணைக் கண்டத்தினுடைய ஒற்றுமைக்கு எதிரான வர்கள் என்றும், இந்தி பேசுகிற மாநிலத்தைச் சேர்ந்த மக்கள் மட்டுமே இந்தியத் துணைக் கண்டத்தினுடைய ஒற்றுமைக்குப் பாடுபடுகிறவர்கள் என்றும் ஒரு எண்ணத்தை ஏற்படுத்துவது உண்மையிலேயே துரதிர்ஷ்டவசமானது. இந்தியத் துணைக் கண்டத்தினுடைய பெரும்பான்மையான மக்கள் இந்தி பேசாத மக்கள், அந்தப் பெரும்பான்மையான மக்கள் இந்தியத் துணைக் கண்டம் ஒன்றாக இருக்கவேண்டும் என்றுதான் விரும்புகிறவர்கள். இந்தியத் துணைக் கண்டத்தினுடைய சிறுபான்மையான மக்கள், 9 மாநிலத்தைச் சேர்ந்த மக்கள்— பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த இந்தி பேசுகிற மக்கள்— சிறுபான்மையினரான அவர்கள் பேசுகிற மொழியைப் பெரும்பான்மையினரான 21 மாநில மக்கள் மீது திணிக்க வேண்டும் என்று எண்ணுகிறபோதுதான் நாட்டினுடைய ஒற்றுமைக்கு ஆபத்தை அவர்கள் தேடுகிறார்கள். மாறாக, இந்தி பேசாத மாநிலங்களைச் சேர்ந்த மக்கள் நாட்டு ஒற்றுமையில் அக்கறையோடு இருக்கிற காரணத்தால், இந்தியத் துணைக் கண்டம் என்றும் ஒன்றாக இருக்கவேண்டும்; விஞ்ஞான ரீதியாக, தொழில் ரீதியாக, பொருளாதார ரீதியாக மேம்பாடு அடைய வேண்டும் என்ற தேசிய உணர்வு, ஒற்றுமை உணர்வு இந்தி பேசாத மக்களுக்கு இருக்கிற காரணத்தால்தான் இந்த அளவுக்கு, இத்தகைய ஒரு ஆதிக்க உணர்வும், இத்தகைய இந்தி திணிப்பு முறையிலே இந்தியாவே துண்டாக சிதறிவிடுமோ என்ற ஒரு அச்ச நிலை உருவானாலும்கூட பரவாயில்லை, இந்தியைத் திணித்தே தீரவேண்டும் என்று மத்திய அரசைச் சேர்ந்தவர்களால், இந்தி பேசுகிற மாநில மக்களுடைய தூண்டுதல் காரணமாக அல்லது அவர்களைக் கண்டு அஞ்சுகிற காரணத்தால், திணிக்கப்படுகிறதோ என்ற அச்சமும்தான் தமிழக மக்கள் மத்தியிலே எழுந்திருக்கிறது. அதன் அடிப்படையில்தான், அந்த சர்க்குலரைப் பற்றிச் சொன்னார்கள். அதிலே தெளிவாக இருக்கிறது. அம்மையார் அவர்களுக்கு அதை மட்டும் படிக்க விரும்புகிறேன். The preamble must be gone into. With a view to accelerate.... இந்த சர்க்குலரை அனுப்புகிறார்கள். மைய அமைச்சர்களே சொல்கிறார்கள். மைய அரசைச் சார்ந்தவர்கள் சொல்கிறார்கள். காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்தவர்கள்

[திரு. சி. பொன்னையன்] [1986 நவம்பர் 13

சொல்கிறார்கள். ஏதோ ஒரு வாரத்திற்கு, 'ரெக்ரியேஷன்' போல, விளையாட்டு போல இந்த சர்க்குலரை அனுப்புகிறார்கள் என்பது அல்ல. அது அல்ல அவர்கள் நோக்கம்.

"With a view to accelerate the use of Hindi as official language". Where it is derived from? It is directly derived from Articles 344 and 351 of the Constitution. It is a mandatory direction. அந்த அதிகாரி சொல்வார்; 'இந்த சர்க்குலரை நான் அனுப்ப வில்லையென்றால், இந்தித் திணிப்பை இந்த முறையில் நான் தீவிரமாக மேற்கொள்ளவில்லையென்றால், அரசியல் சட்டத்தினுடைய 351-வது பிரிவை, அரசியல் சட்டத்தினுடைய 344-வது பிரிவை—அந்தக் கட்டாயப் பிரிவுகளை மீறிய குற்றத்திற்கு நான் ஆளாக்கப்படுவேன். இந்தியைத் திணிக்கவேண்டும், பரப்ப வேண்டும், அது என்னுடைய கடமை' என்பார்.

(நண்பகல் 12-00)

''புரோகிரசிவ் யூஸ் என்று இந்தி எல்லா மாவட்டத்திலும் ஒரு காலத்தில் வந்தாகவேண்டும், ஆங்கிலம் ஒழிக்கப்பட வேண்டும்'' என்று அரசியல் சட்டம் கூறுகிறது. ஆக இது அரசியல் சட்டம் கூறுகிற கட்டாயம் என்று ''பிரியாம்பிளில்'' இதை எழுதுகிறார்.

"With a view to accelerate the use of Hindi as official language the Department of Official Language—Ministry of Home Affairs—Chapter XVII—Art. 343 to 351

இப்படி அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவுகளைச் சுட்டிக் காட்டிவிட்டு 17-வது சேப்டரில் வருகிற பிரிவைச் சுட்டிக் காட்டுகிறார்கள். அதைச் சுட்டிக்காட்டித்தான் சர்க்குலர் அனுப்புகிறார்கள். ஏதோ விளையாட்டாக ஒரு வாரத்திற்கு அனுப்புகிற ரிக்ரியேஷன் அல்ல.

"..has emphasised the need to organise a Hindi Day or Hindi Week once in a year. Accordingly it has been decided to organise a Hindi week. The employees in the Directorate and Public Undertakings are requested to do their routine work in Hindi to the maximum extent"

இதையெல்லாம் அரசியல் சட்டத்தில் 17-வது சேப்டரில் கட்டாயமாகக் சொல்லப்பட்டிருக்கிற பிரிவுகளையொட்டிச் செய்கிறார்கள். அரசியல் சட்டத்தின் 343—வது பிரிவை மாற்றி இந்தி இருக்கிற இடத்தில் இந்திக்குப் பதிலாக ஆங்கிலத்தை வைப்பதோ அல்லது இந்தியோடு ஆங்கிலத்தை இணைத்துவிடுவதோ என்பது மட்டுமல்ல. அரசியல் சட்டத்தின் 8-வது அட்டவணையில் சொல்லப்பட்டிருக்கிற 15 மொழி

1986 நவம்பர் 13] [திரு. சி. பொன்னையன்]

களோடு, திருத்தம் கொண்டுவந்து ஆங்கிலத்தோடு 16 மொழிகளைச் சேர்த்துவிடுகிற காரணத்தால் மட்டும் மைய அரசு இந்தித் திணிப்பை நிறுத்திவிடாது. அரசியல் சட்டத்தின் 351 ஆவது பிரிவை மாற்றியாக வேண்டும். அதுபோன்ற பிரிவுளை மாற்றினால்தான் இந்தித் திணிப்பைத் தடுக்க முடியும்.

இந்தி பேசுகிற 9 மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் இந்தியாவில் உள்ள இந்தி பேசாத 21 மாநிலங்களைச் சேர்ந்தவர்களையெல்லாம் நிரந்தரமாக அடிமையாக ஆக்குகிற கொடுமையிலிருந்து காக்க வேண்டும் என்று இதைக் கண்டித்து எழுதியிருக்கிறோம்.

ஆங்கிலேயர்கள் இந்த நாட்டை அடிமைப்படுத்தினார்கள் என்று சொல்லுகிறோம். அந்த ஆங்கிலேயர்களுக்கு நாம் எந்தக் காலத்திலும் விசுவாசிகளாக இருந்ததில்லை. ஆனால் இந்தியா என்கிற இந்தத் துணைக் கண்டம் பல்வேறு நாடுகளாக இருந்த நிலைமையை மாற்றி ஒரு நாடாக உருவாக்கிய பெருமை அந்த ஆங்கிலத்திற்குத்தான் உண்டு. நம்மை அடிமைப்படுத்திய அந்தத் தவறைச் செய்திருந்தபோதிலும் நம்மை ஒரு நாடாக உருவாக்கிய பெருமை அந்த ஆங்கில மொழிக்குத்தான் உண்டு.

இந்தி மொழி பேசுகிற 9 மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் இன்றைக்கும் உலக நாடுகளோடு மற்றும் மேலை நாடுகளோடு தொடர்பு கொள்வதற்கும்—வர்த்தக ரீதியாக—டிரேட் அண்டு காமர்ஸ்—தொழில் ரீதியாக மற்றும் விஞ்ஞான மேம்பாட்டிற்காக தொடர்பு கொள்வதற்கும் ஆங்கிலத்தைத்தான் பயன்படுத்துகிறார்கள். இந்த 9 மாநிலத்தைச் சார்ந்தவர்களும் மேற்சொன்ன காரியங்களுக்காக இந்தி மொழியைத் தொடர்பு மொழியாகப் பயன்படுத்துவதில்லை. ஆங்கிலத்தில்தான் தொடர்பு கொள்கிறார்கள். இந்தியாவில் உள்ள மொத்த 30 மாநிலங்களிலும் உள்ளவர்கள்—நான் யூனியன் டெரிடரியில் உள்ளவர்களையும் சேர்த்து சொல்லுகிறேன்—உலக அளவில் விஞ்ஞான மற்றும் தொழில் மேம்பாட்டிற்காக ஆங்கில மொழியைத்தான் பயன்படுத்துகிறார்கள். ஆக இந்தி மொழி பேசும் மாநிலத்தில் உள்ளவர்கள்கூட இன்டர்நேஷனல் லிங்க்—தேவையென்று ஆங்கிலத்தைத்தான் பயன்படுத்துகிறார்கள். உலக நாடுகளோடு தொடர்பு கொள்ள ஆங்கிலத்தைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் நம்மைப் பார்த்து உலக நாடுகளோடு தொடர்பு கொள்ள ஆங்கிலத்தைப் பயன்படுத்துங்கள். எங்களோடு தொடர்பு கொள்ள இந்தியைப் பயன்படுத்துங்கள். உங்கள் மாநிலத்தில் உங்களுடைய மொழியைப் பயன்படுத்துங்கள் என்று சொல்லி, நம்மை இத்தனை மொழிகளைப் படிக்கச் சொல்லுகிறார்கள். இதன் மூலமாக இந்தி பேசாத மற்ற மொழி பேசுகிறவர்கள் எல்லோரையும் நிரந்தர அடிமைகளாக ஆக்குகிற அபாயம் ஏற்பட்டுவிடக் கூடாது. தமிழ்நாட்டில் மட்டுமல்ல. இந்தி பேசாத மற்ற அனைத்துப் பகுதிகளிலும் இருக்கிற மக்களிடையே இன்றைக்கு ஒருவித அச்சம் ஏற்பட்

டிருக்கிறது. இது மாற்றப்படவேண்டும் என்பதுதான் இந்த அரசின் நோக்கம் என்பதை நான் இங்கே தெளிவாக எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போலவே இன்னொரு தாக்கீது குறித்தும் இங்கே சொல்ல விரும்புகிறேன். இந்தியைத் திணிக்கவில்லை என்று மாண்புமிகு அம்மையார் சொன்னதற்காக நான் இதைக் குறிப்பிடுகிறேன். (குறுக்கீடு) இந்தியப் பிரதமரை நாங்கள் மதிக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் என்ன சொல்ல விரும்புகிறார் என்பது எனக்குப்புரிகிறது. I am amending it—ஆங்கிலம் தேவை என்பதற்காகச் சொல்கிறேன். இந்தி திணிப்பு வேண்டாம் என்று இங்குள்ள காங்கிரஸ்காரர்கள் சொல்கிறார்கள். இந்தி பேசாத மாநிலத்தில் இருக்கிற உங்களின் உணர்வைப் புரிந்து கொள்கிறோம். ஆனால் உங்களின் உணர்வு டெல்லியில் செல்லுபடியாகவில்லையே என்றுதான் வருந்துகிறேன். இந்தி திணிக்கப்படக் கூடாது என்பது உங்களுடைய எண்ணம். கொள்கை. உண்மை. எங்களோடு ஒன்றுகிறீர்கள், வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். உங்கள் எண்ணத்திற்கு மதிப்பு இருக்கிறதா என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

பாரதப் பிரதமர் ஓர் உறுதிமொழியைத் தந்திருக்கிறார், அதை நீங்கள் ஏன் நம்பக்கூடாது என்று கேட்டால், நாங்கள் நம்புகிறோம். இன்றைய பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களை நம்புகிறோம். மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களையும் நம்புகிறோம், பண்டிதர் ஜவஹர்லால் நேரு அவர்களையும் நம்புகிறோம். பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் ஒரு பெரும் உறுதி மொழியைத் தந்து கொண்டிருக்கிறார். ஆனால் மறுபுறம் என்ன வருகிறது ? தமிழகத்தைச் சேர்ந்த நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு பகுதியிலிருந்து ஒரு பெரியவர் பாரதப் பிரதமருக்கு ஓர் அஞ்சல் எழுதுகிறார். தன்னுடைய மகன் வேலை வாய்ப்பின்றியிருக்கிறார், அவருக்கு வேலை வாய்ப்புத்தேடித் தாருங்கள் என்று எழுதுகிறார். அந்த அஞ்சலுக்குப் பாரதப் பிரதமர் அலுவலகத்திலிருந்து பதில் அஞ்சல் வந்திருக்கிறது. அவருக்குத் தெரிந்து நடந்தது என்று நான் சொல்லவில்லை.

அரசியல் சட்டத்தின் 351-வது பிரிவையும், 344-வது பிரிவையும் திருத்த எத்தகைய நடவடிக்கையேனும் மேற்கொண்டு எப்படியாயினும் திருத்தி, காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை நர்சரி பள்ளிகள் முதற்கொண்டு தாய்மொழி இருக்க வேண்டும் என்ற நிலையைக்கொண்டுவர வேண்டும். அப்படியில்லாமல் இந்தி மொழி வந்துவிட வேண்டும் தாய்மொழி அழிந்துவிட வேண்டுமென்ற நோக்கத்தோடு செயல்படக் கூடாது. ஏனென்றால் பிரிவு 351-ல் "Medium of expression for all elements of the composite culture" என்று சொல்கிறார்கள்.

1986 நவம்பர் 13] [திரு. சி.பொன்னையன்]

அதை ஈடேற்றுகிற பணி பாரதப் பிரதமரை மீறி நடக்கிறது என்றால், அதைத் தடுக்க வேண்டுமென்றால் அரசியல் சட்டத் திருத்தம் வந்தால்தான், பிரிவுகள் 341, 344, 345 மற்றும் 351 ஆகியவை திருத்தப்பட்டாலொழிய, பிரதமரே நினைத்தாலும் அதை அவரால் மாற்ற முடியாது, இதற்கு எடுத்துக்காட்டு பாரதப் பிரதமர் அலுவலகத்திலிருந்து வந்த பதில், இந்தியில் வந்திருக்கிறது. அந்த அஞ்சலில் ஒரு வரிகூட ஆங்கிலம் கிடையாது,

"I am in receipt of your letter addressed to the Prime Minister, dated 5th July 1986 and I am to inform you that it is being forwarded, with enclosures, to the Government of Tamil Nadu for suitable action.".

என்று இந்தியில் எழுதியிருக்கிறார்கள். முதலாவதாவது இந்தியில் எழுதக் கூடிய அளவிற்கு வெறி பிடித்து இந்தியைத் திணிப்பதைப் பாரதப் பிரதமர் திரு. இராஜீவ் காந்தி அவர்கள் மேற்கொள்வார் என்றோ, பாரதப் பிரதமர் செய்கிற தவறு என்றோ நான் சொல்லவில்லை. பாரதப் பிரதமர் ஆங்கில மொழிக்கு பாதுகாப்புத்தர வேண்டுமென்றும், இந்தி என்ற ஈட்டியின் தாக்குதலிலிருந்து பாதுகாப்புத்தர வேண்டுமென்றும் எண்ணுவது, அரசியல் சட்டத்தின் பிரிவுகள் 343, 344, 345 மற்றும் 351 உடனடியாகத் திருத்தப்பட்டாலொழிய ஈடேறாது,

பாரதப் பிரதமர் நினைத்தாலும், ஆயிரம் வாக்குறுதிகள் தந்தாலும், இந்தி மொழி காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை கட்டாயம் திணிக்கப்படும், இரண்டாந்தர குடிமக்களாக அடிமைகளாக இந்தி—பேசாத மக்கள் என்றென்றும் ஆக்கப்படுவார்கள். சமுதாய ரீதியாக, மறுமலர்ச்சி ரீதியாக, விஞ்ஞான ரீதியாக, அறிவியல் ரீதியாக அவர்கள் அடிமைகளாக ஆக்கப்படுவார்கள். அந்த நிலைமை மாறவேண்டுமென்றால் அரசியல் உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு எப்படியாயினும் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும். ஆங்கிலத்திற்கு பாதுகாப்பு தரப்பட வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. ஆங்கிலத்துக்கு ஆபத்து என்பது பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. இந்திய துணைக் கண்டத்திலே உள்ள பல மொழிகளில் ஒரு துணை மொழியாக ஆங்கிலம் இருக்கிறது. அதைக் கவசமாக வைத்திருக்கிறோம். பிரிவு 351-ன்படி Medium of expression என்ற வகையில் வீட்டிலே பிறந்த குழந்தை 'மா', 'பிதாஜி' என்று பேசுகின்ற அடிமை முறையைக் கொண்டுவருகிறபோது, இந்தி-பேசாத மக்களும் விடுதலை பெற்ற சுதந்திர இந்தியாவில் உண்மையிலேயே விடுதலைப்பெற்ற மக்களாக இருக்க வேண்டுமென்றால் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்பதுதான் தமிழக அரசின் நோக்கம், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுடைய நோக்கம். அந்த அடிப்படையிலேதான் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

1-10-1986-ல் தமிழகத்தின் முதலமைச்சர், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் மைய அரசுக்கு எழுதிய கடிதத்தில் தெளிவுபடுத்தியிருக்கிறார். இங்கே பேசுகின்றவர்கள் ஏதோ தவறான கருத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்ற எண்ணம் தமிழக அரசுக்கு, மாண்புமிகு முதலமைச்சருக்கு இல்லை என்ற நோக்கத்தோடு சில செய்திகள் வந்ததாகச் சொல்கிறார்கள். அது சரியல்ல என்பதற்காகத்தான் தெளிவுபடுத்தினேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் சார்பாக அவருடைய உள்ளக்கிடக்கை, எண்ணக்கிடக்கை, அண்ணாவின் அடிச்சுவட்டில் நடக்கிற அவருடைய கொள்கை பாதையை விளக்கிச் சொன்னேன். மைய அரசுக்கு அவர் தன்னுடைய கருத்தை எழுதியிருக்கிறார். பாரதப் பிரதமர் திரு. இராஜீவ் காந்தி அவர்களுக்கு எழுதியிருக்கிறார்.

"I thank you for your kind message, dated 26th September 1986 communicated to me in United States through your Home Minister Mr. Buta Singh. It is re-assuring to note from this message that there is no question of imposing Hindi on non-Hindi speaking people and that you stand by the assurance of the late Pandit Nehru and the late Thirumathi Indira Gandhi that English would continue to be the official language as long as the non-Hindi speaking people wanted it. I sincerely hope that the Ministries and Departments of the Central Government, all Central Government Undertakings and other authorities will take into account this assurance and act according to the said assurance. The directive issued by the Government of India Directorate of Field Publicity on 5th September 1986 has caused great concern and resentment among the people of Tamil Nadu. In confommity with the assurance given by late Pandit Nehru and the late Thirumathi Indira Gandhi that English would continue to be the official language of the Union as long as the non-Hindi speaking people wanted it, any circular or directive which has directly or indirectly the effect of imposing Hindi on non-Hindi speaking people and particularly on the people of Tamil Nadu is not at all acceptable. I, therefore, request you to kindly issue instructions to all the Ministries, Departments and Public Undertakings to act strictly in conformity with the abovesaid assurance.".

இதை மட்டும்தான் பத்திரிக்கையில் போட்டார்கள். அவர்கள் அளித்த உறுதிமொழி போதுமானது என்றுதான் போட்டார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 5 ஆம் பாராவில் எழுதியிருக்கிறார்கள்.

I also requust that the assurance of Pandit Nehru that English will continue to be used as the Official Language of the Union as long as the non-Hindi speaking people do not desire a change be given constitutional guarantee by way of suitable amendment to the Constitution.

என்று தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். பத்திரிகைகளில் சில செய்திகள் வந்திருந்தால் அது பத்திரிகைகள் தவறே ஒழிய வேறொன்றுமில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியில் திராவிட பாரம்பரியத்தைக் கட்டிக் காக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்தி மொழித் திணிப்பு பிரச்சினையிலும், தமிழ் மொழியைப் பாதுகாப்பதிலும் பேரறிஞர் அண்ணாவின் தம்பியாகச் செயல்படுகிறார் என்பதை எடுத்துக்காட்டத்தான், எந்த அளவுக்கு விரிவாக எழுதியிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி, எடுத்துக் காட்டினேன்.

(பிற்பகல் 12–10)

திரு. க. அன்பழகன்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள், இவ்வளவு தெளிவாக நடைமுறைகளிலே எப்படிப்பட்ட கருத்துக்கள் மத்திய அரசுக்குத் தெளிவாக்கப்பட்டன என்பதை எடுத்துச் சொன்னது, இது வரையில் வெளிவராத செய்திகளை இந்த அவை மூலமாக நாட்டுக்கு அறிவித்ததாகும். அப்படிப்பட்ட செய்திகளுக்கு மாறான செய்திகள் ஏடுகளில் வருகின்றன என்றால் அவ்வப் போது முதலமைச்சரவர்களுடைய சார்பிலே யாராவது ஒரு அமைச்சர் அந்தக் கருத்துக்களை அவ்வப்போது திருத்தி, அந்தத் திருத்தச் செய்திகளும் வெளிவருமானால், இன்றும்கூட மத்திய அரசு தன்னுடைய தவறுகளைத் திருத்திக்கொள்ள அல்லது மத்திய அரசை வலியுறுத்த ஏதுவாக, துணையாக இருக்கும். வெறும் அரசியலுக்காக மட்டுமல்லாமல், அரசின் கடமை என்பதற்காக, முதலமைச்சரவர்கள் சார்பாக வெளிவரும் கருத்துக்கள், முதலமைச்சருக்கு உடன்பாடற்ற கருத்து என்றால் உடனடியாக அதை மறுத்து தெரிவிக்க வேண்டிய கருத்தைத் தெரிவிக்கும் பொறுப்பை இந்த அமைச்சரவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ் மக்களுடைய நலன்களைப் பாதுகாக்கவும், இந்தி பேசாத மக்களுடைய நலன்களைப் பாதுகாக்கவும் பாரதத் துணைக் கண்டத்தில் பெரும்பான்மைப் பகுதிகளாக இருக்கும் 21 மாநிலங்களில் வாழும் மக்களை இரண்டாந்தரக் குடிமக்களாக ஆக்காமல் தடுக்கக்கூடிய முறையிலும் கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக, முழு மனதாக, இந்தி பேசாத மக்களுடைய நலனில் அக்கறையுள்ள நாம் அனைவரும் நிறைவேற்ற வேண்டுமென்ற நோக்கோடு, இதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று வேண்டுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன் முத்துராமலிங்கம் கொண்டு வந்துள்ள திருத்தத்திற்கு அரசு இசைவைத் தருகிறது. அரசு அதை ஏற்கிறது. திருத்தங்களுடன் இதை ஈடேற்ற நான் வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பொன் முத்துராமலிங்கம் அவர்களுடைய திருத்தத்தை அரசு ஏற்றுக்கொண்டுள்ளதால், அத் திருத்தம் தனித் தீர்மானத்துடன் இணைக்கப்படுகிறது.

[1986 நவம்பர் 13

வேரவை முன்னுள்ள கேள்வி :

"டாக்டர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தபோது, தமிழும் மற்ற தேசிய மொழிகளும் இணையத்தின் (Union) ஆட்சிமொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும் அதன்படியே அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்றும் இதை எய்தும் வரையில், ஆங்கிலம் மட்டுமே ஆட்சிமொழியாகத் தொடர்ந்து இருந்து வருதல் வேண்டும் என்றும் ஆட்சிமொழி பற்றி அரசமைப்புச் சட்டத்தில் உள்ள அத்தியாயத்தை தக்கவாறு திருத்த வேண்டும் என்றும் இந்த மன்றம் 1968 சனவரித் திங்கள் 23 ஆம் நாள் தீர்மானம் நிறைவேற்றியது.

தற்போதைய முதலமைச்சர் டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள், காலஞ்சென்ற டாக்டர் அண்ணா அவர்களால் தெளிவுற உரைக்கப்பட்ட இருமொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதுதான் இந்த அரசின் உறுதியான கொள்கை என்றும், இந்தக் கொள்கை தமிழ்நாட்டு மக்களின் விருப்பங்களை முழுமையாக எடுத்துரைப்பதோடு, அவற்றை முழுமையாகப் பிரதிபலித்து நிற்கின்றது என்றும் ஆளுநரின் உரை வாயிலாக, 1977 சூலைத் திங்கள் 7 ஆம் நாள் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

மேலும், சர்க்காரியா கமிஷனுக்கு 1985 டிசம்பர் திங்களில் இந்த அரசு அளித்த அறிக்கையில், ஆங்கிலத்தை அரசமைப்பின் எட்டாவது இணைப்புப் பட்டியலில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும், எட்டாவது இணைப்புப் பட்டியலில் உள்ள எல்லா மொழிகளுமே இணையத்தில் (Union) ஆட்சிமொழிகளாக விளம்பப்பட வேண்டும் என்றும் அத்தகைய முடிவொன்று எடுக்கப்படும் வரையிலும், ஆங்கிலமே இணையத்தின் ஆட்சி மொழியாகத் தொடர்ந்து பயன்படுத்திவர வேண்டும் என்றும் இந்த அரசு கருத்து தெரிவித்துள்ளது.

அவ்வப்போது, இந்தி பேசாத மக்கள்மீது நேரடியாகவோ, மறைமுகமாகவோ, இந்தியைத் திணிப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவது, இந்தி பேசாத மக்களுக்குப் பெருங் கவலையை ஏற்படுத்தி வருகின்றது. பொதுவாக இந்தி பேசாத மக்களும் குறிப்பாக தமிழ்நாட்டு மக்களும், காலஞ்சென்ற பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களால் தரப்பட்டு, காலஞ் சென்ற திருமதி இந்திராகாந்தி அவர்களாலும், தற்போதைய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களாலும் மீண்டும் உறுதிப் படுத்தப்பட்டுள்ளதுமான உறுதிமொழியானது, அதாவது இந்தி பேசாத மக்கள் மாற்றமொன்றை விரும்பாத வரையிலும் ஆங்கிலமே இணையத்தின் ஆட்சிமொழியாகத்தொடர்ந்து இருந்துவரும் என்கின்ற உறுதிமொழியை அரசமைப்புச் சட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று மீண்டும் மீண்டும் வற்புறுத்தி வந்திருக்கின்றனர். மையச் சட்டம் எண். 1/1968-இனால் திருத்தப்பட்ட

1986 நவம்பர் 13]

ஆட்சிமொழிகள் சட்டத்தின் வகை முறைகள் கிவறும் சட்ட ரீதியான தன்மை வாய்ந்தவை என்பதால், நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையினால் நிறைவேற்றப்படும் ஒரு சட்டத்தினால் மட்டுமேகூட, இந்த வகைமுறைகளை எந்தச் சமயத்திலும் மாற்றியமைத்துக்கொள்ள முடியும் அல்லது நீக்கற (ரத்து) செய்துவிட முடியும். எனவே, காலஞ்சென்ற பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களால் அளிக்கப்பட்டு, காலஞ் சென்ற திருமதி இந்திரா காந்தி அவர்களாலும், தற்போதைய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களாலும் உறுதிப்படுத்தப் பட்டுள்ள உறுதிமொழிக்கு அரசமைப்பு ரீதியான ஓர் அங்கீ காரத்தை அளிப்பதன் மூலமாக, ஆங்கில மொழியைத் தொடர்ந்து பயன்படுத்துவதற்குப் பெரிய அளவில் பாதுகாப்பினை உறுதிப் படுத்திக் கொள்வது தேவையானதாக இருக்கிறது. அத்தகைய ஓர் அரசமைப்புச் சட்டத் திருத்தம்தான், இந்தி பேசாத மக்களின் மனத்தில் எழுந்துள்ள உண்மையான அச்ச உணர்வு களையும் கவலைகளையும் நீக்குவதோடு, இந்தித் திணிப்பின் காரணமாக அவ்வப்போது எழுகின்ற குழப்பம், சீர்குலைவு மற்றும் கடுமையான சட்டம்—ஒழுங்கு சூழ்நிலைகள் ஆகியவற்றை தவிர்க்கும்.

அரசமைப்புச் சட்டத்தின் எட்டாவது இணைப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளவையும் சேர்க்கக் கருதப்பட்டுள்ளவையுமான எல்லா மொழிகளையுமே இணையத்தின ஆட்சிமொழிகளாக அங்கீகரிக்கும்வரை, ஆங்கில மொழியை மட்டுமே இணையத்து ஆட்சிமொழியாகத் தொடர்ந்து பயன்படுத்தி வருவது பற்றி அரசமைப்பு ரீதியான உத்தரவாதம் கொடுப்பதற்காக, ஆட்சி மொழி தொடர்பான அரசமைப்புச் சட்டம் XVII—ம் பகுதியை உடனடியாகவும், அவசியமாகவும் திருத்தி அமைத்திட மத்திய அரசு முன்வரவேண்டும் என்று இந்த மன்றம் தீர்மானிக்கிறது.''

அரசினர் தனித் தீர்மானம், திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை, (14—11—1986) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 12-15 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.